உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-உ.] குரோதி௵ ஐப்பசி௴ [பகுதி-கஉ.

புகழேந்தியொட்டக்கூத்தர்.

இப்பெருந்தகையாளர்இருவரும், முற்காலத்தே கபிலபரணர் எனப் பெயர்சிறந்த நல்லிசைப்புலமைத் தொல்லோரோடு ஒருவா ளுப்ப, இடைக்காலத்தே வேத்தவையேத்த விளங்கிவீற்றிருந்த கூர்த்த அறிவிற் சீர்த்தகல்வியர் ஆவர். இவ்விருவரும் தங்களிலே வாதுசெய்தார்கள் என்பவாகலாற் புகழேந்தியொட்டக்கூத்தரென இதரேதரத்தொகையாக இணைத்துவழங்கப்படுவர். இது கபிலபரணர் என வழங்கற்கும் ஒக்கும். வீரசோழியவுரைகாரர் பெருந்தேவர் என்பார் "கபிலபரணர் தங்களிலே வாதுசெய்தார்களென இயைபு தோற்றி நின்றமையால் இதரேதரத் தொகையாயிற்று" (தொகைப்படலம்-எ) எனக்கூறியவாற்றான் இதனுண்மையுணர்க. இப்புலவர் பெருமக்களது காலம் வரலாறு முதலியன பல்வேறு வகையான் வழங்கப்படுவனவாதலின் அவற்றதுண்மை காணவேண்டிப் பண்டைத்தண்டமிழ் நூல்களையே பெருந்துணையாக்கொண்டு ஆராய்ந்தமட்டிற் றெளிந்தனசிலவே ஈண்டுத்தந்துரைக்கப்படுவன.*

இனி, இப்புகழேந்தியொட்டக்கூத்தர் பாடல்கள் சிலவற்றிற் 'குலோத்துங்கன்' எனப்படுஞ் சோழவரசன் பெயர் பயின்று வருதலால் இவர்கள்காலம் குலோத்துங்கசோழன் காலமாகுமெனக் கருதுமிடத்துச், சோழமன்னருட்பலர் 'குலோத்துங்கன்' என்னும்

---

* இவ்வாராய்ச்சிக்கு நல்லுசாத்துணையாயமர்ந்த "செந்தமிழ்" உதவிப்பத்திராசிரியரும், என்னருமையம்மான்சேயும் ஆகிய வித்துவான் மு. இராகவையங்காரவர்கள் பெருநன்றி என்னால் மறக்கற்பாலதன்று.

பெயருடையவராகத் தெரியலாகும். அப்பலருள் ஒருவன் விசயாலயன் பேரனும் ஆதித்தசோழன் மகனுமாகிப், பரகேசரிவன்மன், சங்கிராமராகவன், பராந்தகன், வீரநாராயணன் எனப்பலபெயர்களாற் சிறந்து விளங்கிய குலோத்துங்கன் என்பான். மற்றொருவன் கோப்பரகேசரிவன்மன் இராசேந்திரசோழன் எனப்பெயர் சிறந்த கங்கைகொண்டசோழன் மகண்மகனும், சளுக்குவேந்தனாகிய விண்டுவருத்தனன்மகனும்ஆகி, உபயகுலோத்தமன் என விளங்கிய அபயனாகிய குலோத்துங்கன்ஆவன். வேறொருவன் மேற்கூறிய உபயகுலோத்தமனாகிய அபயன்பேரனும் விக்கிரமசோழன் மகனும் ஆகிய குமார குலோத்துங்கன் ஆவன். இன்னும் ஒருவன் இச்சோழர் வழியிற் சங்கமன் எனப்பெயரிய சோழற்குமகனாய்ச்சங்கரசோழனுடன்பிறந்த குமாரமகீதரனெனப்பெயரியகுமாரகுலோத்துங்கன் ஆவன். ஈண்டெடுத்துக்காட்டிய குலோத்துங்கன் எனப்பெயரிய சோழவரசர்பலருள் இவ்விருபெரும்புலவர்களும் யாவர்காலத்தவர்கள் என்பது நன்காராயவேண்டுவது இங்ஙனம் இன்றியமையாதது ஆகும்.

இப்புலவர்கள் ஆங்காங்குப் பாடிய பாடல்கள் பலவற்றுள் குலோத்துங்கன் என்னும் பெயரேயல்லாமல் விக்கிரமசோழன், அபயன், உத்துங்கன், சயதுங்கன், கண்டன், மானாபரணன், அகளங்கன் என்பன முதலாகச் சோழர் சிறப்புப்பெயரும் பொதுப்பெயரும் பலவாகப் பயில்வன. இவ்வாறு மேலெடுத்தோதப்படும் தமிழ் நாவலர்சரிதைச் செய்யுட்களானும் விக்கிரமசோழனுலாவடிகளானும் உணர்க. இப்பலபெயர்களுட் குலோத்துங்கன் என்பது முதற்கண் ஆதித்தன் மகனாகிய வீரநாராயணசோழனுக்கு வழங்கி அவற்குப்பின்பு நெடுங்காலம் கழித்து அபயன் முதலாகப் பலர்க்கும் வழங்கியதாகலின் அது பொதுப்பெயர்போல்வது. அபயன் என்பது முதற்கண் உபயகுலோத்தமனுக்கு வழங்கி அவன் வழித்தோன்றிய விக்கிரமன் முதலாகப் பலர்க்கும் வழங்கியதாகலின் அதுவும் பொதுப்பெயர்போல்வது. கண்டன், மானாபரணன், அகளங்கன் என்பன சோழர் பலர்க்கும் வழங்கும் பொதுப்பெயர்களாம். உத்துங்கன், துங்கன், சயதுங்கன் என்பனவும் குலோத்துங்கனினின்று எடுத்தாண்டபெயர்களாய்ப் பலர்க்கும் வழங்குவனவேயாம். இவ்

வழக்கங்களை இச்சோழர் பாடல்களில் ஆங்காங்குக் கண்டுகொள்க. இனி இப்புலவர்கள் பாடலுட் பயின்ற விக்கிரமசோழன் என்னும் பெயரொன்றே மேலெடுத்துக்காட்டிய பலர்க்குச்சிறந்தபெயர் பொதுப்பெயர்போலாது ஒருகாலத்து ஒருவற்கே தனியே வழங்கிய இயற்பெயராய் அறியப்படுதலானும், அவ்விக்கிரமசோழன் பெயராற் பல பழைய சாதனங்கள் உளவாதலானும், விக்கிரம சோழனென்னும் இயற்பெயராற்சிறந்தானொருவன் சோழர்பரம்பரையிற்றோன்றி யரசாண்டான் என்பது நன்கறியத்தக்கதாகும். இவ்விக்கிரமசோழன் என்னும் பெயர் குலோத்துங்கனென்னும் பெயர்போலச் சோழர் பரம்பரையினராய்ப் பலகாலத்தவராகிய பலர்க்கு வழங்கப்படாமையும் தனியே ஒருகாலத்தொருவற்கே வழங்கப்படுதலும் பழைய சாதனங்களானும் நூல்களானும் தெளிந்துகொள்க. இங்ஙனம் ஒருவற்கே உரியபெயரும் பலர்க்குரியதோர் பெயரும் ஒருவர் பாடலுட் பயின்றவிடத்து அப்பலர்க்குரிய பெயர்பற்றி அவருடைய காலத்தை ஆராயாது விடுத்து அவ்வொருவற்குரிய பெயர்பற்றிக் காலவரையறை செய்யப்புகுதலே இயைபுடைத்தாமென்பது எளிதிலுணரத்தக்கது. ஆதலால் இவர்கள் பாடலுட்பயின்ற விக்கிரம சோழன் என்னும் பெயர்பற்றியே இவர்கள் காலங்காணத்தகும். இவ்வாறு புகாமற் குலோத்துங்கன் என்னும் பெயர்பற்றிப் புகிற் பெரிது மிடர்ப்படும்; என்னை? குலோத்துங்கன் என்னும் பெயரொன்றே கொண்டு ஆதித்தன் மகனாகிய வீரநாராயணனென்னுங் குலோத்துங்கன் காலம் இப்புலவர்கள்காலமாம் எனக்கூறுமிடத்து, இப்புலவர்கள் விக்கிரமனைப்பாடினார்கள் என்பது மேல் நன்கு தெரியப்படுமாதலாலும், வீரநாராயண குலோத்துங்கன் கி-பி 900-முதல், 940-வரை அரசாண்டவன் எனவும் விக்கிரமசோழன் கி-பி 1118-முதல் கி பி 1132-வரை அரசாண்டவன் எனவும் தெரிதலாலும் இவர்கள் மேற்கூறிய வீரநாராயண குலோத்துங்கன் காலமுதல் விக்கிரமன் காலம்வரை இருந்தாராவரெனப்பட்டுச் சிறிதேறக்குறைய இருநூறாண்டு உயிர் வாழ்ந்தனர்கள் எனப்படும் ஆகலான்.

இனி விக்கிரம சோழன் றந்தையாகிய அபய குலோத்துங்கன் காலமே இவர்கள்காலமாம்: அக்காலத்தவர்கள் விக்கிரமனைப்பாடுதற்கும் இயலுமாதலாலெனிற் கூறுவேன்—இச்சங்கத்திற்கு அரிதி

ற்கிடைத்த "சங்கரசோழனுலா" என்னும் அரியபழைய இனிய தமிழ்நூன்முதற்கண் சங்கரசோழனுக்கு முற்பட்ட சோழராசபாரம்பரியம் எடுத்தோதிய விடத்து,

" * * * கூடலா
ரும்ப ரணிகொள்ளக் கொள்வித் தொருகலிங்க
வெம்பரணி கொண்ட விறலோனுஞ்—செம்பதத்துக்
கூடிய 'சீர்தந்த' வென்றெடுத்த கூத்தனுலாச்
சூடிய விக்கிரம சோழனும்—பாடிய
வெள்ளைக் கலியுலா மாலையோடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றோனு ந்—தெள்ளித்தம்
மூன்னு யகரினவன் மூதுலாக் கண்ணிதோறும்
பொன்னு யிரஞ்சொரிந்த பூபதியு—மென்னுமிவர்
மாசக்ர மேரு வலஞ்சென் மகரசல
பூசக்ர மேழும் புரந்ததற்பின்
* * * * *
சங்கமன் றொல்லைத் தவம்போல........
* * * * *
வல்லம ணுதி மனுவினு மேதக்க
நல்லம னென்கின்ற நாயகற்கும்........
* * * * *
பைத்த பொருபுலியைப் பல்கோடி வேந்தணிய
வைத்த குமார மகீதரற்கும்—மெய்த்துணையாய்த்
தோன்றிய சங்கர ராசன் சுரராசன்."

எனவும், அந்நாலிறுதியில்:—

" பருவத் தெழுவகைமைப் பாவையரெல் லாருந்
தெருவத் தினைய தினைப்பப்—பரணிக்
கவியாற் சயங்கொண்டான் கட்டொப்பக் கொண்டான்
குவியாக் கரத்தரசு கொண்டான்—கவிகை
நிலாக்கொண்டான் கூத்த னிகழ்த்த வொருமன்
றுலாக்கொண்டான் பொந்தா னுலா."

எனவும் வருவனவற்றாற் பரணிகொண்ட விறலோன் பின்னே கூத்தனுலாச்சூடிய விக்கிரமசோழனும், கூத்தன் உலாமாலையோடு பிள்ளைத்தமிழ்மாலை பெற்ற சோழனும், கூத்தனுலாக் கண்ணிதோறும் பொன்னுயிரஞ்சொரிந்தபூபதியும் எனமூவர் கூறப்படுதலுடன்,

ஒட்டக்கூத்தர் மூன்றுலாப்பாடினரென்பதுங் கூறப்பட்டது. இனிப் பரணிகொண்டவிறலோன் அபயனுகிய உபயகுலோத்தமன் என்பது பலருமறிவர். அவ்வபயன்மகன் விக்கிரமசோழன் என்பது ஒட்டக்கூத்தர் 'சீர்தந்த தாமரையாள்கேள்வன்' என எடுத்த விக்கிரம சோழனுலாவின்கண்,

" ... ... கூடல
சங்கமத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த
துங்கமத யானை துணித்தோனு—மங்கவன்பின்
காவல் புரிந்தவனி காத்தோனு மென்றிவர்கள்
பூவலய முற்றும் புரந்ததற்பின்—மேவலர்தஞ்
சேலைத் துரந்து சிலையைத் தடிந்திருகாற்
சாலைக் களமறுத்த தண்டினன்—மேலைக்
கடல்கொண்டு கொங்கணமுங் கன்னடமுங் கைக்கொண்
டடல்கொண்ட மாராட் டரசை—யுடலை
யிறக்கி வடவரையே யெல்லையாய்த் தொல்லை
மறக்கலியுஞ் சுங்கமு மாற்றி—யறத்திகிரி
வாரித் திகிரி வலமாக வந்தளிக்கு
மாரிற் பொலிதோ ளபயற்குப் பார்விளங்கத்
தோன்றியகோன் விக்கிரம சோழன்."

எனக்கூறியதனுனும் பழையசாதனங்களானும்நன்கறியலாகும். இவ்விக்கிரமசோழன் மகன் குலோத்துங்கன் என்னும் பெயரே பூண்டவன் என்பதும் அக்குலோத்துங்கன்மகன் இராஜராஜனென்னும் பெயரினுன் என்பதும் புராதனசாதனஆராய்ச்சியுடையார் பலரும்அறிந்தனவேயாம். சங்கரசோழனுலாவாற் கூத்தரான் உலாப்பாடப்பட்டோர் விக்கிரமசோழனும் அவன்பின்அரசாண்ட சோழரிருவருமே என்பது நன்குதெளியப்பட்டது. விக்கிரமசோழன்றந்தையாகிய அபயன் சயங்கொண்டார்பாடிய பரணிகொண்டான் என்பது தெரிவதன்றி, அவ்வபயன் கூத்தர்பாடல் கொண்டான் என்பதொன்றும் அச்சங்கரசோழனுலாவாற்றெரியலாவதில்லை. ஆதலாற் சங்கரசோழனுலாவிற் கூறியதற்கியையக்கொள்ளுமிடத்து விக்கிரமசோழனும், அவன் மகன் குலோத்துங்கசோழனும், அவன் மகன் இராசராசசோழனுமே கூத்தர்பாடல்கொண்டனராவர் எனவுணர்க. அபயனும் கூத்தர்பாடல்கொண்டவனுயின் இக்கூத்தர் நான்கரசர் காலத்

திருந்தாரெனப்பட்டு இவரதாயுட்காலம் வரம்பின்றியோடுமென்க. சங்கரசோழனுலாவாற் கூத்தர் விக்கிரமசோழன்மகனாகிய குலோத்துங்கனைப்பாடியுள்ளாரென்பதறியப்படுதலால், இக்கூத்தர் பாடலுட்பயின்ற குலோத்துங்கன் என்னும்பெயரும் அவ்விக்கிரமசோழன்மகன் குலோத்துங்கனையேகுறிப்பதாமென்பதெளிதிற்கொள்ளத்தகும். குலோத்துங்கனுலா என்னும் நூலும் அவனையேபற்றியதாகும். அவன், உலாவன்றிப் பிள்ளைத்தமிழ்மாலையும் கூத்தர்பாற்பெற்றானென்பது தெளியப்படுதலால், அவனிளம்பிராயந்தொட்டுக் கூத்தர் அவன்பாற் சிறப்புற்றிருந்தனரென்பதூகிக்கப்படும். குலோத்துங்கன்கோவையென்பது இச்சோழனையே பற்றியதாம். அதன்கட் பலவிடங்களிலும் 'குமாரகுலோத்துங்கன்' எனவருதலையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க.

இனிப் 'பாடுங் கவிப்பெருமானொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்-சூடுங் குலோத்துங்க சோழனென் றேயெனைச் சொல்லுவரே' என்றுபாடிய சோழனும் அக்குமாரகுலோத்துங்கனேயாவன். கூத்தர் தன்தந்தைக்கு உறுதுணையாய் விளங்கிய சிறப்புப்பற்றியும், தான் அவர்பாற் கல்விபயின்றமைபற்றியும் இளையனான அச்சோழன் அக்கூத்தரைப் பராஅய்ப் பாடினனாவன். தமிழ்நாவலர்சரிதைக்கண் "சரசுவதி தம்பலங்கொடுக்கக் கவிதையுண்டாகிய கூத்தமுதலியார் * அரும்பகைத்தோள்ளாயிரம் பாடும்போது விக்கிரமசோழன் கேட்டு ஒருகவியை ஒட்டச்சொல்லென்று சொன்னபோது பாடியது" என்னுந் தலைப்பின்கீழ்,

கடித்தது நச்சர வுச்சியி னுச்சி மதிலிலங்கை
பிடித்தது வென்ற திருபது தோள்பதி னெண்பகலே
முடித்தது பாரதம் வீரப் புலிவைப்ப மூரிச்செண்டா
லடித்தது பொற்கிரி விக்ரமசோழ வகளங்கனே.

என்றோர் செய்யுள்காணப்படுகின்றது. இச்செய்யுளைத் தலைக்குறிப்புடன் நோக்கின், விக்கிரமசோழன் அரசுபுரிகின்றகாலத்தே

---

* இது முத்தொள்ளாயிரம், வச்சத்தொள்ளாயிரம், சயங்கொண்டார் செட்டிகண்மேற் பாடிய இசையாயிரம் என்பனபோல்வதொன்றாம். இலக்கணவிளக்கப்பாட்டியல் அஅ-ஆம் சூத்திரவுரைக்கண் 'அரும்பைத்தொள்ளாயிரம்' என ஒருநூல் காட்டப்பட்டது இதுவேபோலும்.

தான் கூத்தர் வரகவியாய்ப் போந்தனரென்பது புலனும். அவ்விக்கிரமன்பின் இரண்டுதலைமுறையரசரைப் பாடினர் என்பதனுன், இப்புலவர்க்குக் கவிதையுண்டாகியகாலம் விக்கிரமசோழனுடைய பிற்காலமேயாம்; அஃதே இக்கூத்தரது இளமைக்காலமாமென்பது உய்த்துணரலாகும். இதனுல், கூத்தர் விக்கிரமசோழன் அரசெய்தியபின்னிலையினும், அவன்மகன் குமாரகுலோத்துங்கன் காலமுழுதும், அவன்மகன் இராசராசன் இளமையினும் இருந்தனராவர் என்றலே மேலுரைத்தவற்ருேடு பொருந்துவதாம். இராசராசனுலா என்பது கூத்தர் குமாரகுலோத்துங்கன் மகனைப் பாடியதாகுமென்பது அறியத்தக்கது. தமிழ்நாவலர்சரிதைக்கண், புகழேந்தியார் "தேவி ஊடலாய்க்கதவடைத்தபோது பாடியது" என்னுந் தலைப்பின்கீழ்

"தாபங் கமழும்பைங் கோதையன் விக்ரம சோழன்மன்னர்
தீபன் புறங்கடை வந்துநின் ருனின் றிருப்புருவச்
சாபங் குனிய விழிசிவப் பத்தலை சாய்த்துநின்ற
கோபந் தணியன்ன மேயெளி தோநங் குடிபிறப்பே."

என ஓர் செய்யுள் வரையப் பட்டுள்ளது. இதனுற் புகழேந்தியாரும் விக்கிரமசோழனைப் பாடினுரென்பது அறியத்தகும். புகழேந்தியார் ஒட்டக்கூத்தருடைய நீண்டஆயுட்காலமுற்றும் இருந்தனரென்பது நன்குபுலனுகாவிடினும், அக்கூத்தர் குமாரகுலோத்துங்கன்பாற் சிறப்புவீற்றிருந்த காலத்தளவும் அப்புகழேந்தியாரும் இருந்தனராவர் என்பது, அக்குமாரகுலோத்துங்கன் காலத்தே இப்புலவர்களிருவரும் தத்தம் புலமைமேம்பாடுணர, ஒரே பொருள்பற்றிப் பாடிய பாடல்கள் சிலவற்ருன் ஆய்ந்துணரத்தகும். இப்புலவர்கள் பாட்டுள், அபயன் முதலாகச் சிலபழையபெயர்களும் பயில்வன எனின்; அவை அக்குலத்து முன்னேர் சீர்த்தியைப் பின்னேர்க்குப் புனைந்துரைத்தாங்கு, அம்முன்னேர் பெயர்களையே பின்னேர்க்கும் கூறியனவேயாகுமென்க. இவ்வழக்குப் பண்டைத்தண்டமிழ் நூல் எல்லாவற்றும் பயின்றதே. இத்துணையுங் கூறியவாற்ருன், இப்புலவர்கள் இன்ன அரசர்கள் காலத்தவர்களென்பது நன்குணரப்படும்.

இவர்களுட் புகழேந்தியார் தொண்டைநாட்டுள்ள களந்தை என்னும் ஊரினராவரென்பது 'மாலார்களந்தைப் புகழேந்தியுந்

தொண்டை மண்டலமே' எனவும், 'ஐயன்களந்தைப்புகழேந்தியாண்டான்' எனவும், 'காரார்களந்தைப்புகழேந்தி' எனவும் தொண்டை மண்டல சதகத்துப் பலவிடத்துங்கூறப்படுதலாற் றெரிகின்றது. இவர்பாடிய நளவெண்பா என்னுநூலில் முரணை என்னு நகர்க்கணிருந்த சந்திரன் சுவர்க்கி என்னுஞ் சிற்றரசனொருவன் புகழப்படுகின்றான். அதனன், அவன் இவரைப் பெரிதும் ஆதரித்தவனென்பது அறியப்படுகின்றது. இம்முரணைநகர் உறையூர்ப்புறத்து மள்ளுவநாட்டின் கண்ணது என்ப. இவர் தம்முடைய நளவெண்பாவின் மூன்றுகாண்ட முதற்கண்ணும் திருமாலை வாழ்த்திப்புகுதலானும், நூலிடையில், நளனைக்கலிதொடரும்போது 'நாராயணாய நமவென்றவனடியிற், சேராரை வெந்துயரஞ் சேர்ந்தாற்போல்...... சேர்ந்தான் கலி' எனவும், அவனைக்கலி நீங்கும்போது 'மிக்கோனுலகளந்த மெய்யடியே சார்வாகப், புக்கோரருவினைபோற் போயிற்றே' எனவும் எடுத்துரைத்தவாற்றானும் சமயக்கோட்பாட்டில் வைணவர் ஆவர் என அறியப்படுகின்றனர். தொண்டைமண்டலசதகத்து

காரார் களந்தைப் புகழேந்தி சொன்ன கலம்பகத்தி
னேராது நையும் படியென்ற பாடலி னேரியர்கோன்
சீராகச் செப்பிய நற்பாடல் கொண்டவன் செஞ்சியர்கோன்
மாராபி ராமனங் கொற்றந்தை யூர்தொண்டை மண்டலமே.

எனவரும் பாட்டான் இவர் செஞ்சியர்கோன் கொற்றந்தையைப் புகழ்ந்து கலம்பகநூலொன்று பாடினரென்பது புலனாகின்றது. ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழனுலாவின்கண், அச்சோழன்-படைத்தலைவர், அமைச்சர், சிற்றரசர், மண்டலிகர் எனப்பலர் இருமருங்கும் மொய்த்தீண்டத் திருவுலாப்போந்தான் எனக்கூறுமிடத்து, அப்படைத்தலைவர் முதலியோரை வரிசைப்பட வைத்துரைக்கின்றனர்; அவர்;—கலிங்கம் வென்ற *தொண்டைமான், முனையர்கோன், சோழகோன், மறையோன் கண்ணன், வாணன், காலிங்கர்கோன், செஞ்சியர்கோன் காடவன், வேணாடர் வேந்து, அனந்த பாலன், வத்தவன், சேதிநாடன், ஆனைகாவலன், அதிசன், வல்லவன், திரி

* இவன்முதலிய சிலர் விக்கிரமசோழன்தந்தைகாலத்தும் பெருஞ்சிறப்பெய்தியோராவர்.

கர்த்தன், மல்லவன், கோசலன், மாகதன், மாளுவன், வில்லவன், கேரளன், மீனவன், பல்லவன் என இவராவர். இவருட் புகழேந்தியாராற் கலம்பகம் பாடப்பெற்றோன் செஞ்சியர்கோன் காடவன் என்பானுவன். இது புகழேந்தியாரும், செஞ்சியர்கோனும், விக்கிரமசோழனும் ஒருகாலத்தவராதலால், ஆய்ந்தறியத்தகும்.

> ... ... கடியரணச்
> செம்பொற் பதணச் செறியிஞ்சிச் செஞ்சியர்கோன்
> கம்பக் களியானைக் காடவனும் ... ...

என அவ்வுலாவிற் கூறப்படுதலால், இவன் செஞ்சிக்கண்ணே உயர்ந்த வலிய அரணொன்றமைத்து வாழ்ந்தோனென்பதும் காடவர்குடியினன் என்பதும் அறியப்படுவன. காடவர் என்பது பல்லவர்வகுப்பினர்க்கு ஒருகுடிச்சிறப்புப்பெயர். கொற்றந்தையென்பது அவன் இயற்பெயர்போலும். புகழேந்தியார் அக்கலம்பகத்து,

> "நையும் படியே நாங்கோற்ற நங்கோன் செஞ்சி வரைமீதே
> யையம் பெறுநுண் ணிடைமடவா யகிலின் றூப முகிலன்று
> பெய்யுந் துளியோ மழையன்று பிரசத் துளியே பிழையாது
> வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டாரே.

எனப்பாடுதலாற் செஞ்சியர்கோனுக்குக் கொற்றன் என்பதும் பெயராமெனத் தெரிகின்றது.

இனி, இவரியற்றிய நளவெண்பாவின்கணுள்ள சிலபாடல்களைக் குறித்து ஒட்டக்கூத்தர் மாற்சரியத்தாற் சிலவாதம் நிகழ்த்தினரென்ப. ஒரேகாலத்து ஒருபொருள்பற்றியே இவ்விரு[...]ரும்புலவரும் பாடலுற்ற சில செய்யுட்களால், இவர்கட்குள் க[...]யானு* வீ[...] பற்றிப் பகைமையுளதாமென்று கருதப்படும். [...]துபற்றி[...] க்கு இன்பம்பயக்கும் அரியபெரியவாதம் நிகழ்[...]றொ[...] தங்கள் பெருமைக்கு ஒவ்வாத இழிதக்கவா[...] கூறுதல் சிறிதுமியையாதாம். அன்றியுப்[...] கக்கொண்ட 'மல்லிகையே வெண்சங்கா[...] ண்பாக்கருத்து,

---

* "கல்வி தறுக ணிசைமை கொ[...] நான்கே" (மெய்ப்பாட்டியல்-கூ) எ[...] வீரம்.

"எல்லியம்போ திருஞ்சிறைவண் டேம்பெருமான் குணம்பாடி
மல்லிகைவெண் சங்கூது மதிலரங்க மென்பதுவே."

எனப்பெரியாழ்வார் அருளிச்செயலினும் (திருமொழி-அ-௮) "மல்லிகைப் போதில்வெண் சங்கம்வண்டூதே" எனத் திருவாதவூரடிகள் திருச்சிற்றம்பலக்கோவை(௩௬௪)யினும் செவ்வனம் பயின்றதாதல் கண்டுகொள்க. இவர் வெண்பாப்பாடுதலிற் பாரதம்பாடிய பெருந்தேவனாரை ஒருபுடையானொப்பரென்பது கொள்ளத்தகும். இவரது நளவெண்பாவிற்கண்ட அரியஇனியபாடல்கள்சில 'நளன்கதை' என்னும் பெயராற் புறத்திரட்டு என்னும் நூலின்கட் கோக்கப்பட்டுள்ளன. தமிழ்நாவலர்சரிதையிற் றொகுக்கப்பட்ட இப்புகழேந்தியார்பாடல் சிலவற்றால், இவர், விக்கிரமசோழன்பால் ஊடலாய்க் கோப்பெருந்தேவி கதவடைத்தபோது அக்கதவு திறத்தல்வேண்டி அத்தேவியாரைப் பாடினரெனவும், அவன் மகன் குமாரகுலோத்துங்கன் அரசுரிமையெய்தித் துலாபுருடதானம் பண்ணும்போது ஆண்டுடனிருந்து அவனைப்பாடினரெனவும், அரசனுந் தேவியும் சூதாடுமிடத்துத் தாமுமிருந்து, அச்சூதிற் றேவியை உயர்த்திப்பாடினரெனவும் விக்கிரமசோழனுக்கும் அவன் மகனுக்கும் ஒட்டக்கூத்தர்போல, இவரும் ஒருகண்ணாய்ச் சிறந்தனரெனவும், பிறவும் அறியப்படும்.

புகழேந்தியார், தேவி ஊடலாற் கதவடைத்தபோது பாடியது.

தூபங்கமழும் ... ... சயதுங்கனே.

இழையொன் றிரண்டு வகிர்செய்த வற்றொன் றிணையுமிடை
குழையொ[illegible]ன் றிரண்டுகட் கொம்பனை யாய்கொண்ட கோபந்தவிர்
மழையொ[illegible] றிரண்டுகைம் மான பரன்கண்டன் வாயில்வந்தாற்
[illegible]ழையொ[illegible] றிரண்டு பொறுப்பதன் றோகடன் பேதையர்க்கே.

[illegible]ால்வி வேண்டுவ தில்லை நளினமலர்த்
[illegible]றந்து விடாய்செம்பொன் மாரிபொழி
[illegible]குலோத்துங்கன் வாயில்வந்தாற்
[illegible]ம்மல ராகிய தாமரையே.

[illegible]டதானம் பண்ணிய போது பாடியது.

[illegible]டு மேருப் புகினு
[illegible]ாதாற்—றிருந்து

மறைபுக்க சொல்லபயா வன்புறவுக் காக
நிறைபுக்க தெவ்வாறு நீ.

புகழேந்தியார் சூதிற் றேவியை உயர்த்திப் பாடியது.

பழியும் புகழு மெவர்க்குமுண் டாமிந்தப் பாரிலுனக்
கழியுஞ் சிலையுங் கயலுமன் றேவக ளங்கதுங்க
மொழியும் பொழுதெங்கள் *பெண்சக்ர வர்த்தி முகத்திரண்டு
விழியும் புருவமு மாகியிப் போதுன்னை வெல்கின்றவே.

இனி, ஒட்டக்கூத்தர், புவிச்சக்கரவர்த்திகளாய் விளங்கிய விக்ரமன் முதலிய சோழர்மூவர்க்குச் சிறந்த கவிச்சக்கரவர்த்தியாய் விளங்கி வீற்றிருந்தவர். இவர்காலத்து இவரினும் மேம்பட்டு அவ்வரசர்பாற் பெருஞ்சிறப்பெய்தியோர் வேறொருவரும் இலர். விக்கிரம சோழன் இறக்கவும், அவனது அருமை மகனாகிய குமார குலோத்துங்கனுக்குப் பல்லாற்றானும் மேம்பட்ட பெருந்துணையாய்ச் சிறந்து, தம்சொல் வழியே அவனை இயக்கிய கல்வி வீறுடையார். அவனுக்குப் பின்னும், அவன் மகனாகிய இராசராசனாலும் அத்தகைச் சிறப்பே பெற்றுச் சில காலம் வாழ்ந்தனர். இவர் பாடிய ஈட்டியெழுபதுஎன்னு நூலால், இவர் செங்குந்தர் (முதலியர்) மரபினரெனவும், கலைமகள் அருள்பெற்ற வரகவியாரெனவும், செங்குந்தரது அற்றதலைகளாலாகிய சிங்காதனத் தமர்ந்து அந்நூலைப் பாடின ரெனவும், பின் அற்றதலைகள் ஒட்டப்பாடினரெனவும், அது பற்றியே ஒட்டக்கூத்தர் எனப்பெயர் சிறந்தாரெனவும் கூறுப. விக்கிரம சோழன் திருமுன்னர் இவர் முதன்முதல் எய்[illegible]ய போது, அவன் இவரது அரும்பகைத் தொள்ளாயிரத்து ஒ[illegible]ய்யுளைத்த[illegible]க்கு ஒட்டப்பாடச் சொன்னானெனவும், இவர் அ[illegible]வரசனை [illegible] பாடிய போது, அவ்வுலாவிற் கண்ணியை இணைத்[illegible] வாக ஒட்டப்பாடச் சொன்னானெனவும் அறி[illegible] றே இவர் பலமுறை ஒட்டப்பாடியசிறப்பால்[illegible] ரோ என ஊகிக்கப்படுகின்றார். இவர் தா[illegible] என்னும் நூற்கண்,

* 'பெய்த மலரோதிப் பெண்சக்ர[illegible] தெழுந்து' என (விக்கிரமசோழனுலா)[illegible] பெண்சக்கரவர்த்தி என வழங்கியது கா[illegible]

"வாட்கவி கொண்ட மன்னன் வளவனு மகிழ நாமே
நாட்கவி பாடுநாட்போ லிருப்பது பெரிய நாடே"

எனவும், சோழன் பாடிய 'ஆடுங்கடைமணி' என்னுஞ் செய்யுளில் 'நித்தம் நவம்பாடுங்கவிப்பெருமா னொட்டக்கூத்தன்' எனவும் வருதலான், இவர் சோழசக்கரவர்த்திகள்முன்பு நாட்கவி பாடிவந்தனரெனவும்,

"தென்னனைச் சேரனைச் சிறுமை சொல்லவு
மன்னனை வளவனை மகிழ்ந்து பாடவும்" (ஈட்டியெழுபது)

எனவருதலாற் றமிழ்மூவேந்தருட் சோழரையே உயர்த்தி மற்றையிருவரையும் இழித்துப் பாடிவந்தனரெனவும்,

"எந்தையா மம்மைபாகத் திறைவனை வணங்கி யாமே
பைந்தமிழ்ப் பரணிசெய்த பாடலோடு" (ஈட்டியெழுபது)

என்பதனாற் சிவபிரானைப் பரணியாற் பாடியுள்ளாரெனவும் தெரிகின்றன. தக்கயாகப்பரணியிறுதிக்கண் 'வாழிகவிச்சக்ர வர்த்திகூத்தனே' 'கூத்தன்கவிச்சக்ர வர்த்திவாழியே' எனவும் வருதலான் அந்நூலே இவர்பாடிய பரணி என்பதும், இவர்க்குக் கவிச்சக்கரவர்த்தி என்னுமொரு சிறப்புப்பெயரும் உளதாமென்பதும் உணர்ந்துகொள்க. சயங்கொண்டார் கலிங்கத்துப்பரணி பாடியும், செட்டிகண்மேல் 'இசையாயிரம்' பாடியும் கவிச்சக்கரவர்த்தி என்று அபயனாற் சிறப்புப்பெயர் பெற்றாற்போல, இவர், அரும்பகைத்தொள்ளாயிரம் பாடியும், தக்கயாகப் பரணிபாடியும், உலாமுதலியனபாடியும் விக்கிரமசோழன் முதலியோரால் அச்சிறப்புப்பெயர் புனையப்பெற்றனராவர். சயங்[illegible]காண்டார்க்குக் 'கவிச்சக்கரவர்த்தி' எனவோர் சிறப்[illegible]ப்பெயருண்[illegible]ம சிலப்பதிகாரத்து அடியார்க்குநல்லாருரையிற் கண் [illegible] தமிழ்நா[illegible]லர்சரிதைக்கண், 'ஒட்டக்கூத்தர் உலாப்பாடியபோ [illegible]ரியர் [illegible]நேமிநாதர் பட்டோலைபிடிக்கப் பாடியது" என்னுங்

[illegible]ன்னம்படர் தீயாமென வெருவிச்
[illegible] மறையக்கொடு திரியத்திரள் கமுகின்
[illegible]து படர்ந்தேறி நறுந்தண்
[illegible]ங்கொடி படர்காவிரி நாடா
[illegible]முடனுக வணங்கித்
[illegible]வம துயிர்காவக ளங்கா
[illegible]யதுரேசர் வணங்குங்
[illegible]ள் குழலோசை பொருளே."

என ஓர் இனிய செய்யுள் காணப்படுகின்றது. இத்தலைக்குறியாற் பேராசிரியர் எனப்படுவாரும், நேமிநாதரும் இப்புலவர் காலத்தவர்களெனத்தெரிவது. தொல்காப்பியம் குறுந்தொகை திருச்சிற்றம்பலக் கோவை என்பனவற்றுக்கு உரையியற்றியருளிய நல்லறிவுடைய தொல்லாசிரியரே * இப்பேராசிரியராவர். ஈண்டு நேமிநாதர் எனப்பட்டார் சின்னூலெனப் பெயரிய நேமிநாதமியற்றியோர் போலும். அடியார்க்கு நல்லாரால் சிலப்பதிகாரவுரைக்கண் மேற்கோள் காட்டப்பட்ட "மக்களிழந்த விடும்பையினும்" என்னுஞ்செய்யுள் (சிலப்பதிகாரம்-பதிகம்) ஒட்டக்கூத்தரியற்றிய உத்தரராமாயணத்துத் திக்குவிசயபடலத்து (கூஅ) காணப்படுதலால், அவ்வடியார்க்கு நல்லார் இப்புலவர்க்குப் பிற்பட்ட காலத்தவரென்பதுந் தெரிகின்றது. இப்புலவர் சோழவரசன்பாற் றமக்குண்டாகிய செல்வாக்கினாற் புன்கவிகளைத்தலையறுப்பித்து வந்தனரெனவும், அதுபற்றிஅக்காலத்துப் பலரால் வெறுத்துரைக்கப்பட்டனரெனவும் கூறுப. இதற்கிணையவே, தமிழ்நாவலர்சரிதைக்கண்;— "கவிகளை அறுத்தபோது, சேரனும் பாண்டியனும் பாவமென்றேலை வரவிட, இராசா வெட்ட வந்தபோது பாடியது"

அன்றையினு மின்றைக் ககன்றதோ வல்லாது
குன்றெடுத்து நீதிருத்திக் கொண்டாயோ—வென்று
மடைந்தாரைத் தாங்கு மகளங்கா நீயு
நடந்தாயோ நாலேந் தடி.

கவிகளை அறுத்தபோது புலவரெல்லாம் வேதளப் பாடியது.

பாட்டுத் தொடுக்கும் புலவோர்க்குக் கூத்தன் பயப்[...]ல்பே
தாட்டுக் கடற்புலி யஞ்சலன் றேவறுத் துக்கிடந்[...]
சூட்டுக் கதிர்க ணிலத்தடங் காமற் றெருகுத்தும[...]ர்
மேட்டுக் குவாலிடும் பொன்னிநன் னுடை [...]ண்ட

---

* பேராசிரியர் "இக்காலத்தார் எறிய மடற்[...] திணைப் பொருண்மேலுங் காமஞ்சாலா இளமை[...] ரோடுங் கூட்டியுரைக்தும் கைக்கிளைப் பொரு[...] டெனப் பொருள் கொடுந்துச் செய்யுள் செ[...] செய்தற்கும், அவை முப்பதிற்றடியினிகந்த[...] ன்றற்கும் என்னை ஒத்தெனின்;—அவ்வா[...] றிலமாயினும், இருபதின்சீர்க் கழிநெடி[...] செய்யுமாறுபோலக் காட்டலான் அ[...] ரைத்ததனேடும் ஒட்டி ஆராய்ந்துகொ[...]

கவிஞரை வெட்டவேண்டாவென்று நெற்குன்றவாணமுதலியார் பாடியது.

கோக்கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர் கோகனகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில பூவில்விண்ணோர்
காக்கண்ட செங்கைக் கவிச்சக்ர வர்த்திநின் கட்டுரையாம்
பாக்கண் டொழிவர்க ளோதமிழ் பாடிய பாவலரே. எனவருவன.

மற்றும் அத்தமிழ்நாவலர்சரிதையிலே தொகுக்கப்பட்ட இப்புலவர்பாடல்களால், இவர், விக்கிரமசோழன்பால் எய்தற்குமுன்னே வறியராயிருந்தனரெனவும், அவனைப்பாடியபின் அவனால் வரிசைபல அளிக்கப்பெற்றனரெனவும், அவன் தேவி ஊடலாய்க்கதவடைத்த போது, அத்தேவியாரைப்பாடினரெனவும், அவன்மகன் துலாபுருடதானம்பண்ணியபோதுமுதலாகப் பலகாலத்தும் அவனுடனிருந்து பற்பலகவிகள் பாடினரெனவும், தம்பாற்கற்றுப் பாடல்வல்லுநராய மாணாக்கரையுடையராயிருந்தனரெனவும், இவர் அரசனாற் கையளித்து ஏற்கும் சிறப்புடையராயிருந்தனரெனவும், அரசன் மடையனைத் தண்டஞ்செய்யப் புக்ககாலத்துப் பாடி அவனை உய்யக்கொண்டனரெனவும், அக்காலத்துத் திரிபுவனமென்னும் ஊரின்கணிருந்த சோமன் என்னும் உபகாரியொருவனால் இவர் பெரிதும் அன்புபாராட்டப்பெற்றனரெனவும், பழிகாரர்சிலர் இவரைக் கொல்லத்தொடர்ந்தபோது அச்சோமன்வாயிலிற்புக்கு உயிர்பிழைத்தனரெனவும், பிறவும் அறியப்படுகின்றன. இவற்றையெல்லாம் கீழேகாட்டப்பட்ட தமிழ்நாவலர்சரிதைப்பாடல்களான் உணர்ந்துகொள்க. இவற்றுள், இவரைப் பழிகாரர் தொடர்ந்தகதை:—ஒருகாலத்துச் செங்குந்தரிற் பலர் தம்
குலத்தைச் ப்பித்து ஒருநூல் பாடித்தருகவெனத் தம்மரபிற்கவி
ங்கரவர்த்தி கிய கூத்தரை வேண்ட, அவர், தம்மரபினைத்தாமே
புகழி அஃது அபிமானத்தாற் பொய்யேபுனைந்ததாமெ
ள்ளப்படுமோவெனக் கருதி அதற்கு உடம்படா
போது அச்செங்குந்தர், இவர்குலாபிமான மற்
ாற் செற்றங்கொண்டு, இவரைக்கொல்லற்கு
டு கூத்தர் தன்பாலன்புள்ள புவனையென்
வன் மனைக்கண் ஓடியொளித்தனர்.
க்கபுலவரைக்காத்தல்வேண்டி, தன்
துத் தன்மனையைச்சூழ்ந்த அப்பழி

காரர்பால் உய்த்து, 'இதன்கணுள்ள உங்கள் புலவனாகிய கூத்தனை நீங்கள் விரும்பியவாறு செய்மின்' எனக்கூறிவிடுப்ப, அப்பழிகாரர்கள் அப்பேழையை தனித்தவிடத்துக்கொண்டுபோய்த் திறந்துபார்த்தவளவில், தாம்கருதிய புலவரைக்காணும் சோமன் மகனாதல் கண்டு, சோமனது வண்மையைவியந்து அம்மகனைக்கொலைசெய்யாது விடுத்துச் சோமன்பால்எய்தி நிகழ்ந்ததுரைக்க, அவன் உங்கள்குலத்திற்குரியவீரத்தை இப்போதே பலருங்காணக்காட்டுதிராயின், புலவர் உங்களைப்பாடாதிரார் எனக்கூறக்கேட்டு, அவ்வமயத்தே ஆண்டுக்குழீஇயசெங்குந்தர்பலர் தங்கள்தலையரிந்து கூத்தர்க்குச்சிரச்சிங்காதனமாக இட்டனர். பின் கூத்தர் வெளிப்போந்து அத்தலைகளாலாய சிங்காதனத்தமர்ந்து தமதுகுந்தக்குலத்தைப்புகழ்ந்து "ஈட்டியெழுபது" என்னும் நூல் இயற்றினர்—என்பது. இதுவே, "பூவார்புவனையிற் சோமன்றரும்பழி போனபின்பு" எனவும்,

முத்தமி ழிராசரா சேந்த்ரன் முன்னமே
சுத்தவீ ரத்திறந் துலங்கு தற்கொரு
பொய்த்தலை கொடுத்தலிற் புகழ்பெ றுதென
மெய்த்தலை கொடுத்தன வீரக் குந்தமே.

எனவும் வரும் ஈட்டியெழுபதாற் குறித்ததாகும். இச்செய்தி நிகழ்ந்தது குமாரகுலோத்துங்கன்மகன் இராசராசன் காலமாகும்.

சோழன் வரிசையளித்து விடுத்தபோது கூத்தமுதலியார் கூறியசெப்பு.

இடுக்கட்புண்படுநிரப்புக்கொண்டுழன் றிரக்கச்சென் றவின்றெனக்[illegible]சிங்களந்
திடுக்குற்றஞ்சும்வெஞ்சினத்துச்செம்பியன்றிருக்கைப்பங்கயஞ்[illegible]க்கத்தந்
படுக்கக்கம்பளம்பதக்கக்குங்குமம்பதிக்கக்கங்கணம்பரிக்கக்கு[illegible]ங் [தன
கடுக்கக்குண்டலங்கலிக்கச்சங்கினங்கவிக்குப்பஞ்சரங்கவிக்கு[illegible]தாங்க[illegible]

இந்தவிருதுகள் யாருக்கென்றபோது கூத்தர் ப[illegible]து.

பத்துக்கொண் டனதிக்கும் பதறிப்போய் முடிய[illegible]
பைம்பொற்று ரகைசிந்தப் பகிரண்டத் தி[illegible]
மத்துக்கொண் டமுதத்தைக் கடையாழித் தி[illegible]
வடிவாகிப் புவிகைக்கொண் டருண்மா[illegible]
முத்துப்பந் தரினிற்குங் குருளைக்குஞ் [illegible]
முருகற்கும் பொதியக்கோ முனிவ[illegible]
கொத்தற்குஞ் சடிலக்கொந் தளருக்[illegible]
கூழைத்தண் டமிழர்க்கேன் கொ[illegible]

விக்கிரமசோழனுலாப்பாடியபோது ஒருகண்ணியை யோட்டிப் பாடென்றபோது கூத்தர்பாடியது.

†"கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலே—வைய
மளந்தா யகளங்கா வாலிலைமேற் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாளென் மான்"

தேவி ஊடலாய்க்கதவடைத்தபோது கூத்தர் பாடியது.

கரத்துஞ் சிரத்துங் களிக்குங் களிற்றுடைக் கண்டன்வந்தா
னிரத்துங் கபாட மினித்திறப் பாய்பண் டிவனணங்கே
யுரத்துஞ் சிரத்துங் கபாடந் திறந்திட்ட துண்டிலங்கா
புரத்துங் கபாட புரத்துங் கல்யாண புரத்தினுமே.

கண்டன் துலாபுருடதானம் பண்ணியபோது கூத்தர் பாடியது.

தொழுகின்ற மன்னர் சொரிந்திட்ட செம்பொற் றுலாத்திடைவண்
டுழுகின்ற தார்க்கண்ட னேறிய ஞான்றி னுவாமதிபோய்
விழுகின்ற தொக்கு மொருதட்டுக் காலையில் வேலையில்வந்
தெழுகின்ற ஞாயிறொத் தான்குல தீப னெதிர்த்தட்டிலே.

ஆனை நிகளம்விடுத்தபோது கூத்தர் பாடியது.

இன்னங் கலிங்கத் திகல்வேந்த ருண்டென்றோ
தென்னன் றமிழ்நாட்டைச் சீறியோ—சென்னி
யகளங்கா வுன்ற னயிரா வதத்தி
[illegible]நிகளங்கால் விட்ட நினைவு.

கண்டன் செண்டுவெளியிற் குதிரையேறியபோது கூத்தர் பாடியது.

கு[illegible]ன் பவனிக் கவனப் பரிநெருக்கான்
மண்டு[illegible]ங்கா தேயிருந்த வாறென்னோ—கொண்டிருந்த
[illegible] தாயல்ல பாருரவி தாயல்ல
[illegible]ராய வகை.

[illegible] கூத்தர்பாதி சோழன்பாதிபாடியது.

[illegible]நாவசை யாம லகிலமெல்லா
[illegible]த பிரானென்று நித்தநவம்
[illegible]றெட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
[illegible]ழனென் றேயென்னைச் சொல்லுவரே.

[illegible] விக்கிரமசோழனுலாவின்கண் உள்ளன.

இராசா கைகோடுத்தபோது கூத்தர் பாடியது.

கொலையைத் தடவிய வைவே லரக்கர் குலமடியச்
சிலையைத் தடவிய கையே யிதுசக தண்டத்துள்ள
மலையைத் தடவிய விந்தத் தடவி மலைந்தவொன்னார்
தலையைத் தடவி நடக்குங்கொல் யானைச் சயதுங்கனே.

மடையனைத் தண்டஞ்செய்ததை விலக்கக்கூத்தர் பாடியது.

மீனகம் பற்றிய வேலையு மண்ணையும் வெற்படங்கப்
போனகம் பற்றிய மாலல்லை யோபொருந் தாவரசர்
கானகம் பற்றக் கனவரை பற்றக் கலன்கள்பற்ற
வானகம் பற்ற வடிவேல் விடுத்த மனதுங்கனே.

கூத்தர் மாணுக்கன்பாடிய அந்தாதிச்சமுத்தி.

மாவுறங்கின புள்ளுறங்கின வண்டுறங்கின தண்டலைக்
காவுறங்கின வின்னமென்மகள் கண்ணுறங்கிலள் கையணைக்
கோவுறங்கு கடைத்தலைக்குல தீபவள்ளை குதட்டநின்
ருவுறங்கு புகாரசஞ்சல வஞ்சலென்ன வடுக்குமே.

இராசாவுக்கு வேளை ஏதென்றுகேட்ட சோமனுக்குக் கூத்தர் சோல்லியது.

தன்னுடைய தேவியர்க்குத் தார்வளவன் ருனுரைப்ப
துன்னுடைய சீர்த்தி யுயர்நலமே—துன்னுபுகழ்ச்
சோமா திரிபுவனத் தோன்றலே நின்புகழை
யாமா ருரைக்க வினி.

பழிகாரர் தோடர்ந்தபோது கூத்தர் சோமன்வாசலிலே ஓடிச்சோன்னகவி.

அடையென்பார் தள்ளென்பா ரன்பொன் றிலாமற்
புடையென்பார் தங்கடைக்கே போகேங்—கொடையென்[illegible]ன்
முந்துஞ்சோ மாபுவனை முன்னவனே நின்கடைக்கீழ்
வந்துஞ்சோ மாதலான் மற்று.

அரியைப்பாட வேண்டுமேன்னக் கூத்தர் பாடியது.

ஆரே யெனுமொன்று சொல்லத் தொடங்கினு ம[illegible]த்துன்[illegible]
பேரே வருமென்ன பேறுபெற் றேன்பெரு நாள் [illegible]றையி[illegible]
வேரே மிதுலையின் மின்னுட னேவெய்ய கான[illegible]
காரே கடல்கொளுந் தச்சிலை வாங்கிய காகுத்[illegible]

மேற்குறித்த பாடல்கள், தலைக்குறிப்புட்பட[illegible]
கண்டன. இத்துணையுங் கூறியவாற்ருற் புகழே[illegible]
மை வரலாறு ஒருவாறு உணரப்படும்.

உ

பன்னிரு நியாய பரிபாடை.

நியாயம் என்னுஞ் சொல்லுக்கு ஆபிதாநிககாரர் தகுதி, நீதி, நீதியை அறிவிக்கும் உபாயம், போகம், பொருந்துமாறு, பொருந்துமாறு காரணமாகக் கொள்ளப்படுந் திருட்டாந்தம் என்பன முதலியவாகப் பலபொருள் கூறுவர். இப்பொருள்களுள்ளே பொருந்துமாறு காரணமாகக் கொள்ளப்படுந் திருட்டாந்தம் என்பது மீமாஞ்சை வையாசிகதர்சனமாலை முதலியவற்றிலே சொல்லப்பட்டுள்ள காகதாலீய நியாயம், கபோதகநியாயம் முதலிய நியாய பரிபாடைகளையே கருதுவதாகும். அவைகளோ சில்வகை யெழுத்தாலாய சூத்திரம் போன்ற சிற்றுருவமுடையனவாயினும், பற்பல சொற்கள் கொண்டு விரித்துரைக்கத்தக்க பொருள்களாலே மிகப்பெரியன; உபமானவாக்கியங்களாய் நின்று பொருள்களை நன்கு விளக்கும் நெறிபற்றி நியாயமெனப்பட்டன. அந்தநியாயங்களும் ஆயிரம் வரையுள என்பர்.

அவற்றுள்ளே சிலபல நியாயங்கள் ஆரியநூலுரைகளிலும், சிலபல நியாயங்கள் செந்தமிழ்நூலுரைகளிலும் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆரியத்திலே இரகுவமிசம், சிசுபாலவதம் முதலிய காவியங்களினுரைகளிலும், வேதாந்தம், நியாயம் முதலிய தர்சனசாத்திரவுரைகளில் வியாகரணம், ஸ்மிருதி முதலிய நூலுரைகளிலும் நியா[illegible]ங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. திராவிடத்திலே [illegible] முதலிய சித்தாந்த சாத்திரவுரைகளிலும், விவேக [illegible] வேதாந்த சாத்திரவுரைகளிலும், தர்க்கசங்கிரக [illegible]ரிலும், வேறுசில நூலுரைகளிலுஞ் சிலசில [illegible]டிருக்கின்றன. சிவஞானசித்தியாருரைக[illegible] [illegible]ளுரையிலும், சிவஞானசுவாமிகளுரையி[illegible] [illegible]யாகிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நியா[illegible] [illegible] நேரத்தோன்றிய நியாயங்கள் சில

க. காகதாலீய நியாயம் ;—

காகதாலீயநியாயமாவது ஒரு பனையினின்றுந் தானே முதிர்ந்து விழுந்த பனங்காயின் விழுகைக்கு விழுகின்றஅப்பொழுதே அப் பனையில் வந்திருந்த காகத்தினைக் காரணமாகக்கொள்வதுபோல, ஒரு காரியத்தின் நிகழ்ச்சிக்குக் காரணமாய்க் கொள்ளற்பாலது யாதென்று நன்காராயாது அக்காரியத்திற்கு அணித்தாக அப்போது தோன்றுந் தொடர்ச்சிமாத்திரம் நோக்கிக் காரணமாகாத மற்றொன்றினை அதன் காரணமாகக் கொள்ளுவதாகிய ஒரு நெறி. காகம்=ஒரு பறவை. தாலீயம்=தாலசம்பந்தமுடையது. தாலம்= பனை. இது, "காகமிருக்கப் பனங்காய் விழுவதுபோல" என உலகவழக்கிலும் வழங்கப்படுகின்றது ; தென்மொழியிலே சிவப்பிரகாச சுவாமிகளுடைய வெங்கைக் கோவையிலுங் காணப்படுகின்றது.

வெங்கைக்கோவை.

மன்னிசை வெங்கை யுடைய பிரான்வரை மானுசுப்பைப்
பொன்னிசை கொங்கை முரித்தாலு நிந்தை பொருந்துநுமை
மின்னிசை மென்குழ லேறன்மி னீவிர் விளங்கிலிரோ
இன்னிசை வண்டினங் காள்காக தாலிய மென்பதுவே.

உ. கபோதக நியாயம்.

கபோதகநியாயமாவது புறாப்பறவைகள் யாதேனும் ஓரிடத்திலே இறங்கும் போது எல்லாஞ் சேர்ந்து பிரிவின்றி ஒருங்கே இறங்குமாறுபோல, ஓரினமாயுள்ள பொருள்களெல்லாம் ஒருங்கே சென்று ஓரிடத்திலே போய்த் தங்குவதாகிய ஒரு நெறி. கபோதகம்= புறாப்பறவை. இந்த நியாயம் பூவாளூர்ப்புராணத்திலே சூரியனுடைய பற்களெல்லாம் ஒருங்கு வீழ்ந்தன என்பதனை உணர்த்தும் பொருட்டுக் கச்சியப்பமுனிவராலே பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது.

பூவாளூர்ப்புராணம்.

கபோதக ஞாயமே கடுப்பப் பல்லெலாம்
சபாவலங் காரமின் றுகத் தாக்கினன்
அபாயமுற் றதையறி யென்று வாய்திறந்
துபாயமோ டொழிந்தன னெற்றை யாழியான்.

௩. குணாக்கரநியாயம்:—

குணாக்கரநியாயமாவது குணமென்னும் புழு யாதேனும் ஒரு மரத்தினை அரித்துச் செல்லும்போது அம்மரத்திலே அதனால் உண்டாய இரேகைகளெல்லாம் ஒருங்கே கூடி ஓரெழுத்தாக வந்து முடிந்தவாறுபோல, யாதேனும் ஒன்று செய்யும் போது அச்செயல் முன் கருதப்படாத மற்றொரு நற்செயலாய் வந்து முடிவதாகிய ஒரு நெறி. குணம்=மரத்தினைத் துளைக்குமியல்புடைய ஒரு வகைப் புழு. அக்கரம்=எழுத்து. திருவரங்க யமகவந்தாதியிலே மணவாளதாசமுனிவர் "நத்துவண்டலுழவோரெழுத்தின் வடிவுற்றசீர் மான" என்றதும் இந்த நியாயமாகும்.

திருவரங்கயமகவந்தாதி.

மானத்து வண்ட லுழவோ ரெழுத்தின் வடிவுற்றசீர்
மானத்து வண்ட வினையாள ராயினு மால்வளர்வி
மானத்து வண்டல மாமரங் கம்வழி யாவரினு
மானத்து வண்டமர் தாரண்ட ராம்பதம் வாய்க்குமங்கே.

௪. காகாக்ஷி கோளகநியாயம்:—

காகாக்ஷி கோளகநியாயமாவது காகப்பறவையின் இருகண்களு ...ம் ஒருமணியே நின்று உள்ளும் புறமுஞ் சென்று உதவுவது ...ல, ஒருபொருளேநின்று இருபக்கத்துஞ் சென்று உதவுவதாகிய ஒரு நெறி. காகம்=ஒருபறவை. அக்ஷி=கண். கோளகம்=மணி மாணிக்...வாசகசுவாமிகள் திருக்கோவையாரிலே "காகத்திருகண்ணுக்கொ...றேமணிகலந்தாங்கு" என்றதும் இந்த நியாயமே.

திருக்கோவையார்.

காகத் திரு...ண்ணுக் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்து ளோ...யிர் கண்டனம் யாமின்றி யாவையுமாம்
ஏகத் தொருவ...னிரும்பொழி லம்பல வன்மலையிற்
றோகைக்குந் தோன்றற்கு மொன்றாய் வருமின்ப துன்பங்களே.

௫. தேகேளிதீபநியாயம்;—

தேகேளிதீப நியாயமும் இந்தக் காகாக்ஷிகோளக நியாயத்திற் ...ரும்பாலும் ஒப்புமையுடையதேயாம். தேகேளிதீப நியாய

மாவது வாசற்படியிலே வைக்கப்பட்ட தீபமானது வீட்டினுட் பாகம், வெளிப்பாகம் என்னும் இருபாகத்திலுஞ் சென்று இருளை நீக்கிப் பொருளை விளக்குதல்போல, ஒருவிஷயம் நடுவே நின்று பக்கங்கள் இரண்டிலுஞ் சென்று பயன்படுவதாகிய ஒருநெறி. தேகேளி-வீட்டின் வாயிலிலே கதவின்கீழேவைக்கப்படும் மரத்துண்டம். இதனை வாசற்படி என்று வழங்குவர். தீபம்-விளக்கு. இஃது அலங்கார சாத்திரத்திலே சொல்லப்பட்ட தீவகாலங்காரவகைகளுளொன்றாகிய இடைநிலைப் பொருட்டீவகம்போலும்பொருணிலையுடையது இடைநிலைப் பொருட்டீவகமாவது நடுவிலே நின்ற ஒருபொருள் முன்னும் பின்னுஞ் சென்றியைந்து பொருள் விளக்குவது; "உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண-வண்ணாத்தல் செய்யா தளறு" என்னுங் குறளிலே ஊன் என்பது, நடுவே நின்று முன்னும் பின்னுஞ் சென்று பொருள்விளக்கியவாறுணர்க.

சு. பிராமண வசிட்டநியாயம்:—

பிராமண வசிட்டநியாயமாவது பிராமணர் வந்தார் என்று சொல்லும்போதே அந்தப் பிராமணருள்ளே ஒருவராய வசிட்டரும் வந்தார் என்பது பெறப்படுமாயினும், பிராமணர் வந்தார் வசிட்டரும் வந்தார் என்று வசிட்டர்மாட்டுள்ள விசிட்டம்பற்றி வசிட்டரை வேறுபிரித்துக்கூறுமாறுபோல, ஓரினமாயுள்ள பொருள்களையெல்லாம் பொதுவே கூறித் தலைமைபற்றி அவற்றுள்ளே ஒன்றினை விதந்து கூறுவதாகிய ஒருநெறி. தொல்காப்பியப்பாயிரவிருத்தியிலே சிவஞானசுவாமிகள் "வழக்கெனவே செய்யுளும் அடங்குமாயினும் தலைமை தோன்ற வேறு கூறினர்: முனிவர் வந்தார் அகத்தியனும் வந்தான் என்புழிப்போல" என்று கூறியதும் இந்தநியாயமே.

எ. தூலாருந்ததிநியாயம்:—

தூலாருந்ததிநியாயமாவது அருந்ததி நட்சத்திரம் இன்னதென்று முன்னொருபோதும் அறியாதவனொருவனுக்கு அதனைக் கா... டும்போது அது மிகச்சிறியதாதலின் விரைவிற் புலப்பட ம... தென்று கருதி, முன்னர் அதனருகிலே நிற்கும் பெரியநட்ச... ஒன்றினைக்காட்டி அதன்பின்னர் அந்த அருந்ததி நட்சத்திர...

காட்டுமாறுபோல, நுண்மையில்லாதனவாகிய பெரும்பொருளைமுன்னர்க்காட்டி அதன்பின்னர் அதனோடு தொடர்ந்த நுண்ணிய பொருளைக்காட்டுவதாகிய ஒருநெறி. தூலம்=பருத்த ரூபமுடையதாகக் காணப்படும் பொருள். அருந்ததி=ஒருநட்சத்திரம். இந்தநியாயம் சிவஞானபோதத்திலே ஏழாஞ்சூத்திரக்கருத்துரையிலே சிவஞான சுவாமிகளாலே முப்பொருள்களின் பொதுவியல்பு கூறியதற்குத் திருட்டாந்தமாகப் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. கைவல்லியத்திலே "தாலத்தின்மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டுவார்போல்" என்றதும் இந்த நியாயமேயாம்.

அ. அந்தகூபபதனநியாயம்:—

அந்தகூபபதனநியாயமாவது குருடனாயுள்ளா னொருவனுக்குக் கண்ணுள்ளானொருவன் இவ்வழியே செல்லுக என்று வழிகாட்டிவிட அவன் அவ்வழியை உறுதியாகப் பற்றிச் செல்லாது வேறு வழியிற்போய் ஒருகிணற்றிலே விழுந்தவாறுபோல, அறிஞர் கூறிய நல்வழியை உறுதியாகப்பற்றி ஒழுகாது தீயவழியிலே மனம்போனவாறே சென்று கேடுறுவதாகிய ஒருநெறி. அந்தன்=குருடன். கூபம்=கிணறு. பதனம் = விழுதல். "வேறுகொள் புலனை வென்றோர் மேலைநன் னெறியுய்த் தாலுந், தேறிய வுணர்வி லாதோர் செல்வுழிச்செல்வரன்றே" என்று கந்தபுராணத்திலே கூறியதும் இந்த நியாயமேயாம்.

கூ. சியாலசாரமேயநியாயம்:—

சியாலசாரமேய நியாயமாவது ஒருவன் தன் வீட்டிலே நிற்கும் நாய்க்கு வழங்கப்படும் நாமதேயமே தன் மைத்துனனுக்கும் வழங்கப்படுதலை நோக்காது, அந்த நாயினை ஒருகாரணத்தாலே வீட்டினின்றும் விலக்கிவிடக் கருதியபோது மனைவியைஅழைத்து இவ்விடத்தினின்றும் விலக்கி விடுக என்று அந்த நாமத்தினையே சுட்டிக் கூற, அவன்மனைவி மைத்துனனையே விலக்கிவிடச் சொல்லின ...ன்று கொண்டு விலக்கியவாறுபோல, நாமதேயம் இரண்டிற்கும் ...யிருத்தல் பற்றி ஒன்றினை மற்றொன்றாக ஆராயாது கொள்ளு... ஒருநெறி. சியாலன்=மைத்துனன். சாரமேயன்=நாய்.

சேதுபுராணம்.

திமிராமூடுபெரித்போலநின்றுசெய்வதின்றியே
சமீரணன்றன்மதலைசெற்றதந்திநாமநெஞ்சுகொண்
டமரினீடுமெசுவதாமனுவிபோனதுண்மையே
நமரிறைஞ்சுவில்லினுக்குநாதவென்னவோதினன்.

இங்கே தருமபுத்திரன் "அசுவதாமனுவிபோன துண்மையே" என்றது வீமனாற்கொல்லப்பட்டயானை ஒன்றுக்கும் "அசுவதாமன்" என்னும் நாமமிருத்தலால் அதனையுங்கருதும் என்பதனை நோக்காது துரோணாசிரியன் தன்மகனாகிய அசுவதாமனையே குறித்ததென்று கொண்டதும் இந்த நியாயமேயாம்.

கO. சுந்தோபசுந்த நியாயம்:—

நிகும்பனென்னும் அசுரனுடைய புத்திரர்களாகிய சுந்தன், உபசுந்தன் என்னும் இருவரும் திலோத்தமை என்னும் பெண்ணொருத்தி பொருட்டாக ஒருவரோடொருவர் போராடி ஒருவரை ஒருவர் கொன்றவாறுபோல, ஒன்றினை ஒன்றழிக்கும் ஒருநெறி. இந்த நியாயம் சிவாக்கிரயோகிகளாலே சிவஞான சித்தியாருரையிலே பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. "திலோத்தமைகாதல்பெற்ற - சுந்தோபசுந்தப்பெயர்த்தொல்லையினோருமொத்தார்" என்று இராமாயணத்திற் கூறியதும் இதன்பாற்படும்.

கக. அந்தகசநியாயம்:—

அந்தகசநியாயமாவது யானையின் வடிவத்தைத் தடவிப் பார்த்தறிய விரும்பிய ஒருகுருடன் யானையின்உறுப்புக்களுள்ளே ஒன்றினை மாத்திரந் தடவிப்பார்த்து யானை இப்படியிருக்குமென்று கொள்வதுபோல, ஒன்றினை முற்ற நோக்காது ஒரு பாகத்தினை மாத்திரம் பார்த்துக்கொண்டு அதனை மற்றொன்றாகக் கொள்ளுவதாகிய ஒருநெறி. அந்தன்=குருடன். கசம்=யானை. "யானைகண்ட குருடன்போல" என உலகவழக்கிலும் இது வழங்கப்படுகின்றது.

கஉ. அசுமலோட்டிர நியாயம்;—

அசுமலோட்டிரநியாயமாவது ஒரு கல்லினோடுவைத்து ஒரு மண்ணாங்கட்டியைப் பார்க்கும்போது மண்ணாங்கட்டி மெல்லியதாக

வும், அம்மண்ணாங்கட்டியை ஒரு பஞ்சுத்திரளையோடு வைத்துப் பார்க்கும்போது அதுவே வலியதாகவுங்கொள்ளப்படுவதுபோல, ஒன்றோடு நோக்கி மற்றொன்றற்கு வன்மைமென்மைகள் கற்பிப்ப தாகிய ஒருநெறி. அசுமம்=கல்லு. லோட்டிரம்=மண்ணாங்கட்டி.

இந்த நியாயங்களெல்லாம் செந்தமிழ்நாலுரைகளிலும் வந்தன வாகக் காணப்படுதலாற் செந்தமிழ் கற்பார்க்கெல்லாம் பயன்படுவன என்றே கருதுதும்.

யாழ்ப்பாணத்துச்சுன்னாகம். } இங்ஙனம்.
குரோதிஹு ஐப்பசிமீ } அ. குமாரசுவாமிப்பிள்ளை.

தமிழிலக்க வரலாறு.

சென்ற மாசிமாதம் வெளிவந்த "செந்தமிழி"ல் ஸ்ரீமது ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் எழுதிய "தமிழே அநேகபாஷை களுக்கு இலக்கங்கொடுத்தது" என்னும் வியாசத்தை வாசித்தவள வில், பிள்ளையவர்கள் கூறுங்கூற்றுக்களுக்காதாரமென்னை யென்று வியாசமுழுமையுந் தேடியுங்காணப்படவில்லை. அவர்கள் தம்வியாசத் துக்கு வேண்டியகருவிகளை எவ்வெவ்விடங்களிலிருந்து சேகரித்தன ரோ அதையுங் கூறிற்றிலர். கடைசியாகத் தம் சித்தாந்தத்துக்கு யாதோபபன்றேடுவான்றொடங்கி, காலஞ்சென்ற டாக்டர் கால்டு வெல்துரையவர்கள் கிரந்தத்தினின்று சிற்சில சமாசாரங்களை மேற் கோளாகக் காட்டினார். இவ்வுதாரணங்கள் தம்பக்ஷத்தை எவ்வா றுஸ்தாபிக்க வல்லன என்பது நன்குவிளங்கவில்லை. ஆதலால், இனி சாசனவாராய்ச்சியால் எமக்குள்ள துணிவைக்கொண்டு ஒருவாறு தமிழிலக்கங்களின் சரித்திரத்தைச் சுருங்கக்கூறுதும்.

இதுகாறும் நம்மிந்தியநாட்டில் நாம்கண்ட சாசனங்களிற் பழ மையுடையது பௌத்தசக்கரவர்த்தியாகிய அசோக மகாராஜா வின் சிலாலிகிதங்களே. அவற்றின் பிற்பட்டவெழுத்துக்கள் பம் பாய்ப்பிராந்தியத்துள்ள கற்கோயில்களிற் காணப்படுவன. 'தமிழ்'

என்று சித்தமாய் வழங்கக்கூடிய சாசனங்களில் ஆதிபுராதனமானது இவ்வருஷம் யான் செஞ்சிக்கடுத்த திருநாதர் குன்றிற் கண்டதோர் சிறுசாதனம். இதன்எழுத்துக்கள், பம்பாய்க்கற்கோயிலெழுத்துக்களின் காலத்துக்குச் சிறிது பிற்பட்டும், அக்காலத்துக்குச் சற்று பிந்திய காலத்தாண்ட பல்லவஅரசர்களது சாசனங்களின் எழுத்துக்களுக்குச் சிறிது முற்பட்டும் அமைந்தவை. மேற்கூறிய பல்லவராஜர்கள் காலம் அடுத்தது. அதன் பின்பு அரசாண்டவர்கள் சோழசக்கரவர்த்திகள்; இச்சோழர்கள் கி. பி. 13-ம் நூற்றுண்டிற் சிறிது தளர்வடையப் பாண்டியர்கள் தலையெடுத்தார்கள். அவர்கள் காலமானவுடன், இப்பொழுது 'ஆனேகுந்திசமஸ்தானம்' என்று பெயர் கூறப்பட்ட வித்தியாநகரராஜாக்கள் காலமாம். இவ்வெவ்வேறு காலங்கள் தோறும் *இலக்கங்கள் எவ்வாறு மாறிவந்தன என்பதை முறைமுறையே அடுத்த பக்கத்திற் காட்டிய படத்தால் தெள்ளிதாயறியலாம். நிற்க.

சரித்திரத்துக்கு இன்றியமையா இயல்பு, நடந்தது நடந்தவண்ணங்காட்டுவதாயிருக்க, நம்புத்திசாதுரியங்களான் நிலைநிறுத்தத் தொடங்கும் சித்தாந்தங்களின் உண்மை யென்னும்? இதுபோன்ற சரித்திரவாராய்ச்சி செய்யப்புகின் இதன் சம்பந்தமான சகல சமாசாரங்களையும் முற்றத்தெரிந்து தெளிந்து, பின்னர் எழுதத்தொடங்குவது தமக்குப்பெருமையும், பிறர்க்குபகாரமுமாவதுடன், எடுத்துக்காட்டுக்கும் (Criticism) இடமாகாது.

மேற்கூறியவாறு ஒவ்வொருவரும் சரித்திரங்களை உண்மையுருவத்துடன் எழுதுவாராயின், தமிழ்ப்பாஷையின் இயற்கையாய பெருமை விளங்குவது மன்றி, தமிழைப் பலமுறையும் கௌரவிக்க இடமாகுமே. இஃதன்றித் தமிழிற்கு இல்லாத பெருமைகளை யூட்டவிரும்புவதனுல் அதற்கிழுக்கன்றே உண்டாகும். பிள்ளையவர்களும் நம்தமிழ்நண்பர்களும் எம் எடுத்துக்காட்டை மன்னிப்பாராக.

4—10—1904
நீலகிரி.

இங்ஙனம்,
து. அ. கோபிநாதராவ்.

* இந்தியாவில் வழங்கும் எல்லா அக்ஷரங்களும் அசோகராஜாவின் காலத்து வழங்கிய அக்ஷரங்களின் திரிபு என்னும் சித்தாந்தத்தைக்குறித்து ஒரு வியாசம் விரைந்து எழுதக்கருதியுள்ளோம்.

தமிழிலக்கவரலாறு காட்டும்படம்.



†—இஃது அப்பாவையில் 'ய' என்னும் அக்ஷரம்.

உ

ப்ரஹ்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்களது

சங்கத்தைப்பற்றிய குறிப்பு.

சென்ற மைகல்மஸ் விடுமுறை நாட்களில் மதுரை சென்று, தமிழ்ச்சங்கத்தின் அங்கங்களாகவுள்ள ஸேதுபதி செந்தமிழ்க்கலாசாலை, பாண்டியன் புஸ்தகசாலை, செந்தமிழ் முத்திராசாலை முதலியவற்றைப்பார்த்தேன்; அவைகள் சென்ற ஆண்டுகளிலிருந்த நிலைமையைக்காட்டிலும் எத்தனையோ மடங்கு வளர்ச்சியுற்று விளங்குகின்றன.

ஸேதுபதி செந்தமிழ்க் கலாசாலையிற் கற்கும் மாணாக்கர்கள், நன்கு பாதுகாக்கப்பெற்றுத் தத்தமக்குரிய பாடங்களை மிகச்செவ்வையாகக்கற்றுச் சிந்தித்துத் தேர்ந்து, கேட்ட வினாக்களுக்கு யாதொரு தடையுமின்றி இனிமையாக விடைபகர்தலும், செய்யுட்களைச் சந்தத்தோடு ஒப்பித்தலும், ஸங்கீதப்பயிற்சி, வடமொழிப் பயிற்சி, ஆங்கிலப்பயிற்சி, சொல்வன்மை, ஊக்கம், தெய்வபக்தி, வணக்கம் முதலிய நல்லொழுக்கங்களுடைமையும் மிகுந்த மகிழ்ச்சியை விளைவித்தன. இவர்கள் படிக்கத்தொடங்கியபொழுது இவர்களுடைய நிலைமையைப் பார்த்திருந்த எனக்கு, இவர்கள் அதிசீக்கிரத்தில் இவ்வளவு மேம்பாடடைந்து விளங்குவது, பெரியதோர் வியப்பைத்தந்து உபாத்தியாயர்களுடைய உழைப்பை நன்கு புலப்படுத்தியது.

பாண்டியன் புஸ்தகசாலையில், பெரும்பாலும் அகப்படாதனவாகிய அரிய பெரிய கையெழுத்துத் தமிழ்ப்புஸ்தகங்கள் பல சேகரஞ்செய்து மிகச்செவ்வையாக வைக்கப்பெற்றிருத்தலும், அவை நன்றாகப் பாதுகாக்கப்பெற்று வருதலும், சிறந்த வித்துவான்களால் முறையே பரிசோதித்துப் பதிப்பிக்கப்பெற்று வருதலும் மிகுந்த ஆனந்தத்தை விளைவிக்கின்றன.

இதுவரையில் ஆராய்ந்து பதிப்பிக்கப்பெறாத சில புஸ்தகங்கள் தக்க குறிப்புரைகளோடு பதிப்பிக்கப்பெற்று வெளிவந்திருத்தலும், இதுவரையில் வெளிப்படாத அரிய பெரிய விஷயங்கள் பல வெளி வந்திருத்தலும் செந்தமிழென்னும் பத்திரிகையைப் பெற்றுவரும் அன்பர்களுக்கு நன்கு புலப்பட்டிருக்கும்.

எத்தனையோ பலர் சேர்ந்து செய்யவேண்டிய இப்பெருங்காரிய த்தை ஏகதேசத்தில் வகித்துச் செலவுசெய்து பரிபாலித்து வருபவர்களும் பாலவனத்தம் ஜமீந்தாரும் தமிழ்ச்சங்கத்து அக்கிராஸனாதிபதியுமாகிய இராமநாதபுரம் ம-ா-ா-ஸ்ரீ பொ. பாண்டித்துரைஸாமித் தேவரவர்களுடைய பெருந்தகைமை மிகப்பாராட்டற்பாலது; தம்முடைய ஜமீன் ஸம்பந்தமாகவுள்ள காரியங்கள் எவ்வளவோ இருந்தும் அவற்றைச் சிறிதும் மதியாமல் தமிழ்ச்சங்கத்தின் ஸம்பந்தமான காரியங்களையே அவர்கள் எப்பொழுதும் கவனித்து வருவதாகவும் தெரிகிறது.

கவர்ன்மெண்டாரும், இத்தமிழ்நாட்டைச் சார்ந்த அரசர்களும், பிரபுக்களும், உத்தியோகஸ்தர்களும், மற்றவர்களும் கவனித்துச் சங்கத்தின் ஸம்பந்தமான பொருட்செலவு முதலியவற்றில் ம-ா-ா-ஸ்ரீ பாண்டித்துரைஸாமித்தேவரவர்களுக்கு அதிகக்கவலை வையாமற் சங்கத்தின் அபிவிருத்தியைக்கருதிப் பொருளுதவி செய்வார்களாயின், இக்காலத்தில் நிரம்ப உபகாரமாகவிருக்கும்.

இவ்வரிய காரியத்தை மேற்கொண்டு இடைவிடாமல் உழைத்து வரும் அக்கிராஸனாதிபதியவர்களுடைய மனத்திற்கு யாதொரு கவலையும் உண்டாகாவண்ணம் பாதுகாத்தருளும்படி ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரருடைய திருவடிகளைச் சிந்திக்கின்றேன்.

சென்னை, 10—10—905.

இங்ஙனம்
வே. சாமிநாதையன்,
Tamil Pandit,
Presidency College, Madras.

தருக்கசூத்திர முதற்பாடம்.

II. மேற்கோளியல்.

(ரூசள-ம் பக்கத்தொடர்ச்சி).

61. மேல் யாம்,—

மேற்கோள் தம்முண் மேவு சம்பந்த
மறிதலே பிலகுவா யறைகுது மறிந்தே.

62. மேற்கூறிப்போந்தசம்பந்தம்யாதெனில்ஓரேஎழுவாயையும், பயனிலையையுமுடைய இரண்டு மேற்கோள்கள் அளவிலாவது குணத்திலாவது அவ்விரண்டினுமாவது மாறுபட்டுநிற்குங்கால் அவைகளுள் ஒன்றோடொன்று ஒத்துநடைபெறுதனவென்று கூறுவர். அன்றியும் கொடுக்கப்பட்ட யாதாமோர் எழுவாய்பயனிலைகொண்டு முற்கூறிப்போந்த உ. கரமுதலிய நான்குவித மேற்கோள்கள் அமைத்துக்கூறுதல் சாதமே. அவ்வாறு அமைத்துக்கூறுமவற்றுள் ஒத்துநடைபெறுதனவாகிய இரண்டிரண்டுமேற்கோள் மாறிமாறி எடுத்தாளுங்கால் ஒத்துநடைபெறுதலை நான்குவிதப்படும்.

அவையாவன :—

(1) உகர, எகர, மேற்கோள்களுள் (முறையே பொது உடன்பாடு பொதுஎதிர்மறை மேற்கோள்கள் எழுவாய் பயனிலைகளில் ஒத்துநடைபெறுவனவேனும்) ஒன்றற்கொன்று முரணி நடைபெறுதலால் அவை முரண்மேற்கோள்களெனப்படும்.

உதாரணமாக :—

(உ) "எல்லா உலோகங்களும் இயற்கைப்பொருள்களாயிருக்கின்றன."

(எ) "எல்லா உலோகங்களும் இயற்கைப்பொருள்களுள் வாரா."

இவ்விரண்டினுள் எழுவாய் பயனிலைகள் ஒத்துநடைபெறுவனவேனும் குணத்தில் ஒன்றற்கொன்று மாறிநிற்றலால் முரண் மேற்கோள்களாமாறு காண்க.

(2) அவ்வாறே பகர, மகர, மேற்கோள்கள் (முறையே சிறப்புடன்பாடு, சிறப்பெதிர்மறை மேற்கோள்கள்) உண்முரண் மேற்கோள்களாந்தன்மையைக் காட்டுதும்.

உ-தாரணமாக :—

(ப) சில உலோகங்கள் தெரிக்குந்தகுதியுடையவைகளாயிருக்கின்றன.

(ம) சில உலோகங்கள் தெரிக்குந்தகுதியுடையவைகளில்லை.

இவ்விரண்டு மேற்கோள்களுள், ஒன்று உடன்பாடாயும் மற்றொன்று எதிர்மறையாயுமிருப்பதால்மாத்திரம் ஒன்றற்கொன்று ஒருவாறு முரணிதோன்றினும் மற்றைய ஹேதுக்களால் முரணுமைப்புமுறும். எங்ஙனமெனில்,

"வெண்கலமுதலிய சில உலோகங்கள் தெரிக்குந்தகுதியுடையவைகளாயிருப்பது உண்மை." அவ்வாறே "தங்கமுதலிய வேறு சில உலோகங்கள் தெரிக்குந்தகுதியுடையனவல்லவென்பதும் உண்மை."

ஈண்டு "சில உலோகங்கள் தெரிக்குந்தகுதியுடையன" என்பதனுல்மாத்திரம் வேறு "சில உலோகங்கள் தெரிக்குந்தகுதியுடையனவல்ல" என்று மறுத்துக் கூறுதற்கு ஏதுவில்லாமையறிக. இவ்விரு மேற்கோள்கள் உகர, எகர, மேற்கோள்போல் மிகுதியும் முரணிக்காணுமைபால் அவைகள் உள்ளேதிர்மேற்கோள்களெனச் சொல்லப்பெறுவனவாம்.

(3) உடன்பாட்டு மேற்கோள்களாகிய உகர, பகர, மேற்கோள்களும், இவையன்றி, எதிர்மறை மேற்கோள்களாகிய எகர, மகர, மேற்கோள்களும் உள்ளமைமேற்கோள்களெனக் கூறப்பெறுவன.

எங்ஙனமெனில்,—பொதுவிடையார்ந்தவுண்மை சிறப்பிடைநிலைபெறுதல் அவசியம். அதனை,

"தொகுதிக்குள்ளது பகுதிக்குள்ளதே" என்னும்-த-சூத்திரத்தானுமறிக. அவ்வாறே ஆங்காங்குப் பகுதிக்குள்ளது தொகுதிக்குள்ளதாகாமையும் வந்துழி உய்த்துணர்ந்துகொள்க.

(1) { பொதுஉடன்பாடு உ. "எல்லா உலோகங்களும் இயற்கைப் பொருள்களாயிருக்கின்றன."
சிறப்புஉடன்பாடு ப. "சில உலோகங்கள் இயற்கைப்பொருள்களாயிருக்கின்றன."

ஈண்டுப்பொதுவிடையார்ந்த உண்மை சிறப்பிடைத்தங்கிநிற்றலையும் அவ்வாறு நிற்பதால் இழுக்குவராமையையுமறிக. மேலும்,

(2) { பொது எதிர்மறை.—எ. "எல்லா உலோகங்களும் செயற்கைப்பொருள்களுள்வரா."
சிறப்பு எதிர்மறை.—ம. "சில உலோகங்கள் செயற்கைப்பொருள்களுள்வரா."

இவைகளும் மேற்கூறிப்போந்தவாறே நின்றமை காண்க. அவைகள் ஒன்றற்கொன்று உள்ளமைந்து வருதலையும் கண்டுணர்க.

(4) மேலும் உகர, மகர, மேற்கோள்களும், அவையன்றி எகர, பகர, மேற்கோள்களும் ஒன்றற்கொன்று எதிருற்றுநின்று அளவு பண்புகளால் மாற்றமுள்ளனவாதலால் அவை எதிரிடைமேற்கோள்களாம்.

இவைகளின் தன்மையை முற்கூறிப்போந்த உதாரணங்களை வரைந்து பின்உய்த்துணர்ந்துகொள்க.

(63.) மேற்கூறிப்போந்த நான்குவகை ஒவ்வாநிலைகளைக் கீழே காட்டுமுறைமையிற் காட்டுதல் வழக்காதல்பற்றி யாமும் அங்ஙனங்காட்டுவாம்.



64. இனி இவைகளின் உண்மை அல்லது அஃதின்மை என்பனவற்றை ஆய்தல் கடனும்.

(1) "எதிரிடை தம்மு ளுண்மை யொன்றே"

(2) முரண் மேற்கோளு ளுண்மை யின்றே"

(3) உண்முர ணவைபுளொன் றுண்மை யிலதா
யிரண்டினு முண்மை யியங்குத லியல்பே.

(4) ஒன்றினு ளொன்றமைந் துறுமேற் கோளுட்
பொதுவிடை யுண்மை பொருந்திடிற் சிறப்புறும்
சிறப்பிடை யுண்மை செறியிற் பொதுவிடை
யுண்மை யியங்கினு மியங்கு மென்ப.

உதாரணமாக,

(1) எ. "எல்லா மனிதர்களும் அறிவுடையவர்களல்லராயிருக்கிறார்கள்."

ப. "சிலமனிதர்கள் அறிவுடையவர்களாயிருக்கிறார்கள்"

இவ்விரண்டு மேற்கோள்களின் உண்மையை விசாரிக்குங்கால் முன்னையது மனிதர்கள் அறிவில்லாதவர்களென்று கூறுகின்றது. இஃது உண்மைக்கு விரோதமாதலையும் "சிலமனிதர்கள் அறிவுடையவர்களாயிருக்கின்றார்கள்" என்ற பகர மேற்கோள் "எல்லா மனிதர்களும் அறிவுடையவர்களாயிருக்கிறார்க" ளென்பதின் உள்ளமை மேற்கோளாதலினால் அஃது உண்மைக்கு விரோதமாகாமையையும் கண்டுணர்ந்துகொள்க. ஆதலால் எதிரிடை மேற்கோள்களாகிய இவ்விரு மேற்கோள்களுள் எ, உண்மைக்கு விரோதமாயும் ப, உண்மைக்கு இயைபுடையதாயிருத்தலையுங்கண்டுணர்க. மற்றவைகளுக்கும் முற்கூறிப்போந்த உதாரணங்களைக்கொண்டு இயைபுபடுத்தி உணர்ந்துகொள்க.

(இன்னும் வரும்.)

S. பால்வண்ண முதலியார்.

திவ்வியகவி

பிள்ளைப்பெருமாளையங்கார்.

(௫௱௨-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவரிருந்த காலம் திருமலை நாயக்கருடைய காலம் [1](கி-பி. 1623-1659, அதாவது பதினேழாவது நூற்றாண்டு) என்று எழுதி வைத்துள்ளார் திரிசிரபுரம் வித்வான் கோவிந்தபிள்ளை யென்பவர். இக்கூற்றுக் காதாரமின்னதென்பது விளங்கவில்லை. சிலர் இவரை மேற்கூறிய (பதினெட்டாம் நூற்றாண்டிருந்த) சைவ எல்லப்ப நாவலர் காலத்திருந்தனர் என்ப. இவர்க்காசிரியராகிய பராசரபட்டரது திருவவதாரகாலம் சாலிவாகன சகாப்தம் தொளாயிரத்து எண்பத்து மூன்று என்று பிரபந்நாமிருதத்திற் கூறப்பட்டிருப்பதால் (983+78=1061 A. D.) கி. பி. பதினோராவது நூற்றாண்டிறுதியில் இவர் இருந்தனர் என்ப. இவ்வாறு பதினோராவது நூற்றாண்டு என்று சிலரும், பதினேழாவது நூற்றாண்டு என்று சிலரும், பதினெட்டாவது நூற்றாண்டு என்று மற்றுஞ் சிலருங் கூறுவதனால் உண்மை யிதுவெனத் தெரிதல் அருமையேயாம். மேலும் இந்நாட்டு நூலின்காலம் நூலாசிரியரின்கால மின்னதெனக் கூறப்புகுங்கால் யுகம்யுகமாய்ப் புரட்டுவதில் நம்மவர்க்கு மிகப் பிரியம்; மேனாட்டுப் புலவருட் சிலரோ இவையெல்லாம் சில நூற்றாண்டுக்கு முன்னர்த்தான் தோன்றினவென்று சொல்வதற்கு விரும்புவர். கால்டுவெல்பாதிரியார் வைணவமதமே இராமாநுஜருக்குப் பிந்தியதென்பர். ஆழ்வார்கள் தோன்றியதும் அவர்க்குப் பிந்தியேயென்று வாய்கூசாது கூறுவர் சிலர். கீழ்நாட்டுப் பண்டிதருட் சிலர் இம்முனையிலும், மேனாட்டுப் பண்டிதர் அம்முனையிலும் நிற்பர். ஆகவே நடுநின்று உண்மைஆராய்வோர் அரியராயினர்.

தேவார முதலிய சைவத்திருமுறைகளை நம்பியாண்டார் நம்பிகள் தொகுத்தாங்கு ஸ்ரீமந்நாதமுனிகள் நாலாயிரப் பிரபந்தங்களைத் தொகுத்தனர் என்றும், பின்னொரு காலத்துச் சேக்கிழார்

---

(1) See Page 4 of the Introduction to the Meenakshi Ammai Pillai Tamil, Edited by K. Kuppuswami Mudaliar, B. A., (Rippon Press, Madras. 1903.)

*

பெரிய புராணம் பன்னிரண்டாவது திருமுறையாகச் சைவத்திரு முறையுடன் சேர்க்கப்பட்டது போல, பிற்காலத்து இராமாநுஜ நூற்றந்தாதியும் நாலாயிரப் பிரபந்தத்துட் சேர்க்கப்பட்டது என்றுங் கூறுப. இந்நூற்றந்தாதி செய்தவர் திருவரங்கத்தமுதனார் என்பவர். இவர் பராசரபட்டருடைய தகப்பனாராகிய கூரத்தாழ்வானுடைய சிஷ்யர் என்பது இவர்தாமியற்றிய,

[2]"மொழியைக் கடக்கும் பெரும்புக ழான்வஞ்ச முக்குறும்பாங்
குழியைக் கடத்துமெங் கூரத்தாழ் வான்சரண் கூடியபின்
பழியைக் கடத்து மிராமா நுசன்புகழ் பாடியல்லால்
வழியைக் கடத்தல் எனக்கினி யாதும் வருத்தமன்றே."

இத்திருவரங்கத்தமுதனாரைப் பிள்ளைப்பெருமாளையங்கார் தம் தகப்பனார் என்பார் பலர்: பாட்டனார் என்பார் சிலர்.

அஃது எவ்வாறாயினும், இராமாநுஜருடைய ஜீவிய காலத்திலேயே இராமாநுஜருடைய பிரதாபம் எங்கும் விளக்கமுற்றிருந்தமையால் ஐயங்கார் மூதாதையால் இயற்றப்பட்ட இராமாநுஜ தோத்திரமாயுள்ள நூற்றந்தாதியும் அக்காலத்திலேயே நாலாயிரப் பிரபந்தத்துட் சேர்க்கப்பட்டிருத்தல் கூடும். பிள்ளைப் பெருமாளையங்கார் இராமாநுஜருக்குப் பின்னிருந்தோரென்பது மேற்கூறியதனாலும் ஐயங்கார்கூறும் திருவரங்கக் கலம்பகத்துக் காப்புச் செய்யுளொன்றானும் பெறப்படும். அஃதாவது,

"பிடிக்கும் பரசம யக்குல வேழம் பிளிறவெகுண்
டடிக்குங் குரற்சிங்க வேறனை யானெழு பாருமுய்யப்
படிக்கும் புகழெம் மிராமா நுசமுனி பல்குணமும்
வடிக்குங் கருத்தினர்க் கேதிரு மாமணி மண்டபமே."

அதுவுமன்றி இவர் இராமாநுஜருடைய சிஷ்யராகிய கூரத்தாழ்வானது 'பெருமாள் குமாரர்' என்னுஞ் சிறப்புப் பெயர் வாய்ந்த (பராசர) பட்டரது சிஷ்யர் என்பது இன்னொரு காப்புச்செய்யுளால் விளக்குகிறது. அஃதாவது,

"வானிட்ட கீர்த்தி வளர்கூரத் தாழ்வான் மகிழவந்த
தேனிட்ட தாரெம் பெருமாள் குமாரர் சிவனையயன்
றானிட்ட சாபந் துடைத்தா ளரங்கர்சந் தாழிபுய
நானிட்ட னென்றருள் பட்டர்பொற் றாட்கதி நந்தமக்கே."

(2) இராமாநுஜநூற்றந்தாதி செய்யுள். 7.

இராமாநுஜர், தென்னிந்தியாவில் ஸ்ரீவைணவசமயத்தைப்பரவச்செய்ததையறிந்த சோழன் அவரை இந்நாட்டினின்று துரத்தவே அவர் மைசூர்நாடு சென்று ஸ்ரீரங்கபட்டணத்திற்கு வடக்கே 20 மைல் தூரத்திலுள்ள மேற்கோட்டை(மேலுகோட்டை) என்னும் நகரில் இருந்த சமணர்களை வாதில் வென்று அக்காலத்தரசாண்டு ஹாய்சாலவம்சத்தரசனாகிய பிட்டிதேவராஜனை (1104—1141 கி-பி.) சமணமதத்தினின்றும் விலகச் செய்து அவனை வைணவனாக்கி அப்போது அவனுக்கு விஷ்ணுவர்த்தனன் என்னும் தீக்ஷாநாமமளித்தார். அதுமுதற்கொண்டு அவனுக்கு அப்பெயர் விளங்கி வந்தது. அப்போது அங்கே ஒரு ஸ்ரீவைஷ்ணவ மடமும் ஸ்தாபித்தார். அதற்குப் பரகால சுவாமி மடமென்று பெயர். அவர் அவ்வரசனை வைணவனாக்கியது, கி-பி. 1117-வது வருஷமென்பதும் அவர் அந்நாட்டிற் பிறகு 14 வருஷமிருந்தாரென்பதும் சாசன ஆராய்ச்சியினாற்றெரிய வருகிறது.[3]

ஆய்ந்து பார்க்குமிடத்து இவரைச் சோழ நாட்டினின்றுந் துரத்தியசோழன் சைவத்தில் அதிகப் பற்றுவைத்திருந்த [4]அநபாயசோழன் (1070—1118 A. D.) ஆதல் வேண்டுமெனத் தெரியவருகிறது. இராமாநுஜர் பன்னிரண்டாவது நூற்றாண்டின் முதலில் இருந்தனர் என்றேற்படுகிறபடியால், அவர் காலத்தவரான கூரத்தாழ்வானும் அவர் புத்திரராகிய பராசரபட்டரும் அக்காலத்தவரே என்று கொள்ளலாம். ஆயினும் பிரபந்நாமிருதத்தில் பட்டர் அவதாரகாலமே கி. பி. 1061-ம் (983—78) வருஷம் என்று கூறியிருக்கிறதே. இராமாநுஜர் மைசூர் நாட்டிற் சென்றது கி. பி. 1117 வது வருஷமென்றேற்பட்டதே; இவ்வளவு காலவித்தியாச மிருப்பதால் பட்டர் அவதாரகாலம் 1061-வது வருஷம் என்பது பொருந்துமா என்று ஐயுறுவோர் சற்றே ஆழ்ந்து ஆய்ந்து பார்த்தால் அசாத்தியமொன்றும் இன்றென்பது விளங்கும். பிள்ளைப்பெருமாளையங்கார் இயற்றிய நூல்களனைத்தினும் ஆதியிலேனும் அந்த

---

(3) P. 338, Vol. I, Lewis Rice' Mysore.
(4) P. 133, Epigraphia Indica, 1902.

த்திலேனும் இப்பட்டரைத் [5]துதியாதுவிட்டிலர். சங்கும் ஆழியும் இப்பட்டரே ஐயங்காரதுபுயத்துப் பொறித்தனர் என மேற்கூறிய "வானிட்டகீர்த்தி" என்னும் பாட்டில் ஐயங்கார்தாமே கூறியிருப்பதால் பாராசரபட்டரே இவர்க்கு ஆசாரிய ரென்பதும், சிலர் கூறுவது போன்று பட்டர் வம்சத்துதித்துப் பிற்காலத்து அப்பெயர் கொண்டவரு ளொருவரல்லரென்பதும் ஏற்படும். மேலும் இப்பட்டரது கனிஷ்ட சகோதரராகிய வியாசபட்டர் ஐயங்காரது பௌத்திரராகிய கோனேரியப்பனையங்காருக்கு ஆசாரியர் என்பது ஸ்ரீரங்கநாயகியார் ஊசல் என்னும் பிரபந்தத்துள்ள,

"தாரங்கத் திருவரங்கர்க் கூசல் பாடிச்
சாத்தினன் பேரனென்னுந் தன்மையாலும்
ஆருங்கண் டேதெளியு மவன்சொல் பாட்டி
னதிசயத்தை யறிவனென்னு மாசையாலும்
பாரெங்கும் புகழ்வேத வியாச பட்டர்
பதம்பணிகோனேரியப்பன் புன்சொல்லாகச்
சீரங்க நாயகியார்க் கொருபத்தாறு
திருவூசற் றிருநாமஞ் செப்பினனே."

என்னுஞ் செய்யுளாற் றெரியவருவதனாலும் கூரத்தாழ்வானுடைய புத்திரராகிய பராசரபட்டர் காலத்தே ஐயங்காரிருந்திருத்தல் வேண்டுமென்னுங் கொள்கை வலியுறுகின்றது. இராமாநுஜரும் கூரத்தாழ்வானும், பராசரபட்டரும் பதினோராவது நூற்றாண்டினிறுதியிலும் பன்னிரண்டாவது நூற்றாண்டின் முதலிலும் இருந்திருக்கிறபடியாற் பிள்ளைப்பெருமாளையங்கார் பன்னிரண்டாவது நூற்றாண்டி னிடைக்காலத்திருந்தன ரென்று கொள்ளலியலும். பதினேழாவது நூற்றாண்டிலும் பதினெட்டாவது நூற்றாண்டிலும், இவரிருந்தன ரென்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று.

(5) ஸ்ரீரங்க நாயகர் ஊசற்றிருநாமம் - காப்புச்செய்யுள்.
திருவரங்கக் கலம்பகம் - செய்யுள் 101.
திருவரங்கத் தந்தாதி - செய்யுள் 3; 101.
திருவேங்கடமாலை - செய்யுள் 101.
திருவேங்கடத் தந்தாதி - செய்யுள் 101.
நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி செய்யுள் - 110.

அஷ்டப்பிரபந்தத்தில் அடங்கியுள்ள கலம்பகம் மாலை முதலிய பிரபந்தங்கள் அக்காலத்தில; அவை பிற்காலத் தேற்பட்டன; ஆகையாலிவரும் இந்நூல்களும் இக்காலத்தன என்பார் சிலருளர். அத்தகையோரும் ஆய்ந்து பார்க்கில், செல்வாக்குற்று நாளடைவில் ஜீரணித்து வந்த தேவாரமுதலியவைகளை [6]இராஜராஜச் சோழனுடைய முயற்சியினால் கி. பி. 1011-வது வருஷம் எடுத்துத் தொகுத்துத் திருமுறைகளாக வகுத்த [7]நம்பியாண்டார்நம்பி யியற்றிப் பதினோராந்திருமுறையுட் சேர்க்கப்பட்டுள்ள பிரபந்தங்களுள், கலம்பகம் மாலை முதலிய பிரபந்தங்களிருத்தலாலும், கி. பி. 710-வருஷமுதல் 760-வது வருஷம் வரையில் தொண்டைநாடாண்ட பல்லவசக்ரவர்த்தியாகிய [8]நந்திபோதவர்மனது சேனைத்தலைவன் பாண்டியனைத் தெள்ளாற்றின்கண் ணடர்ந்தபோரில் வெந்நிடச்செய்து வெற்றிகொண்டதைக் [9]குறித்துப்புகழ்ந்து அவ்வரசன்மீது நந்திக்கலம்பகம் என்னுமோர் கலம்பகமியற்றப் பட்டிருத்தலாலும், திருநாவுக்கரசுநாயனார் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம் பாடிய ஏழாவது நூற்றாண்டுக்கு முன்னர்ப் பல்லவஅரசர் [10] சமணராயிரு

(6) Raja Raja Deva - 985 - 1012 A. D. Epigraphia Indica, See 1902, Page. 113.

(7) The age of Sekkilar, the author of the Periyapuranam and that of Nambi Andar Nambi, by K. Kuppuswamy Mudaliar, B. A.

(8) See page. 3. Report on Epigraphy for 1889.

(9) நந்திக்கலம்பகம் செய்யுள் 4; 28; 33.

(10) திருக்கலம்பகம் செய்யுள் 61.

" உரந்திகழும்வில்லவன்றன்சிலையையிறுத்துயர்ஞானமகளைவேட்டு
வரந்திகழும்புகழ்ச்சோதிவளநாடுகைப்படுத்தவரதர்கண்டீர்
பரந்தியலுஞ்சுடர்மௌலிப்பல்லவரும்பண்ணவரும்விண்ணாடாளும்
புரந்தரருந்தொழவுறையும்பொன்னெயில்விட்டென்னிதயநண்ணினாரே."

திருநாவுக்கரசுநாயனார் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் என்னுமிவ்விருவர்தம்காலத்தும் பல்லவர் சமணர்என்பது திருத்தொண்டர் புராணத்தினின்றும் அறியலாம். சுந்தரமூர்த்தி நாயனார்காலத்துப் பல்லவ அரசர் சைவமரபினராயிருந்தனர் என்பது,

" கருமையாற்றருமனார்தமர்நம்மைக்கட்டியகட்டறுப்பிப்பானை
யருமையாந்தன்னுலகந்தருவானை மன்னுலகங்காவல்பூண்ட
வுரிமையாற்பல்லவர்க்குத்திறைகொடாமன்னவரைமறுக்கஞ்செய்யும்
பெருமையார்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே."

ந்தகாலத்து அருகக்கடவுள்மீது தொண்டை நாட்டுப் பையூர்க்கோட்டத்து ஆர்ப்பாகை யென்னு நகரின்கண்ணிருந்த உதீசிதேவரென்பவர் திருக்கலம்பகம் என்னும் ஒரு கலம்பகமியற்றி யிருப்பதாலும், கலம்பகம் முதலாய பிரபந்தங்கள் பன்னிரண்டாவது நூற்றுண்டில் இருந்திராவென்று சொல்வதற்குமிடனில்லையென்பது எளிதிற் றெளிதல் கூடும். ஆகவே அத்தகைய காரணத்தினுற் பிள்ளைப் பெருமாளையங்காரவர்களைப் பிற்காலத்திய கவிகளுளொருவரெனக் கொள்ளுதல் கூடாது. மேற்கூறியாங்கு அவர் பன்னிரண்டாவது நூற்றுண்டினிடைக் காலத்திருந்தவர் என்று கொள்ளுதலே சால்புடைத்து.

கல்குளம்—குப்புசாமி முதலியார்.

உ

சிவமயம்.

இராமாவதாரச்செய்யுட் பாடாந்தரம்.

இராமாவதாரம் என்பது இராமனுடைய அவதாரத்தை யுணர்த்துவதாகிய ஒரு நூல். இது காப்பியங்களுள்ளே சிறந்ததாகத் தமிழ்நாட்டு அறிஞர்களெல்லாராலும் மதிக்கப்படுவது. கம்பனென்னுஞ் சிறந்த கவியினுலே பாடப்பட்டது. இதனைச் சிலர் மூலபாடமும், சிலர் மூலபாடத்தோடு உரையுமாகப் பலர் அச்சிட்டிருக்கின்றுர்கள். அச்சிட்டபிரதிகளையும், சில ஏட்டுப்பிரதிகளையும் ஒருங்குவைத்து, ஆராய்ந்து பார்த்த விடத்து; ஏட்டுப்பிரதிகளிலே அச்சுப்பிரதிகளிலுள்ள பாடங்களினும் சிறப்பும் பொருட்பொருத்தமுமுடையனவாய்ப் பலபாடங்கள் காணப்படுகின்றன. அவற்

" பாரூர்பல்லவனூர்மதிற்காஞ்சிமாநகர்வாய்ச்
சீரூரும்புறவிற்றிருமேற்றளிச்சிவனை
யாரூரனடியானடித்தொண்டனூரன்சொன்ன
சீரூர்பாடல்வல்லார்சிவலோகஞ்சேர்வாரே."

என்னுமித் தேவாரங்களாற் றெரியவருகின்றது. அகவே, சமணராயிருந்த காலம் அதற்கு முற்பட்ட காலமாதல்வேண்டும். திருக்கலம்பகமும் அவர்கள் சமணராயிருந்தகாலத்தேற்பட்டது என்பது மேற்குறித்த திருக்கலம்பகம் 61-வது செய்யுளாற் றெரியவருகிறது.

றுள்ளே சில கற்போர்க்கு உபயோகமாகுமெனக் கருதி இங்கே எழுதப்படுகின்றன.

பாலகாண்டம்.

நாட்டுப்படலம்.

"சூட்டு டைத்துணைத் தூநிற வாரணம்
தாட்டு ணைக்குடை யுந்ததை சான்மணி
மேட்டி மைப்பன மின்மினி யாமெனக்
கூட்டி னுய்க்குங் குருவிக் குழாமரோ"

என்னும் உள-ம் செய்யுளில், 'சூட்டுடைத்துணை' என்பது, 'சூட்டுடைத்தலை' எனக்காணப்படுகின்றது. 'சூட்டுடை' என்பது துணை என்பதோடு இயைந்து நில்லாமையானும், தலையென்பதோடு இயைந்துநின்று பொருளைச் சிறப்பித்தலானும் 'சூட்டுடைத்தலை' என்பதே பொருத்தமுடைத்து.

"சேம்பு கால்பொரச் செங்கழு நீர்க்குளத்
தாம்பு காலச் சுரிவளை மேய்வன
காம்பு கால்பொரக் கண்ணகன் மால்வரைப்
பாம்பு நான்றெனப் பாய்பசுந் தேறலே." (ஷை)

என்னும் நடு-ம் செய்யுளில் 'கால்பொர' என்பது 'காலிற' எனக் காணப்படுகின்றது. சேம்பு காலிறும்படி தூம்பு காலச் சுரிவளை மேய்வன எனப் பொருள்கொள்ளுமிடத்துக் 'கால்பொர' என்பதினும் 'காலிற' என்பதே சிறப்புடைத்தாதல் காண்க.

"கூற்ற மில்லையோர் குற்றமில் லாமையாற்
சீற்ற மில்லைதஞ் சிந்தையிற் செய்கையா
லாற்ற னல்லற மல்ல திலாமையா
லேற்ற மல்ல திழிதக வில்லையே." (ஷை)

என்னும் நகூ-ம் செய்யுளில், 'சிந்தையிற்செய்கையால்' என்பது 'சிந்தையிற் செவ்வியால்' எனக்காணப்படுகின்றது. 'செய்கை' என்பதிற் பொருள் சிறவாமையிற் 'செவ்வி' என்பதே பொருத்த முண்டத்து. செவ்வி-அழுக்காறின்மை அவாவின்மை முதலிய நற்குணம்.

"காரொடு நிகர்வன கடிபொழில் கழனிப்
போரொடு நிகர்வன புணர்மலை யணைசூழ்
நீரொடு நிகர்வன நிறைகட னிதிசா
லூரொடு நிகர்வன விமையவ ருலகம்." (ஷை)

என்னும் ௪௨௭-ம் செய்யுளில், 'போரொடு நிகர்வன புணர்முலை' என்பது 'போரொடு நிகர்வன பொலன்வரை' எனக் காணப்படுகின்றது. புணர்முலையை உவமை கூறல் சிறப்பின்றாதலானும், வரையையே உவமை கூறல் வழக்காறாதலானும் 'பொலன்வரை' என்றலே பொருத்த முடைத்து. "அரிந்திடு சுமைகளா லவணிப் பேருட—னெரிந்திடச் சேடனு நெளிந்து நீங்கிடத்—தெரிந்திடு போர்கள் சே ணளவுஞ் சேறலால்—விரிந்திடு கதிர்சுலா மேரு வாயவே" எனக் கந்தப்புராணகாரரும் மேருவை உவமை கூறுதல் காண்க. (நாட்டு ௨௨-ம் செய்யுள்)

நகரப்படலம்.

நிலமகண் முகமோ திலகமோ கண்ணோ நிறைநெடு மங்கல நாணோ
இலகுபூண் முலைமே லாரமோ வுயிரி னிருக்கையோ திருமகட் கினிய[னோ
மலர்கொலோமாயோன்மார்பினன்மணிகள்வைத்தபொற்பெட்டியோவா
ருலகின்மே லுலகோ வூழியி னிறுதி யுறையுளோ யாதென வுரைப்பாம்

என்னும் ௨-ம் செய்யுளில், 'வானோ ருலகின்மேலுலகு' என்பது 'மலரோ-னுலகின்மேலுலகு' எனக்காணப்படுகின்றது. வானோருலகின்மேலுலகு அயனுல காதலின், 'மலரோ னுலகின்மே லுலகு' என்றலே பொருத்தமுடைத்து. மலரோனுலகின் மேலுலகு - வைகுந்தம்.

௵

தங்குமாபொருளுந் தருமமுந் துணையாத் தம்பகைப்புலன்களைத் தவிர்க்கும்
பொங்குமாதவமு ஞானமும் புணர்ந்தோர் யாவர்க்கும் புகலிடமான
செங்கண்மால்பிறந்தாண்டளப்பருங்காலந்திருவின்வீற்றிருந்தமைதெரிந்தா
லங்கண்மா ஞாலத் தங்கதொக்கும் பொன்னக ரமரர்நாட் டியாதோ.

என்னும் ௬-ம் செய்யுளில், 'வீற்றிருந்தமை தெரிந்தால்' என்பது 'வீற்றிருந்தன னென்றால்' எனக் காணப்படுகின்றது. 'தெரிந்தால்' என்பது 'என்றால்' என்பது போல நகரினுயர்வைச் சிறப்பித்து நில்லாமையின் 'என்றால்' என்பதே சிறப்புடைத்து. முற்செய்யுளினும் (௫) 'இவ்வேழுலகாளிட மென்றால்' என என்றால் என்னுஞ் சொல்லே கொடுத்துக் கூறுதல் காண்க. என்றால் என்பது ஒரு பொருளின் விசேடத்தை யுணர்த்திவருவதோ ரிடைச்சொல். இதனை ஓர்வார்த்தைப்பாடு என்பர் நச்சினார்க்கினியர் (சிந்தா—குண—௧௦௩-ம் செய்யுளுரை.)

“ பாடகக் காலடி பதுமத் தொப்பன
சேடரைத் தழீஇயன செய்ய வாயின
நாடகத் தொழிலன நடுவு துய்யன
ஆடகத் தோற்றத்த வளவி லாதன.’ (ஷ)

என்னும் ஙக-ம் செய்யுளில், ‘ஆடகத்தோற்றத்த வளவிலாதன’ என்பது, ‘ஆடகத்தோற்றத்த மகளிரல்லன’ எனக்காணப்படுகின்றது. ‘அளவிலாதன’ என்பது சிலேடித்த பொருளை நன்குணர்த்தாமையின் ‘மகளிரல்லன’ என்பதே பொருத்தமுடைத்து. ‘மகளிர்’ என்பது ஆண்டியைந்து நிற்குமிடத்துத் தம் சிலேடைப் பொருளை நன்குணர்த்துதலும் பொருளைச் சிறப்பித்து நிற்றலுங் காண்க.

திருவவதாரப்படலம்.

“வளநகர் முனிவரன் வருமுன் வானவன்
களனமர் கடுவெனக் கருகி வான்மிசைச்
சளசள வெனமழைத் தாரை கான்றன
குளனொடு நதிகடங் குறைக டீரவே” (ஷ)

என்னும் சரு-ம் செய்யுளில், ‘வான்மிசை’ என்பது வான்முகில்எனக் காணப்படுகின்றது. ‘வான்மிசைக் கான்றன’ என்பதிலும் ‘வான் முகில் கான்றன’ என்பதே பொருள்சிறந்து நிற்றலின் ‘முகில்’ என்பதே பொருத்தமுடைத்து.

தாடகை வதைப்படலம்.

ஆயவ னருள்வழி யலர்ந்த தாமரைச்
சேயவ ளெனவளர் செவ்வி கண்டிவட்
காயவன் யார்கொலென் றுய்ந்து தன்கிளை
நாயகன் சுந்தனென் பவற்கு நல்கினன். (ஷ)

என்னும் ஙㅇ-ம் செய்யுளில்,‘ஆயவனருள்வழி யலர்ந்த தாமரை’ என்பது ‘ஆயவனருள் வழிப் பிறந்த வாயிழை’ எனக் காணப்படுகின்றது. பிறந்தமை கூறப்படாமையின் ‘பிறந்தவாயிழை’ என்பதே பொருத்த முடைத்து.

மிதிலைக்காட்சிப்படலம்.

மலைமிசைத் தடத்துகுமழைக்க ணுலிபோன்
முலைமுகட் டுதிர்ந்தன நெடுங்கண் முத்தினஞ்
சிலைநுதற் கடையுறை செறிந்த வேர்வுதன்
னுலைமுகப் புகைநிமி ருயிர்ப்பின் மாய்ந்ததே. (ஷ)

என்னும் சஅ-ம் செய்யுளில், ‘சிலைநுதற் கடையுறை செறிந்த வேர்வுதன்—னுலைமுகப் புகைநிமி ருயிர்ப்பின் மாய்ந்ததே’ என்பது

'சிலைநுதற் கடையுறை செறிந்த வேற்கணு—ளுலைமுகப் புகைநிக ருயிர்ப்பின் மாய்ந்தவே' எனக்காணப்படுகின்றது. நுதற்கடையிற் செறிந்த வேர்வையை உயிர்ப்பு நீக்குதல் கூடாதாகலானும், முத்தினம் உதிர்ந்தன வேர்வுமாய்ந்தன என்பதன்கட் பொருட் சிறப்பின்றாதலானும், உதிர்ந்தனவாகிய முத்தினம் உயிர்ப்பின் மாய்ந்தன என்பதன்கட் பொருள் சிறந்து நிற்றலானும் 'சிலைநுதற்கடையுறை செறிந்தவேற்கணு ளுலைமுகப் புகைநிக ருயிர்ப்பின் மாய்ந்தவே' எனக்கோடலே பொருத்தமுடைத்து. சிலைபோன்ற நுதற்கடையாகிய உறையிற் செறிந்த வேல்போலுங் கண்ணுள் என்பதும் உருவகவணியாய்ப் பொருள் சிறத்தல் காண்க. 'நிமிர்' என்பதினும் 'நிகர்' என்பதும் சிறப்புடைத்தாதல் காண்க.

கார்முகப்படலம்.

"சங்கொடு சக்கரந் தரித்த தானைய
சிங்கவே றல்லனே லிதனைத் தீண்டுவா
னெங்குள னொருவனின் றேற்றி னிச்சிலை
மங்கைதன் திருமணம் வாழுமா லென்பார்."

என்னும் ருஎ-ம் செய்யுளில், 'தரித்ததானைய' என்பது 'தரித்தகையுடை' எனக்காணப்படுகின்றது. 'தானைய' என்பது முன்னும் பின்னும் இயைந்து நில்லாமையின் 'கையுடை' என்பதே பொருத்தமுடைத்து.

"உழுகின்ற கொழுமுகத்தி னுதிக்கின்ற கதிரொளிபோற்
பொழிகின்ற புவிமடந்தை திருவெளிப்பட் டெனப்புணரி
எழுகின்ற தெள்ளமுதோ டெழுந்தவளு மிழிந்தொதுங்கத்
தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி தோன்றினாள்" (ஷ)

என்னும் சஎ-ம் செய்யுளில் 'பொழிகின்ற புவிமடந்தை திருவெளிப்பட்டென' என்பது 'பொழிகின்ற புவிமடந்தை யுருவெளிப்பட்டென' எனக்காணப்படுகின்றது. 'புவிமடந்தை திரு' என்பதிலும் 'புவிமடந்தையுரு' என்பதே பொருளுக் கியையுடைத்தாதல் காண்க.

(இன்னும் வரும்)

இங்ஙனம்,
சி. கணேசையர்,
புன்னாலைகட்டுவன்,
யாழ்ப்பாணம்.

பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்.

முதல் உபந்நியாசம்.

(பக்கத் தொடர்ச்சி)

இது தான் நாம் கவனிக்கவேண்டிய குறியாகும். அதனை அடைதற்குரிய சாதனமென்னவென்றால்:— ஜனங்களுக்குக் கல்வி கற்பித்து அறிவையூட்டித் தேசமுழுமையும் மேம்பாடுபெறச் செய்தலேயாம். முற்காலத்திருந்த கௌரவத்தையே உன்னி உன்னிப் பாராட்டிக் கொண்டிருத்தலால் யாதொருபயனும் கிடையாது. நீங்களே முயற்சிசெய்து மேம்பாடடையாவிட்டால், இந்தியாவிற்கு விமோசனமும் உயர்வும் வாரா. ஒருதேசத்தாரின் மேம்பாடு, அத்தேசத்தார்களில் ஒவ்வொருவரின் மேன்மையளவைப் பற்றியதாகவே இருக்கும். இந்தியர் மேன்மைபெறுதொழிவராயின் இந்தியா உயர்வைப்பெறுவதென்பது எங்ஙனம்? முன்பிரஸ்தாபிக்கப்பெற்ற—உலகமெங்கும் பரவிநிகழும் இராஜ்ஜியத்தின் ஒருபாகத்தை வகிக்கவல்ல யோக்கியதை உங்களிடம் இருக்கிறதா? அதன் உத்தரம் தேவதைகளுக்குத் தான் தெரியும், தகுந்த சந்தர்ப்பம் தேவதாநுக்கிரகத்தால் நேர்ந்திருத்தல்பற்றி, அது சாத்தியமென்றே மதிக்கத்தக்கது. அநுகூலம் பயப்பதற்கு இடமின்றேல், தெய்வங்கள் சந்தர்ப்பத்தை உண்டுபண்ணு. அநுகூலம் லபிக்கும்படி நாம் முயலவேண்டும். தீரமான சித்தவிருத்தியுள்ளவர்களாய், வருங்காலத்து நமக்கு ஏற்படும் சிரேயஸைக்கருதி அதற்குத் தக்கவாறு முயலுவோமாயின், அவ்வநுகூலங்கள் சித்திக்கும்.

நம்முடைய நோக்கம் இது தான். இச்சமயத்துக்கு ஏற்ற கேள்வியொன்று உண்டு;— இக்காலகதிக்குத் தக்க வாறு, இந்தியா தன்னை இணக்கிக்கொள்ளல் கூடுமா? இந்தியாவில் இப்போதுள்ள நிலைமையிலேயே இருப்போம் என்பார் ஒருசாரார். அது நாசத்தின் அறிகுறியாகும். கடவுளால் அமைக்கப்பெற்ற கால தேசவர்த்த

மானங்களுக்கு நேர்மையாய், மனம் வாக்குக் காயங்கள் நடப்பித் தற்குத் தக்கவாறே ஜீவகதியும் இருக்கும். 'காலகதி' என்று சிலர் உற்சாகத்தோடும், சிலர் அதை யொட்டியே நடக்கவேண்டுமென்றும் சிலர் அதனைத்தடுக்கவேண்டுமென்றும், இவ்வாறு, பலவாறாகப் பிரஸ் தாபிக்கின்றனர். காலகதியென்றால் என்ன? உள்ளபடி யுணர்ந்தால் ஈசுவர சங்கற்பம், மனிதனை, தன் விகாச கதியின் வழியே இழுத்துச் செல்கின்றது. அதன் கதியை மனிதன் தன் அறிவின்மையாற் றடுத்தும், தவறுகளால் எதிர்த்தும், குற்றங்களால் மறைத்தும் இடையிடையே செய்து வருகிறான். காலகதி--இன்னவிதமென் பதைக் கவனித்துத்தெளியவேண்டும். அதனால் ஈசுவர சங்கற்பம் இம்மாதிரி உலகத்தை நடத்துகிறதென்பதைத் தெரிந்துகொள்ளல் கூடும். ஈசுவரசங்கற்பமின்றி இவ்வுலகம் எவ்வாறு நடை பெறும்? அச்சங்கற்பத்துக்கு விரோதமாக மனிதன் ஒழுகக்கூடுமென்று நினைக்கவுமுடியுமா? மாறிமாறிப் போர்புரியும் சங்கற்பங்கள், அறி வின்மையால் விளைந்த துஷ்கருமங்கள், தவறுகள், குற்றங்கள், குறைகள், பாவங்கள்---இப்படி--- மனிதனிடம் எத்தனையோ இருக்கின்றனவே; இவற்றின் மத்தியில், ஈசுவரன், தமது தவறாத சங்கற்பம் நிறைவேறுமாறு ஜனங்களின் துஷ்கருமங்கள், அறிவின முதலியவற்றையே தம் கருவிகளாக அமைத்துக்கொண்டு, தாங்கரு திய மேன்மையான காரியங்களைக் கொண்டுசெலுத்துகின்றார். மனி தன், தண்டுசக்கரத்தில் வைக்கப்பெற்ற குயவன் கைமண்போல்வன். குயவன் போல்வன்ஈசுவரன். ஈசுவரன் தண்டுசக்கரத்தைச் சுழற்று கிறான். மண்ணான மனிதன் மனம், பற்பல பாண்டங்களாக, ஈசுவ ரன் சுழற்சியால் அமைகின்றது. அவன் அசைய அணுவும் அசை யும். அவனின்றி அணுவும் அசையாது. குப்தமான காலகதிக்கு விரோதமாக நாம் இயல்வது, குருட்டுத்தனமாகவும், அறிவினமாக வும் முடியும். சிலகதிகள் அத்துணை ஆழமாக இரா. ஆனால் உலக விகாசத்திற்குரிய ஆழ்ந்த முக்கியமான காலகதியின் போக்கை உற்றுநோக்கித் தெளிதல் வேண்டும். அதனைச் சார்ந்தே நம் முயற் சியும் நடைபெறல் வேண்டும். அதனால், ஈசுவரசங்கற்பம் முடி வுறும். அதற்கு விருத்தமான நமது முயற்சி சிதறுண்டுபோம். அதற்கொத்தவை ஈசுவரகாரியங்களேயாம். நாமும் அவர்வேலையைச்

செய்பவர் ஆவோம். பிடிவாதமாய் ஒருவன் ஒன்றைக்கைப்பற்றிக் கொண்டு, "முற்காலத்தில் இத்தகைய காரியம் நன்மைபயந்தது; இப்போதும், இனியும் அவ்வாறே அமையும். காலகதி என்பதை அநுசரித்து நடக்கமாட்டேன்" என்று இயலுவானாயின், அது நாசத்துக்கே ஹேதுவாகும். அவன் உயர்ந்த சிலாபாவமாவன்; தான் மேற்போகாது வரவரத் தாழ்மையடைவன். அவ்வாறே, முன்னேக் காமலும், முன்னோர்பாற் சிரத்தை பாராட்டாமலும், இக்கால நிலைமையின் காரணங்களை விசாரியாமலும், முரட்டுத்தனமாகவும், தீவிரமாகவும் நடப்பவனும் நாசத்தைத்தான் அடைவன். முன்னவனுக்கும், பின்னவனுக்கும் இதே கதிதான். அபாயமான இவ்விருவர் நெறிகளைத் தவிர்த்து, நடுவில், நம் தேசத்துக் கப்பலைக் கடத்தவேண்டும். ஒன்றையும் மாற்றுதவனுடைய வழியை அநுசரித்தால்,இந்தியா நிலைபெறாது. எல்லாவற்றையும் மாற்றுபவன் வழியை அநுசரிப்பினும், இந்தியா ஒழிந்துவிடும். அறிஞர் நடக்கும் வழி இவ்விரண்டு மல்லாத வேறொன்றாம். இந்தியாவிற் குரிய இலக்ஷணம் ஞானத்தன்மை. அதனை எவ்வாறு காப்பது? இதுவே நாம் ஆராய வேண்டிய விஷயம். ஏனெனில்; இனி நடைபெறும் உலக நிகழ்ச்சியில், இந்தியா வகிக்கவேண்டிய உத்தரவாதம், இந்த ஞானத் தன்மையேயாம். இக்குண சீலத்தைக் காப்பாற்றிக் கொண்டே, ஏனைய ஜாதியாரிடமிருந்து கிரகிக்க வேண்டிய ஒவ்வொரு நன்மையான விஷயத்தையும், உயர்வு பயக்கும் ஒவ்வோர் அறிவையும் கைப்பற்றி, இந்தியரின் சுபாவத்திற் கலக்கும்படி புகவிட வேண்டும். நல்லவற்றை நாடி யொழுகவும், தீயவற்றைக் கடிந்து விலக்கவும் வேண்டும். இந்தியாவின் இலக்கணத்திற்குப் பொருந்தாதவற்றை மேற்றிசையாரிடமிருந்து கைக்கொள்ளாமலும், காலகதியறியாதே பழமையையே பாராட்டிச் சிலாபாவமாகாமலும், நாம் நடக்க வேண்டும். புதியன புகுத்தலும், பழையன கழித்தலும் நம்முடைய கடமைகளாம்.

இதுதான் நாம் தீர்மானிக்க வேண்டுவது. உள்ளவாறு தீர்மானிப்போமாயின், இனி இந்தியாவுக்கு வரப்போகும் மேன்மையும் சம்பத்தும் முன்பு இருந்திரா; அவ்வளவு உயர்ந்தவை. அவ்வாறு

சரியானபடி தீர்மானிக்காமற் போனால் இந்திய தேசம் என்ற பெயரே போய்விடும். இந்தியாவின் அறிவும் ஞானமும் அந்நிய தேசம் புகுந்து விடும். ஆரிய வகுப்பின் மூத்த புதல்வரான இந்தியாவின் ஜன்னிப தர்மத்தை அந்நியருள் எவரேனும் ஒருவர் வகிப்பர். ஆனால், உள்ளபடி, இந்தகதி இந்தியாவுக்கு ஒருக்காலும்வராது. உலகத்தின் கண்ணினின்றும் இந்தியா மறையாது. தெய்வங்கள் ஆளுகை உள்ளமட்டும் தெய்வாநுகூலம் பெற்றுள்ள இந்தியா உலகசரித்திரத்தினின்று விட்டு விலகாது.

இதில் தவறுதல் ஒன்று செய்யாதேயுங்கள். மேம்பாட்டை அடைய வேண்டின், தியாகத்தினாற்றான் அது சபலமாகும். தியாகமின்றி நன்மை உண்டாகாது. தியாகாக்கினி தேவலோகம் எட்டினாலன்றிப் பெருத்த லாபங் கிட்டா. இந்தியர்கள் தங்கள் தேசத்தின் க்ஷேமத்தையும் மேம்பாட்டையும் கருதித், தங்களைத் தாங்களே தியாகஞ் செய்ய வேண்டியிருப்பின், செய்ய சம்மதிக்கவேண்டும். இல்லையேல், விமோசன மில்லை. தப்பெண்ணங்கள் பெலபாயிருக்கின்றன. தீரர்கள் அவற்றைத் தாக்கித் தொலைக்க வேண்டும். இம்முயற்சியிற் பலர் தடுமாறுவார்கள். அவ்வாறு, பலர் முயற்சிக்க, தப்பெண்ணங்கள் என்ற மதில் சற்று இடங்கொடுக்கும்; பின்னர் இலகுவாக வசப்படும். என் முன்பாக இருக்கின்றவர்களிற் பேச்சு மாத்திரம் இல்லாது, செய்கை புரிய வல்லவர்கள் யாரேனும் இருக்கிறீர்களா? வேலை செய்யத் துணியாமல், நான் சொல்லும் வார்த்தைகட்கு இலகுவான உத்தரமாகக் கைகொட்டிக் கொக்கரித்து விடுவீர்களா? இச்சபையிலிருந்து கேட்டு 'ஓம்' என்று அங்கீகாரஞ் செய்து விட்டு, சபைகலைந்தபின், வழக்கம்போலத் தத்தம் சொந்தக் காரியங்களை, காதில் விழாதவர்களைப்போற் செய்துகொண்டிருப்பீர்களா? இந்திய தேசம் உய்யுமாறு, உங்களது கௌரவ பதவியையும், செல்வத்தையும், உங்கள் உயிரையுங்கூட, அதிக சிரமமான காரியமாகிய உங்கள் புதல்வருயிரையுங்கூடத் தியாகஞ் செய்யத் துணிவீர்களா? உங்களிற் சிலரேனும் இத்துணிவுடையவர்களாயின், இந்தியாவிற்கு விமோசனம் ஆகிவிட்டது. அன்றி, நீங்கள் கோழைத்தன முடையவர்களாக விருப்பின், துர்க்கதி வந்தே தீரும்; இந்தியா போய் விடும்; இந்தியர் இனி இரார்.

இனிச் செல்லப் புகும் வியாசங்கட்கு இதுகாறும் முகவுரையாகப் பிரஸ்தாபித்த விஷயங்கள் இத்தன்மையன: இனி, முற்கால தர்மங்களின் உயர்வையும், இக்கால ஆசாரங்களையும் இனிச்சீர்திருத்த வேண்டிய முறைகளையும் பற்றி விசாரிப்போம்.

இவ்விசாரணையில், சாஸ்திரங்களினின்று மேற்கோள்களாக அநேக ஆதாரங்களைக் காட்டவும், அவற்றின்மீது பாஷ்யகர்த்தர்கள் புரியும் சண்டையிற் புகவும் மாட்டேன். ஒன்றற்கொன்று முற்றும் விருத்தமான விஷயங்களுக்கு முன்பின்சம்பந்தமும் சந்தர்ப்பமும் வாய்த்துத் தனித்தனி ஆதார சாஸ்திரமேற்கோள்களும் கிடைக்கலாம். பொதுவான ஆதாரசாஸ்திரங்கட்கு, அவரவர்க்கு வேண்டியவாறு அருத்தம் பண்ணிக்கொள்ளலாகும். ஆனால் நான் கற்றறிந்தபடியும், நான் நேரிற் பிரத்தியக்ஷித்துக் கண்டதையும் உங்களுக்குத் தெரிவிக்கின்றேன். அத்தர்மங்களின் அழகும், அஃது அறிவிற்கு நேர்மையாக விருத்தலும் உங்களுக்குத் தானே புலனும். சிற்சில சந்தர்ப்பங்களில், உதாரணமாக, சாஸ்திர மேற்கோள்கள் எடுத்துக் காட்டுவேன். ஆனால், சாஸ்திரங்களைப் பெரிதும் ஆராய்ச்சி செய்து அதன் மூலம் இந்த தருமங்களை அறிந்தேனல்லேன். ஆயினும், உள்ளபடிநிகழ அந்த தருமங்களைக்கண்ணுற்றேன்.

(இன்னும் வரும்.)

புத்தகக் குறிப்பு.

தமிழ்ச்சொல்லகராதி (அகரவர்க்கமளவும்):—இதுகாறும் வெளிவந்த தமிழகராதிகள் போலன்றித், தமிழ்மக்கட்கெல்லாம் பெரும் பயனளிக்கத்தக்கவாற்றாற் சிறந்த முறைகளைத்தழுவி, யாழ்ப்பாணம் ஊர்காவல் நீதிபதியாயிருந்தவரும், இருபெருஞ்செல்வமும் ஒருங்குடையே சிறக்கப்பெற்றோருமாகிய காலஞ்சென்ற ஸ்ரீமாந்-கு. கதிரைவேற்பிள்ளையவர்கள், பலவருடங்களாக ஓரகராதிதொகுக்கப் பெரிது முயன்றுவந்தசெய்தி, நம் "செந்தமிழ்" முதற்றொகுதி ௩-

ஆம்பகுதியுள், சுன்னுகம்வித்துவான் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் எழுதிய "அகாராதி" என்ற விஷயத்தைக்கண்ணுற்றுப் படித்த நண்பர்பலரும் அறிந்திருத்தல்கூடும். இப்போது அவ்வகராதியில் அகரவர்க்கமுடிய அச்சிடப்பட்டுக் கட்டுதலமையப்பெற்ற பிரதியொன்று, அதனைத்தொகுத்தபிள்ளையவர்களது அருமைப் புதல்வரும், கொழும்பு அத்துவகாத்துமாகிய ஸ்ரீமாந்-பாலசிங்கமவர்கள் எமது பார்வைக்கு விடுத்துள்ளார்கள். இவ்வகராதி, ஏனையவற்றிற் காணவுங்கிடையா இலக்கியச்சொற்கள், வழக்குச்சொற்கள் சாஸ்திரபரிபாடைமுதலிய எத்துணையோ சொற்களின் பொருள்களை நனிவிளக்கியும், அவ்வவற்றிற்கு மேற்கோளிடங்காட்டியும் கற்றார்க்குங் கல்லார்க்கும் ஒருங்குபயனளிக்கவல்ல நிலையில் அமைக்கப்பெற்றுள்ளது. தமிழ்நாட்டாரொவ்வொருவர்கையினும் இருத்தற்குரியது இதனினுஞ்சிறந்ததொன்று உண்டோ? ஆங்கிலமுதலிய மொழிகள்வழங்கும் மேற்றேயங்களில், இத்தகைய பெருமுயற்சிகளும், அதனைக்கொண்டுய்க்கவல்லகருவிகளும் எளியனவேயாயினும், கற்பாருகிக் கற்பாரையூக்கியாதரிப்பாருமருகிவருகின்ற இக்காலத்து, இவ்வாறுய பெருமுயற்சியான் ஓரகராதிவெளிவருதல், நமக்கெல்லாம் அருமையும்பெருமையுமுடையதேயாம்; தமிழ்க்கடலுண்டு, தமிழ்ச்சொற்பொருண்மாரியைத் தமிழ்மக்கள் உள்ளங்குளிரப் பொழிந்துசென்ற ஸ்ரீமாந்-கதிரைவேற் பிள்ளையவர்களது பெருநோக்கத்தை அவர்களுடைய அருமைப்புதல்வர் இனிதுமுற்றச்செய்வர் என்னும் உறுதியுடையோம்; இதன்பிரதியொன்று எமதுபார்வைக்கு விடுத்துதவிய ஸ்ரீமத் பாலசிங்கமவர்கட்குப் பெரிதுநன்றிகூறுகின்றோம்.

பத்திராசிரியர்.

எஅ சாவாத வில்லை பிறந்த வுயிரெல்லாந்
தாவாத வில்லை வலிகளு—மூவா
திளமை யிசைந்தாரு மில்லை வளமையிற்
கேடின்றிச் சென்றாரு மில்.

இ-ள்; பிறந்த உயிரெல்லாவற்றுள்ளும் சாவாத உயிர்கள் யாவுமில்லை; வலிகளுள்ளுங் கெடாத வலிகளில்லை; மூத்துக்கழியாத இளமையைப் பெற்றாரும் இல்லை; செல்வத்தாற் கேடின்றிச்சென்றாருமில்லை எ-று.

எகூ சொல்லா னறிப வொருவனை மெல்லென்ற
நீரா னறிப மடுவினை யார்கண்ணு
மொப்புரவி னானறிப சான்றாண்மை மெய்க்கண்
மகிழா னறிப நறா.

இ-ள்; ஒருவனது நன்மையையும் தீமையையும் அவன் சொல்லானே அறிப; மெல்லென்று நொய்தாய நீரானறிப மடுவினதுநன்மையை; அதுபோல, யார்மாட்டுஞ் செய்யும் ஒப்புரவினானே அறிப ஒருவனது சான்றாண்மையை; உடம்பின்கணுள்ள களிப்பானே அறிப நறாவுண்டமையை; எ-று.

அ0 நாவன்றோ நட்ப றுக்குந் தேற்றமில் பேதை
விடுமன்றோ வீங்கப் பிணிப்பி னவாஅப்
படுமன்றோ பன்னூல் வலையிற் கெடுமன்றோ
மாறு ணிறுக்குந் துணிபு.

இ-ள்; நா நட்புக்கெடுக்குமன்றோ: ஆதலால் அதனைப் பாதுகாக்க; தெளிவில்லாத பேதை இறுகவே துன்பஞ்செய்து பிணிப்பிற் றங்கைப் பொருளை விடுமன்றோ; தன்னாசை அகப்பட்டுக்கெடுமன்றோ பலநூல்களையுங் கற்றுவல்ல வலையின்கண்ணே; ஒருவன் தன்னைக்கெடுக்குமன்றோ எல்லாரோடும் பகைகொள்ளும்பகைமையின்கட் டன்னைநிறுத்துந் துணிபுஎ-று.

அக கொடுப்பி னசனங் கொடுக்க விடுப்பி
னுயிரிடை யீட்டை விடுக்க வெடுப்பிற்
கிளையுட் கழிந்தா ரெடுக்க கெடுப்பின்
வெகுளி கெடுத்து விடல்.

இ-ள்; ஒருவற்குக் கொடுப்பானாயின் றன்னுணவினைக் கொடுக்க; ஒன்றனை நீக்குவானாயின் ஒன்றனுயிர்க்கு இடையூறு வந்தனவற்றை நீக்குக; சிலரை எடுப்பானாயிற் றன்கிளைகளுட் டாழ்ந்தாரை எடுக்க; ஒன்றனைக்கெடுப்பானாயிற் றன்மனத்துள்ள வெகுளியைக் கெடுத்துவிடுக; எ-று. (எகூ)

அஉ நலனு மிளமையு நல்குரவின் கீழ்ச்சாங்
* குலனுங் குடிமையுங் கல்லாமைக் கீழ்ச்சாம்
வளமில் குளத்தின்கீழ் நெற்சாம் பரமல்லாப்
பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு.

இ-ள்; வடிவழகும் இளமையும் வறுமைவந்தவிடத்திற் கெடும்; குலனுங் குடிப்பிறப்புங் கல்லாமையுளதாயின் அவ்விடத்துக் கெடும்; வருவாயில்லாத குளத்தின்கீழ் விளையுநெற் கெடும்; மிக்க பண்டத்தின்கீழ்ப் பகடு கெடும்; எ-று. (அ0)

அரு நல்லார்க்குந் தம்மூரென் றாரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றாரில்லை—யல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றாரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர்.

இ-ள்; கல்வியான் நல்லார்க்குந் தம்மூரென்று ஊரில்லை: எல்லாவூரும் பயன்படும்; நன்னெறிசெல்லும் அருந்தவர்க்குத் தம்மூரென்று ஊரில்லை: எவ்வூரின்கண்ணும் பற்றுடையரல்லர்; கடையாயினார்க்குந் தம்மூரென்று ஊரில்லை: பயன்படா; தங்கைப்பொருளுடையார்க்கும் எவ்வூரும் ஊராய்ப் பயன்படும்; எ-று. (அக)

அச கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்ற
மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய்கூற்ற
† மல்லவை செய்வார்க் கறங்கூற்றங் கூற்றமே
‡ இல்லத்துத் தீங்கொழுகு வாள்.

இ-ள்; கற்றறியா வொருவர்க்குத் தம்வாயிற்சொற் கூற்றமாம்; மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காயே கூற்றமாம்; மற்றைத்தீவினைகளைச் செய்வார்க்கு அறக்கடவுளே கூற்றமாம்; ஒருவன் மனையின்கணிருந்து தீதாக ஒழுகுவாள் அவற்குக் கூற்றமாம்; எ-று. (அஉ)

---

* குலம் ஈண்டுவருணம்.

† "அல்லவை செய்தார்க் கறங்கூற்ற மாமென்னும், பல்லவையோர் சொல்லும் பழுதன்றே' என்றார் இளங்கோவடிகளும் (சிலப்-வழக்குரை காதை).

‡ 'இல்லிருந்து தீங்கொழுகு வாள்' எனவும் பாடம்.

அரு நீரான்வீ றெய்தும் விளைநில நீர்வழங்கும்
பண்டத்தாற் பாடெய்தும் பட்டினங் கொண்டாளு
நாட்டான்வீ றெய்துவர் மன்னவர் கூத்தொருவ
னாடலாற் பாடு பெறும்.

இ-ள்; நீரினுற் சிறப்புப்பெறும் விளைநிலம்; கடலான்வரும் பண்டத்தானே பெருமைபெறும் பட்டினங்கள்; தாங்கள் கொண்டு ஆளப்படுகின்ற நாட்டினுற் சிறப்புப்பெறுவர் அரசர்; நாடகங்கள் வல்லானொருவன் ஆடுதலாற் பெருமை பெறும்; எ-று.

'பாடலாற் பாடு பெறும்' என்று பாடமோதுவாருமுளர். (அங)

அசு ஒன்றாக்கல் பெண்டிர் தொழினல மென்று
நன்றாக்க லந்தண ருள்ளம் பிறனாளு
நாடுக்கன் மன்னர் தொழினலங் கேடுக்கல்
கேளி ரொரீஇ விடல்.

இ-ள்; ஒருமைப்பட்ட மனத்தாற் றங்கொழுநர் வழியே முயன்றொழுகுதல் பெண்டிர்க்குத் தொழினலமாவது; எஞ்ஞான்றும் அறத்தினையே முயன்றொழுகுதல் மறையவர்க்குக் கருத்தாவது; பிறனோரரசன் ஆளும் நாட்டினைக் கொள்ள முயறல் மன்னரது தொழினலமாவது; தமக்குக் கேட்டினை முயன்றொழுகுதலாங் தங்கேளிரைநீக்குதல்; எ-று. (அச)

அஎ கள்ளாமை வேண்டுங் கடிய வருதலாற்
றள்ளாமை வேண்டுந் தகுதி யுடையன
நள்ளாமை வேண்டுஞ் சிறியரோ டியார்மாட்டுங்
கொள்ளாமை வேண்டும் பகை.

இ-ள்; களவு காணுமை வேண்டும்; அஞ்சத்தகுந் துன்பத்தொடு வருதலாற் றனக்குத் தகுதியுடைய ஒழுக்கத்தை நீங்காமை வேண்டும்; சிறியாரோடு நட்புக்கொள்ளாமை வேண்டும்; யாவர்மாட்டும் பகைகொள்ளாமை வேண்டும்; எ-று. (அரு)

அஅ பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்துத்
தருக்குக *வொட்டாரைக் கால மறிந்தாங்
கருக்குக யார்மாட்டு முண்டி சுருக்குக
செல்லா விடத்துச் சினம்.

* 'மாற்றாரை' எனவும் பிரதிபேதம்.

இ-ள்; நட்டாரை நன்மையின்கட் செலுத்திப் பெருக்குவிக்க; பகைவரைக் காலமறிந்து வலிசெய்க; யாவர் மனையகத்தும் உண்டலைத் தவிர்க; தனக்குச் செல்லாவிடத்திற் சினத்தைச் சுருக்குக; எ-று. (அசு)

அகூ மடிமை கெடுவார்க ணிற்குங் கொடுமைதான்
பேணாமை செய்வார்க ணிற்குமாம் பேணி
னாணின் வரைநிற்பர் நற்பெண்டிர் நட்டமைந்த
தூணின்வரை நிற்குங் களிறு.

இ-ள்; கெடக்கடவார் மாட்டு முயற்சியின்மை நிற்கும்; பிறர் விரும்பாதன செய்வார்மாட்டுக் கொடுமை நிற்கும்; விரும்பப்பட்ட நாணெல்லையின்கண் நிற்பர் நற்பெண்டிர்; நட்டு அமைவுடைத்தாய தூணின்கண் நிற்பது களிறுவது; எ-று. (அஎ)

கூO மறையறிப வந்தண் புலவர் முறையொடு
வென்றி யறிப வரசர்க ளென்றும்
வணங்க லணிகலஞ் சான்றோர்க்கஃ தன்றி
யணங்கல் * வணங்கின்று பெண்.

இ-ள்; மறைநூலை அறிவர் அந்தணராய புலவர்; நடுவு செய்கையொடு பகைவரை வெல்கையை அறிவர் அரசர்; எஞ்ஞான்றும் எல்லார்க்கும் பணிந்தொழுகுதல் சான்றோர்க்கு அணிகலமாவது; அப்பெற்றியின்றித் தெய்வத்தைச் சார்ந்தொழுகுதலின்றியே கொழுநனையே தொழுவது பெண்ணாவது; எ-று. (அஅ)

கூக பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள் காப்பி
பெட்டாங் கொழுகும் †பிணையிலி—முட்டினுஞ் [னும்
சென்றாங்கே சென்றொழுகுங் காமங் கரப்பினுங்
கொன்றான்மே னிற்குங் கொலை.

இ-ள்; பெண்டிர்க்குச் சொல்லிய ‡கற்புடைமைநெறியின்கண்ணே யுளளாய் ஒழுகும் குணமுடையாள்; எல்லாக்காவலும் உளவாயினும் தானினைந்தபடியே ஒழுகும் நல்லாரான் விரும்பப்படாதாள்; இடையூறுபட்டு முடியாதாயினும் சென்றவிடத்தே சென்றொழுகுங் காமமானது; மறைக்கினுங் கொன்றான்மேலே வெளிப்படுங் கொலையானது; எ-று. (அகூ)

---

* 'வணங்குவ' என்னும் பாடம்.
† 'பிணியிலி' எனவும் பாடம். பிணி - பிணிப்பு.
‡ 'உண்மைநெறியின்கண்ணே' எனவும் பாடம்.

கூஉ வன்கண் பெருகின் வலிபெருகும் பான்மொழியா
ரின்கண் பெருகி னினம்பெருகுஞ் சீர்சான்ற
மென்கண் பெருகி னறம்பெருகும் வன்கட்
கயம்பெருகிற் பாவம் பெரிது.

இ-ள்; ஒருவர்க்கு அஞ்சாமை பெருகின் வலிபெருகும்; பால்போன்ற மொழியினையுடைய மனைவியர் கண்ணோட்டம் பெருகிற் சுற்றம் பெருகும்; புகழமைந்த *அருள்பெருகின் அறவினை பெருகும்; வன்கண்மையுடைய கீழ்மைக்குணம் பெருகிற் பாவம் பெரிது; எ-று. (கூ0)

கூங இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றங் குற்றந்
தமரல்லார் கையகத் தூண்.

இ-ள்; இளமைக்காலத்துக் கல்லாதொழிதல் குற்றமாம்; வருவாயில்லாத காலத்து வண்மை குற்றமாம்; தனக்குச் சுற்றத்தாரில்லாத காலத்துப் பிறரொடு வெகுடல் குற்றமாம்; தமரல்லாதார் கையகத்து உணவையுண்டலுங் குற்றமாம்; எ-று. (கூக)

கூச எல்லா விடத்துங் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடறீது—நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பிற் குலந்தீது
கொள்கை யழிந்தக்†கடை.

இ-ள்; நன்மை பயந்தாயினும் எல்லாவிடத்துங் கொல்கைதீதாம்; புதல்வனைக் கல்லாது வளரவிடுதல் தீதாம்; நல்லாருடைய வடிவழகு தீதாம் நாணில்லாராய் நிற்பின்; தாம் பிறந்த குலந்தீதாம் குலத்துக்குத்தக்க ஒழுக்கமழிந்தவிடத்து; எ-று. (கூஉ)

கூரு ஆசார மென்பது கல்வி யறஞ்சேர்ந்த
போக முடைமை பொருளாட்சி‡யார்கண்ணுங்
கண்ணோட்ட மின்மை முறைமை தெரிந்தாள்வா
னுண்ணாட்ட மின்மையு மில்.

---

* 'வளம்பெருகின்' எனவும் பாடம்.
† 'யழிந்தவிடை' எனவும் பாடம்.
‡ "ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந், தேர்ந்துசெய் வஃதே முறை" (திருக்குறள்-ருசுக.)

இ-ள்; ஒருவற்குக் கல்வியின்பயனாவது ஆசாரமென்று சொல்லப்படுவது; பொருளாட்சியின் பயனாவது அறத்தைச்செய்து இன்பத்தை நுகர்தல்; எவர்மாட்டுங் கண்ணோடாமை நடுவுசெய்தன் முறைமையாவது; ஆராய்ந்து அரசினையாள்வான் *மனத்தாலாராயாது ஒன்றனையுஞ் செய்தலில்லை; எ-று. (௬௩)

௬௪ கள்ளி னிடும்பை களியறியு நீரிடும்பை
புள்ளினு ளோங்க லறியு நிரப்பிடும்பை
பல்பெண்டி ராள னறியுங் கரப்பிடும்பை
கள்வ னறிந்து விடும்.

இ-ள்; கட்பெருமையான்வரும் இடும்பையைக் கள்ளுண்டு களிப்பவன் அறியும்; நீர்பெருமையான் வரும் இடும்பையைப் புள்ளினுள்வைத்துச் சாதகப்புள்ளறியும்; பொருளைத்தேடும் இடும்பையைப் பல்பெண்டிராளன் அறியும்; கரத்தலருமையின்கண்வரும் இடும்பையைக் கள்வன் அறியும்; எ-று. (௬௪)

௬௫ வடுச்சொ னயமில்லார் வாய்த்தோன்றுங் கற்றார்வாய்ச்
சாயினுந் தோன்றா கரப்புச்சொற் றீய
பரப்புச்சொற் சான்றோர்வாய்த் தோன்றா கரப்புச்சொற்
கீழ்கள்வாய்த் தோன்றி விடும்.

இ-ள்; பிறர்க்குப் பழியாயின கூறுதல் ஈரமில்லாதார்வாயிற் றோன்றும்; கற்றோர்வாயின்கட் சாயினும் உளவாகா வஞ்சனைச்சொல்; தீயவற்றைப்பரப்புஞ்சொல் அமைந்தார்வாயின்கட் டோன்றா; இரந்தார்க்கு இல்லையென்னுங் கரப்புச்சொற் கீழ்மக்கள்வாயின்கட் டோன்றும்; எ-று. (௬௫)

௬௬ வாலிழையார் முன்னர் வனப்பில்லார் பாடிலர்
சாலு மவைப்படிற் கல்லாதான் பாடிலன்
†கற்றா னொருவனும் பாடிலனே கல்லாதார்
பேதையார் முன்னர்ப் படின்.

இ-ள்; வாலிய அணியையுடைய மகளிர்முன்னர் அழகில்லாதார் பெருமையிலர்; நிரம்பிய அறிவினையுடைய அவையிற்புக்காற் கல்லாதான் பெருமையிலன், கற்றவனும் பெருமையிலன் கல்லாதார் முன்னரும்: பேதையார் முன்னரும்; எ-று. (௬௬)

---

* 'கருத்துள்நாடாது' எனவும் பாடம்.

† கற்றானொருவனும் கல்லாதார் முன்னர்ப்படிற் பாடிலனே எனவும், கற்றானொருவனும் பேதையார்முன்னர்ப்படிற்பாடிலனே எனவும் பிரித்து முன்னவற்றோடு நான்காக்குக.

கூகூ மாசு படினு மணிதன்சீர் குன்றுதாம்
பூசிக் கொளினு மிரும்பின்கண்—மாசொட்டும்
†பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும்.

இ-ள்; நன்மணி மாசுபட்டனவாயினுந் தன்விழுப்பங் குன்றுதாம் கழுவிக்கொள்ளினும் இரும்பின்கண் மாசடையும்; தளைமுதலாயினவற்றுள்ளிட்டு ஒறுப்பினும்: அறிவுகொளுத்தி அவனறிவை விளக்கினும் கீழாயினுன் றன்செய்கைகளாங்கீழ்மையைக் காட்டிவிடும்; எ-று. (கூஎ)

க00 எண்ணெக்குஞ் சான்றோர் மரீஇயாரிற் றீராமை
புண்ணெக்கும் போற்ரு ருடனுறைவு—பண்ணிய
யாழொக்கு நட்டார் கழறுஞ்சொல் பாழொக்கும்
பண்புடையா ளில்லா மனை.

இ-ள்; அறிவினையொக்கும் மருவியமைந்தாரை நீங்காமை; புண்ணினையொக்கும் பகைவருடன் உறைந்தொழுகுதல்; பண்ணிய யாழோசையை யொக்கும் நட்டார்கழறுஞ்சொல்: குணமுடையமனையாளை இல்லாத மனை பாழினையொக்கும்; எ-று. (கூஅ)

கOக ஏரி சிறிதாயி னீருரு மில்லத்து
வாரி சிறிதாயிற் பெண்ணூரு மேலைத்
தவஞ்சிறி தாயின் வினையூரு மூரு
முரன்சிறி தாயிற் பகை.

இ-ள்; குளஞ்சிறிதாயின் நீர்போம்; மனையிற்புகும் வருவாய் சிறிதாயின் மனையாள் கொழுநனை மதியாது மேற்கொள்ளும்; முன்னுட்செய்த தவஞ்சிறிதாயிற் றீவினைவந்து மேற்கொள்ளும்; ஒருவன் வலி சிறிதாயிற் பகைவந்தடரும்; எ-று. (கூகூ)

நான்மணிக்கடிகை மூலமும் உரையும்
முற்றின.

* கீழ் தன்னைப்பாசத்துளிடினும் மாசுடைமை காட்டிவிடும் எனவும் கீழ் தன்னைவிளக்கினும் மாசுடைமை காட்டிவிடும் எனவும் பிரித்து முன்னவற்ரேடு நான்காக்குக.

ரியவடியுள் இன்சீர் இயைய வெண்சீர்வந்தது. வருகுவதாயின் என்ற ஒருமையான் ஓரடிக்கண் ஒன்றே வருதல் சிறப்புடைத்து: பலவருதல் சிறப்பின்றும். (௩௦)

௩௧. அந்நிலை மருங்கின் வஞ்சி யுரிச்சீ
ரொன்றுத லுடைய வோரொரு வழியே.

இது வஞ்சிச்சீர் ஆசிரியத்துத் தூங்குமாறு கூறுகின்றது.

இ-ள். அந்நிலை மருங்கின் எ-து கட்டளை யல்வழி இன்சீரியையவரின். வஞ்சி........வழியே எ-து வஞ்சிச்சீர்களும் ஒரோவோர்வழி ஆசிரியத்துடன் பொருந்துதல் உடைய. எ-று.

ஒருவழி யென்னது ஓரொருவழியென்றது அறுபது வஞ்சிச் சீரினும் பத்துச்சீரேவருதலும் அவைபயின்றுவாராமையும் அறிவித்தற்கு. உ-ம். மாசேர்சுரம், புலிசேர்சுரம், மாசெல்காடு, புலிசெல்காடு, மாசெல்கடறு, புலிசெல்கடறு, பாம்புசேர்வாய், பாம்புவருவாய், களிறுசேர்வாய், களிறுவருவாய் எனவரும். செய்யுள். "யாரியோடு மலர்ந்த மாத்தாட் கொன்றை, குறிஞ்சியொடு கமழுங் குன்ற நாடன்' என மாசேர்சுரமும், புலிசேர்சுரமும் வந்தன. "முன்றிலாடு மஞ்ஞை மூதிலை கறிக்கும்" என மாசெல்காடு வந்தது. "அலரிநாறு துவர்வா யமர்த்த நோக்கின்" எனப் புலிசெல்காடு வந்தது. "கண்போன் மலர்ந்த வண்டுமயங்கு தாமரை" எனமாசெல்கடறுவந்தது. "கரடிவழங்கு குன்று கண்டு போகி" எனப் புலிசெல்கடறு வந்தது. "காடுதேரா வுழிதருங் கடுங்கண் யானை" எனப் பாம்புசேர்வாய் வந்தது. "சந்துசிதைய வுழுத செங்குரற் சிறுதினை" எனப் பாம்புவருவாய் வந்தது. "மருந்துநாடாத் திருந்து சிலம்பிற் சேக்கும்" எனக் களிறுசெல்வாய் வந்தது. கடறுகவரா விழிந்து கான்யாறு வரித்த" எனக் களிறுவருவாய் வந்தது. பாம்புவருவாய் களிறுவருவாய் என்ற இரண்டும் நேர்பும் நிரைபும் முன் வருதலின் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரெனப்படா. (௩௧)

௩௨. நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே.

இது * நிறுத்தமுறையானே சீருணர்த்தி அடியுணர்த்துகின்றது.

இ-ள். நாற்சீர் கொண்ட அளவடியை அடியென்று சிறப்பித்துக் கூறப்படும். எ-று.

---

* முதற் சூத்திரத்துள் 'யாத்தசீரேயடியாப்பெனாஅ' என நிறுத்த முறையானே.

எனவே, ஒழிந்த* நான்கடியும் சிறப்பிலவாயிற்று. 'திருமழை தலைஇய விருணிற விசும்பின்' (மலைபடுகடாம்) 'அகர முதல வெழுத்தெல்லா மாதி' (திருக்குறள்-க) 'அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்' (பாலைக் கலி-உ0) என நாற்சீரடியாற் சான்றோர் மூன்றுபாவுங் கூறியவாறுணர்க. குறளடியானும் சிந்தடியானும் சிறுபான்மை கூறினர். (௩௨)

௩௩. அடியுள் ளனவே தளையொடு தொடையே.

இது நாற்சீரடியின் சிறப்புக் கூறுகின்றது.

இ-ள். அந்நாற்சீரடியான் வருங் கட்டளையடிக்கண் உள்ளனவே எழுபது தளையும் பத்தொன்பதினாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொரு தொடையும் என வரையறைப்படுவன. எ-று.

எழுபது தலைப்பகுதியாற் கட்டளையடி யெனவுறழ்வதூஉம், அறுநூற் றிருபத்தைந்தடியென வரையறைப்படுவதூஉம், பத்தொன்பதினாயிரத் திருநூற்றுத்தொண்ணூற்றொன்றென்னும் தொடைப் பகுதி கொள்ளப் படுவதூஉம் நாற்சீரடியேயாயிற்று; எனவே, நாற்சீரான்வருஞ் சீர்வகையடிக் குத் தளையுந் தொடையுங் கொள்ளின், அவை,வரையறையின்றென உணர்க. அளவடி இரண்டியைந்தும் ஒன்று வந்துந் தொடைகோடலும், ஒழிந்தவடி நான்கும் விகற்பத்தொடை கொள்ளாமையும் உணர்க. (௩௩)

௩௪. அடியிறந்து வருத லில்லென மொழிப.

இது கட்டளைப்பாட்டிற்குந் தொடைக்கும் ஓர் கருவி கூறுகின்றது.

இ-ள். அறுநூற்றிருபத்தைந் தடியுள்ளும் ஓரடி நின்றுங்கு வருகின்ற அடியும் முன்னின்றவடியை இறந்து வருதலில்லை என்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

என்றது, முற்கூறிய தளைவகையேயன்றி, அடியோடு அடிக்கூட்டத் துத் தளைகொள்ளுங்காலும் வந்தவடியே வரவேண்டு மென்பதூஉம், தொடை கொள்ளுங்காலும் வந்தவடியே வரவேண்டு மென்பதூஉம் கூறிய தாயிற்று; எனவே, தேமா தேமா தேமா தேமா என்னும் அடிக்கட்டொ டை கொள்ளுங்கால் "வாமா னேறி வந்தோன் மன்ற" என வந்த அடியே வரல் வேண்டுமென்பதூஉம், "தேமாஞ் சோலைத் தீந்தே னுண்ட, காமர் தும்பி யாகல் கண்டது" எனத் தளைவழுவாகித் தொடைப்பகுதியுட் படா

* குறளடியும், சிந்தடியும் நெடிலடியும் கழிநெடிலடியும்.

தென்பதூஉம் கூறியவாறாயிற்று. இனி வெண்பாவினுள் "சென்றேயெறிப வொருகால் சிறுவரை,நின்றேயெறிப பறையினை நன்றேகாண்"(நாலடி-௩௪) எனப் பன்னிரண்டெழுத்தடியொன்றனையும் இருகாற் சொல்லி, எதுகை கொள்ளுங்கால் அடியோடடிக்கூட்டத்துத் தளைவகை சிதையாது தொடைப் பகுதியுட்பட்டவாறு காண்க. "யானாடத் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின், றானூட யானுணர்த்தத் தானுணரான்—றேனூறு"* எனப் பதினான்கெழுத்தின் இகந்ததின்றேனும் தளைவகை யொன்றுதலிற் றொடைப் பகுதியுட் படாவாயிற்று. வண்டு வரகு வரகு வரகு என நின்ற வடியை மீட்டும் வண்டு வரகுவரகு வரகு எனத்தந்து தொடை கொள்ளுங்கால் ஆசிரியத்தளை தட்டு வழுவாயிற்று. கலிக்கு அன்னதோர் வரையறையின்று. அது "வெண்சீரீற் றசை" (செய்-௨௧) என்னுஞ் சூத்திரத்தானும், "தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா" (செய்-௫௫) என்னுஞ் சூத்திரத்தானும் உணர்க. ஏனை அகவலும் வெள்ளையுமே வரையறைப் பட்டன. இதனானே, அறுநூற்றிருபத்தைந்தடியும் தம்முன்னர்த் தாமே வந்து தளையுந் தொடையும் வழுப்படாமற் கொள்ளுமென்றவாறு.

௫௫. அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே.

இதுவும் அந்நாற்சீரடியின் சிறப்புக் கூறுகின்றது.

இ-ள். அடியின்பாட்டே எ-து அந்நாற்சீரடியென்னும் உறுப்பான் வந்த பாட்டையே எ-று. சிறப்பெனப்படுமே எ-து சிறப்புடைப்பாட்டென்று கூறப்படும். எ-று.

அடியினாற் செய்யுள் வரையறை கூறலின்றி மாத்திரை முதலிய உறுப்பான் இத்துணைப்படுஞ்செய்யுளென்று வரையறை கூறப்படாமையின் அடியான் வந்ததே பாட்டென்றார். அது மூவகைச் சங்கத்தாரும் பிறசான்றோரும் நாற்சீரடியானே மூன்று பாவும்வரப் பெரும்பான்மை செய்யுட் செய்து, வஞ்சிப்பா சிறுவரவிற்றாகச் செய்யுள் செய்தவாற்றானுணர்க.(௫௫)

௫௬. நாலெழுத் தாதி யாக வாறெழுத்
தேறிய நிலத்தே குறளடி யென்ப.

---

* "யானாடத் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின்
றானூட யானுணர்த்தத் தானுணரான்—றேனூறு
கொய்தார் வழுதி குளிர்சாந் தணியகல
மெய்தி யிராக்கழிந்த வாறு.

௬௭. ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
யீரெழுத் தேற்ற மல்வழி யான.

௬௮. பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
யொத்த நாலெழுத் தொற்றலங் கடையே.

௬௯. மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
யீரெழுத்து மிகுதலு மியல்பென மொழிப.

௭0. மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
யீரெழுத்து மிகுதலு மிவட்பெறு மென்ப.

இவை ஐந்துசூத்திரமும் உதாரணச்சுருக்கமும் உரையியைபு நோக்கி உடனெழுதப்பட்டன. இவை நாற்சீரடி இத்துணைப் பகுதிப்படுமென அவற்றது பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றன.

இ-ள். நாலெழுத்து முதலாக ஆறெழுத்துக்காறும் ஏறிய மூன்று நிலத்தையுமுடைத்து குறளடி எ-று. சிந்தடிக்கெல்லை ஏழெழுத்தொன்றுமே என்று கூறுவர், எட்டுமொன்பதும் இரண்டுமல்லாதவிடத்து எ-று. அளவடிக்கெல்லை பத்தெழுத்தொன்றுமே என்றுகூறுவர், அதனேடொத்த பதினென்றும் பன்னிரண்டும் பதின்மூன்றும் பதினன்குமாகிய நான்கெழுத்தாகிய நான்கு நிலனும் ஏற்றமாய் வாராதவழி. எ-று. நெடிலடிக்கெல்லை பதினைந்தெழுத் தொன்றுமே என்று கூறுவர் அதற்குப்பதினறும் பதினேழுமாகிய இரண்டெழுத்து மிக்குவரும் நிலமிரண்டும் இயல்பென்று கூறுவர் எ-று. கழிநெடிலடிக்கெல்லை பதினெட்டெழுத்தாமென்று கூறுவர், அதற்குப் பத்தொன்பதும் இருபதுமாகியஇரண்டெழுத்தும் மிக்குவருநிலமிரண்டையும் இவ்விடத்தேபெறுமென்றுசொல்லுவர். எ-று.

குறளடியொழிந்தனவற்றை இங்ஙனம் வகுத்துரைத்தார், தலையிடை கடையென்னும் மூன்று கூற்றுன் ஒன்றற்கொன்று சிறப்புமிழிபு முடைமையின். உ-ம். 'பேர்ந்து ... தன்றே'* இதனுள் நாற்சீரடிக்கட்பதினேழு நிலத்தைவகையடியும் முறையானே வந்தவாறு காண்க. மக்களுட்டீரக்குறியானைக் குறளனென்றும், அவனிற் சிறிது நெடியானைச் சிந்தனென்றும், ஒப்பவமைந்தானை அளவிற்பட்டானெனஃறும், அவனிற் சிறிது நெடியானை

* இச்செய்யுள் முழுதையும் இந்நூல் ௯உ-ம் பக்கத்துக் காண்க. இப்பாட்டுள் 'பன்னெல்லூர' எனவும், 'அமையோர்மென்றோள்' எனவும், 'இரும்பமன்மலரிடை' எனவும், 'அணிநடையசைஇய' எனவும் பாடபேதங்கொள்க.

நெடியானென்றும், அவனின் மிகநெடியானைக் கழியநெடியா னென்றும் கூறுபவாகலின் அவைபோலக்கொள்க, இப்பெயர். இவை சீர்வகை யடிக்கும் ஒக்கும்: என்னை? சுருங்கியவெழுத்தானும் இருசீரானும் வருவன குற ளடி எனவும், ஏறியவெழுத்தானும் முச்சீரானும் வருவன சிந்தடி எனவும், இடைநிகரான வெழுத்தானும் நாற்சீரானும் வருவன அளவடி எனவும், மிக்கவெழுத்தானும் ஐஞ்சீரானும் வருவன நெடிலடி எனவும், அவற்றின் மிக்க வெழுத்தானும் அறுசீர்முதலிய சீரானும் வருவன கழிநெடிலடியென வும் இங்ஙனம் இருவகையடிக்கும் ஒருபெயரே கொள்க. அவை 'ஓங்குதலை வியன்பரப்பின்'(மதுரைக்காஞ்சி)'வலமாதிரத்தான் வளிகொட்ப'(ஷை)'சிறி யகட் பெறினே யெமக்கீயு மன்னே' (புறம்-உ௩௫)'சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே' (ஷை-ஷை) 'நெறியறி செறிகுறி புரிதிரி பிரியா வறி வனை முந்துறீஇ' (குறிஞ்சிக்கலி ௩) 'கவிரிதழ் கதுவிய துவரித ழரிவை யர் கலிமயிற் கணத்தொடு விளையாட' * 'மூவடிவி னுலிரண்டு சூழ்சுடரு நாண முழுதுலகு மூடி முளைவயிர நாறி'என இவற்றை முறையானே குறளடி சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி எனப்பெயர் கூறுப; எண்சீரின் மிக்கன சிறப்பில.

௪௪. சீர்நிலை தானே யைந்தெழுத் திறவாது.

இது மேலெழுத் தெண்ணி அடி வகுத்த கட்டளையடிக்குச் சீரும் எழுத்தெண்ணி வகுக்கின்றது.

இ-ள். ஒருசீரினது நிலைமைதான் ஐந்தெழுத்து இறந்துவாராது. எ-று.

பெருமைக்கு எல்லைகூறி வரையறுப்பவே, சிறுமைக்கு எல்லை வரை யறைப்படாது: ஒன்று முதலாக வருதல் பெற்றும். அசைநிலையிற் பிரித் துநிற்றலிற் றானே யென்பது பிரிநிலை யேகாரம். அவற்றையுஞ் சீரென அடக்குக எனின்:—அவை இயற்சீர்ப்பாற்படுத்து இயற்றவேண்டா; இங் ஙனம் பாற்படுப்பனவற்றைச் சேரக்கூறலின் மயங்கக்கூறலென்னுங் குற் றமாம். இனி அவை மூன்றெழுத்தினிகவாமை உரையிற் கொள்க. அச்

---

* "மூவடிவி னுலிரண்டு சூழ்சுடரு நாண முழுதுலகு மூடி முளைவயிர நாறித், தூவடிவி னுலிலங்கு வெண்குடையி னீழற் சுடரோய்நின் னடிபோற் றிச் சொல்லுவதொன் றுண்டாற், சேவடிக டாமரையின் சேயிதழ்க டீண் டச் சிவந்தனவோ சேவடியின் செங்கதிர்கள் பாயப், பூவடிவு கொண்டன வோ பொங்கொளிகள் சூழ்ந்து புலன்கொளா வாலெமக்கெம் புண்ணியர் தங் கோவே." (யாப்பருங்கலவிருத்தி மேற்கோள்.)

சீர்கள் வருமாறு:—நுந்தையும் வண்டும் ஒரெழுத்துச் சீரென்ப; தேமா, ஞாயிறு, போதுபு, போரேறு, மின்னு, வரகுஎன இயைந்த ஆறும் ஈரெழுத்துச் சீராகும் என்ப; புளிமா, பாதிரி, வலியது, மேவுசீர், நன்னாணு, பூமருது, கடியாறு, விறகுதீ, மாசெல்வாய், நீடுகொடி அரவொடுகூட மூவெழுத்துச்சீர் பதினொன்றாகும்; கணவிரி, பெருநாணு, காருருமு, உருமுத்தீ, மழகளிறு, மாவருவாய், புலிசெல்வாய், நாணுத்தளை, உரறுபுலியொடு ஒன்பதுசீரும் நாலெழுத்துச்சீராகு மென்ப; நரையுருமு, புலிவருவாய், விரவுகொடி மூன்றும் ஐயெழுத்துச் சீராகுமென்ப. 'எழுத்தளவெஞ்சினும்'(செய்-சந) என்னுஞ்சூத்திரத்தான் இங்ஙனங்காட்டினும். ஆகச்சீர் முப்பத்தொன்றாம்.

சஉ. நேர்நிலை வஞ்சிக் காறு மாகும்.

இது வஞ்சிப்பாவினுள் வருஞ்சீர்க்கு எழுத்துவகை கூறுகின்றது.

இ-ள். சமநிலைவஞ்சிக்கு ஆறெழுத்துமாம். எ-று. *

அஃது இருசீரான் வரும்; முச்சீரான் வருவது வியநிலைவஞ்சி. இறுதியதிகாரத்தாற் † பெருமைக்கெல்லை கூறினர். சிறுமைக்கெல்லை ‡ மேற்கூறுப. எனவே, ஆறெழுத்தினிகந்தன கட்டளையடிக்காகாவென உணர்க. உம்மை இறந்தது தழீஇயிற்று, ஐந்தேயன்றி ஆறுமாமென்றலின். அவை முற்கூறிய உதாரணங்களுட் காண்க. (சஉ)

சந. எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப.

இது முற்கூறிய சீர்கட்கெல்லாம் பொதுவிதி.

இ-ள். எழுத்தளவெஞ்சினும் எ-து முற்கூறிய சீர்களெல்லாம் கட்டளையடிக்குத் தத்தம் எழுத்துக் குறைந்துமிக்கும் தம் அளவிறந்துவரினும். சீர்நிலை......மொழிப எ-து அவை அவ்வச்சீரெனவேபட்டுச் செய்யுளுள் அவ்வப்பாக்களின் ஓசையை யுணர்த்தி, ஒருதன்மையவாயே நிற்கும், சுருக்கப்பெருக்கம் இன்றென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

எனவே, அவை கட்டளையடிக்கு எழுத்தெண்ணி அடிவகுக்குமாற்றான், இயற்சீரும் உரிச்சீரும் ஒருநிலைமைப்படுதலும், வஞ்சிச்சீர் பலநிலை

---

* 'இருசீரான் வருதலின் சமநிலைவஞ்சி எனப்பட்டது' என்றார் பேராசிரியரும்.

† இதற்கு மேனின்ற அதிகாரத்தான் என்க.

‡ சகூ-ஆம் சூத்திரத்துட் காண்க.

மைப்படுதலும் உடையவேனும், அவ்வெழுத்திற்கல்லது சீர்க்குச் சுருக்கப் பெருக்கமின்றென்று கூறியவாறாயிற்று. தானே என்றதனான்* அசைச் சீர்க்கும் இருநிலைமைகொள்க. அவை இருநிலைமைப்படுமாறு—'இயலசை மயங்கிய வியற்சீர் நான்கனுட், புளிமா வொழிந்த வியற்சீர் மூன்று, நுந்தை தேமா ஞாயிறு பாதிரி, வலியது கணவிரி யெனவிரு வகையா, யிருமூன் றாக வியம்பினர் புலவர்' நுந்தை-ஓரெழுத்துத் தேமா, ஞாயிறு-ஈரெழுத்துப்பாதிரி, வலியது-மூவெழுத்துக்கணவிரி: இவற்றுட் குற்றுகரம் எழுத்தெண்ணப்பெறாமையான் அலகு பெறுதலின், இருநிலைமை எய்திற்று. உரியசை மயங்கின இயற்சீராறும், போதுபூ, மேவுசீர், விறகுதீ, உருமுத்தீ போரேறு, நன்ஞாண், பூமருது, காருருமு, மழகளிறு, நரையுருமு, கடியாறு, பெருநாண் என்று ஈருகரத்தான்ஈராறாகும். இவை குற்றுகர முற்றுகரங்களான் இருநிலைமை எய்தின. இருவகை இயற்சீராய பதினெட்டு, புளிமாவோடு பத்தொன்பதாகும்; ஆக இயற்சீர்பத்தொன்பது; இவற்றுள் 'நுந்தை தேமா புளிமா நேரீறு, மன்றி வந்த வீரெண் சீராய்ப், பாதிரி கணவிரி யாகிநின் றவையு, மொன்றி வந்தன வாசிரி யத்தளை, யொன்ற தனவே வெண்டளை யாகும்' 'முன்னிரை யீற்றவா சிரிய வுரிச்சீர், நீடு கொடியே நாணுத்தளையே, உரறு புலியே விரவு கொடியென, வீருக ரத்தா னீரிரண் டாகிப், பாதிரி கணவிரி போலத் தட்கும்' என உரிச்சீர்கள் இருநிலைமை எய்தின. 'வண்டு மின்னும் வாகு மாவுமெனக், கண்டவீ ருகர வசைச்சீர் நான்குந், தேமா புளிமா வாகித் தட்கும்' என அசைச்சீரும் இருநிலைமைஎய்தின. வெண்சீர் நான்கும் ஒருநிலைமையவேயாம்.'வெண்சீர் நான்குந் தம்முற் றாம் வந்து, தட்ட வெண்டளை கட்டளைக் காகா, சீர்வகை யான்வருங் கலிக்கும் வெள்ளைக்கு, மாகுமென்ப வறிந்திசி னோரே' 'வெண்சீர் தம்முண் மாறுங் கலித்தளை, கட்டளைக் கலிக்கென் றொட்டிய தாகு, மதனோ டியற்சீர் ஒன்றி வரினது, கட்டளை வெள்ளைக் காகுமென்ப''இயற்சீ ரசைச்சீ ருரிச்சீர்வெண் சீரென, மயக்கற வகுத்த சீர்க ளெல்லா, மொன்றுதலை யிட்ட வொருமுப் பஃதே.'--ஆக நால்வகைச்சீரும் முப்பத்தொன்று.இனி வஞ்சியுரிச்சீர்பலநிலைமைப்படுமாறு—'குறளடிமுதலா'(௩௪) என்னுஞ் சூத்திரத்துட் காட்டுதும்.

௬௪. உயிரில் லெழுத்து மெண்ணப் படாஅ
வுயிர்த்திற மியக்க மின்மை யான.

இஃது எய்தியது விலக்கிற்று.

இ-ள். உயிரில்.........படாஅ எ-து ஒற்றும் ஆய்தமுங் குற்றுகாமும் எழுத்தெனப் பெயர் கூறினாரேனும் எழுத்தாக எண்ணப்படா; என்னை?

* தானே என மிகுத்துச் சொல்லியவதனான்.

உயிர்.........யான எ-து அவை தத்தம் ஓசை இனிது விளங்க ஒலித்தற்குக்கூறிய எண்வகை நிலத்தினும் விளங்க இயங்காமையின். எ-று.

என்றது, எழுத்தெண்ணுமிடத்து அவை ஒழித்தெண்ணுக என்றவாறு. இது கட்டளையடிக்கு *'பேர்ந்து சென்று' என்பதனுள் அவையொழித்து எண்ணப்பட்டது. பின்னுள்ளோர் கொண்ட கட்டளைக் கலித்துறை சந்தந் தாண்டகங்கட்கும் இவ்வாறெழுத்தெண்ணுதல் வேண்டுமென்றுணர்க. (சச)

சரு. வஞ்சி யடியே யிருசீர்த் தாகும்.

இஃது அதிகாரத்தானின்ற வஞ்சியடியாமாறு கூறுகின்றது.

இ-ள். முற்கூறிய சமநிலைவஞ்சியினடி இருசீரையுடைத்தாகி வரும். எ-று.

ஏகாரம் பிரிநிலை, சிறப்பில்லா வியநிலைவஞ்சியினின்றும் பிரித்தலின். வியநிலை வஞ்சிக்குக் கட்டளை யின்று. இங்ஙனம் கூறவே, வஞ்சியடியும் ஒருவாற்றான் உறழப்படுமாயிற்று. அது 'குறளடி முதலா' (ருஎ) என்பதனுட் காட்டுதும். இங்ஙனம் வஞ்சியுறழாவிடிற் குன்றக் கூறலென்னுங் குற்றந் தங்கும். (சரு)

சசு. தன்சீ ரெழுத்தின் சின்மை மூன்றே.

இது முன்னர்† சமநிலைவஞ்சிக்குப் பெருமைக் கெல்லைகூறினமையின் ஈண்டுச் சிறுமைக்கெல்லை கூறுகின்றது.

இ-ள். அவ்வஞ்சிச் சீருக்கு எழுத்தின் சிறுமை மூன்றே. எ-று.

'தன்' என்றது முற்கூறிய வஞ்சியை. உ-ம். கொண்டுகோடுநீடு கொலைக்களிறுகடாஅய்' எனவரும். ஏகாரத்தானே மேல் வருகின்ற வியநிலைவஞ்சிக்காயின் மூவெழுத்தினிழிந்து ஈரெழுத்தானும் வருமென்று கொள்க; நுந்தைகாடு என வரும். (சசு)

சஎ. முச்சீ ரானும் வருமிட னுடைத்தே.

இஃது ஒழிந்த வியநிலைவஞ்சி கூறுகின்றது.

---

* "பேர்ந்து சென்று சார்ந்து சார்ந்து" என ஒற்றுங் குற்றுகரமும் ஒழித்தெண்ணப்பட்டமையால் எருத்தடியாயிற்று" என்றார் பேராசிரியர்.

† சஉ-ம் சூத்திரம்.

பிணத்தை எரிப்பதையும் புதைப்பதையும்பற்றிச் சொன்னோம். நமது முன்னோர்கள் உயிரற்ற சவத்தைக் காட்டில்விலங்குகளுக்கு இரையாகக் கொடுப்பது மதாசாரப்பிரகாரம் உத்தமமென்று சொல்லியிருக்கின்றார்கள். பார்ஸீ ஜாதியார்களும் இவ்வழக்கத்தையே தங்கள் மதாசாரமாகக்கொண்டு உயிர்நீங்கின தங்கள் சவங்களை (Tower of Silence) நிச்சப்தகோபுரம் என்று சொல்லப்படும் தங்களுடைய மயானங்களிற் கழுகுகளுக்கும் பருந்துகளுக்கும் இரையாகக் கொடுக்கின்றார்கள். இது புதைப்பதைவிட சுகசந்தரிசன முறைப்படி எவ்வளவோ மேன்மையென்றாலும் கண்ணாற் பார்ப்பதற்கு மயிர்க்குச்செறியும்படியான அவ்வளவு அருவருப்புள்ளதாயும் சவத்தின் எல்லாவித அவயவங்களும் (எலும்பு, நகம், மயிர் முதலியவைகள்) புசிக்கப்படாமற் போவதால் அசௌக்கியத்தை உண்டாக்கி நோயை விளைவிக்கின்றதென்றும் சுகசந்தரிசன விதிப்பிரகாரம் நாம்சொல்லலாம். ஆகையால் இவைகளவ்வளவும் தேகசௌக்கியத்திற்கு அதிகமாக ஒவ்வாதவைகள்.

இவைகளெல்லாவற்றையும் சீர்தூக்கி ஒருவிதத்திலும் மனுஷ சௌக்கியத்திற்குக் குறைவுண்டாக்காத ஓர்வகையை நாம் கண்டுபிடிக்கவேண்டும். அது எவ்வகை? அது சமுத்திரத்திற் சவங்களைப்போடுவதேயாம். சவத்தை சமுத்திரத்திற் போடுவதினால் அச்சவத்தின் தசைமுதலியவைகளெல்லாம் மற்ற ஜலஜந்துக்களுக்கு ஆகாரமாகின்றன. அவ்வாறு ஆகாரமாகாமல் மிகுந்து நிற்கும் தேக அவயவங்கள் சமுத்திரத்திற் சிதறிக்கிடப்பதால் அவைகள் தேகசௌக்கியத்தைச் சொற்பமேனும் குறைக்கமாட்டா. உத்தமமான நிலங்கள் சமாதிக்குழிகளாக மாறுபட்டு ஓர்விதப்பிரயோஜனமற்றநிலங்களாக இப்பொழுது நிற்பதுபோல் நிற்காமல் நமக்கு விளைவைக்கொடுக்கும் உயர்ந்தநிலங்களாக மாறும். முற்காலங்களில் நமது முன்னோர்கள் காசி முதலிய க்ஷேத்திரங்களில்மாண்டவர்களுடையபிணங்களைக் கங்கையில் இழுத்தெறிந்து வந்தார்கள். அவ்வாறு அவர்கள் செய்ததின் தாற்பரியம் சவம் எப்படியும் சமுத்திரம்போயே விழவேண்டும் என்று அவர்கள் யோசித்துச் செய்ததுபோலக் காணப்படுகிறது. நமது சவங்களாற் பிழைத்திருக்கும்நமக்கு ஓர்வித உபத்திரவமும் உண்டாகாமலிருக்க விரும்புவோமேயானால் எல்லாச்சவங்களையும் சமுத்திரத்தில் வெகுதூரம்கொண்டுபோய்ப் போட்டுவிடுவதே உத்தமம். அதற்கு அடுத்த பதவியில் எரிப்பதை எடுத்துச்சொல்லலாம். ஐரோப்பாவிற் சிலவிடங்களிற் பிணத்தை எரிப்பதற்காக மயானங்கட்டி அதில்ஒரு பிணத்தை 10 நிமிஷத்துக்குள் நீறாக்கி அந்நீற்றைப் பிணத்தின் சொந்தக்காரனுக்குக் கொடுத்துவிடுகின்றார்கள். அவனதைத் தன் சக்திக்குத் தகுந்தபடி அழகான பரணிஒன்றிற் போட்டுமூடி அப்பரணியின்மேல் 'அந்நீறு இவ்வருஷம்பிறந்து இவ்வருஷமிறந்த இன்னாருடைய சேஷம்'

என்று எழுதிவைத்துக்கொள்ளுகிருன். இது எவ்வளவுசுலபம்; எவ்வளவு ஆரோக்கியம்.

நோயால் வருந்திச் சாகும் மிருகங்கள், மகாமாரி முதலிய தொத்து நோயால் மாண்டுபோகும் மனிதர்கள் இவர்களை எப்பொழுதும் எரிப்பதே நலம். இவைகளையகற்றி வெளியிற் கொண்டுபோகும்பொழுது தொத்து நோய் மற்றவர்களைப் பற்ருமலிருக்கத் துணியை ஓர்வித திராவகத்தில் நனைத்து அத்துணியால் இச்சவங்களை நன்ருகமூடி வெளியிற்கொண்டுபோகவேண்டும்.

ஐந்தாம் அதிகாரம்.—

வாஸஸ்தலம்.

CHAPTER V.—HABITATION.

பம்பாய் நகரத்தில் 1896-ம்ஹூ பிளேக் என்ற மகாமாரிநோய் உண்டான காரணத்தைச் சரியாகக் கவனித்தவர்கள் இவ்விதநோய்களுக்கு முக்கியகாரணம் ஜனங்கள் சரியான வாசஸ்தலங்களில் வசிக்காததே என்பதை நன்ருக அறிந்திருப்பார்கள். கண்டபடி நெருக்கமாகக் குறுகிய சந்துகளிற் கட்டப்பட்ட வீடுகளும் அச்சந்துகளின் சாக்கடைகள் ஆரம்பிக்கும் இடமும் முடியும்இடமும் தெரியாதவண்ணம் அவ்வளவு அலங்கோலமான ஏற்பாடுகளும் மாண்டவி என்ற இடத்தில் பம்பாய் நகரத்தில் வெகுநாளாக இருந்துகொண்டிருந்தது. அதேயிடத்திற்ருன் பிளேக் என்ற நோயும் தோன்றிற்று. இக்காரணங்களுடன் மாண்டவியில் வசிக்கும் ஜனங்கள் பரிசுத்தமாயிருக்கும் வழக்கமேயில்லாத ஏழைகளாய் அழுக்கில் ஆழ்ந்துகிடந்தார்கள். அந்தவிடத்தில் அப்போதைக்கப்போது குவியும் உத்விருஷ்டங்கள் அடிக்கடி அகற்றப்படாமலும் அவ்விடத்திய ஜனங்கள் ஏழைகளாகவும் அழுக்கிலாழ்ந்தவர்களாகவுமிருக்கவே முன்னமேயிருந்த எல்லாவிதக்காரணங்களுடன்கூடி அம்மாண்டவியில் இன்னுந்தீராத இக்கொடியநோய் உற்பவித்து இன்றைக்கும் நமது நாட்டைப் பயப்படுத்திக் கொண்டுவருகின்றது. புனு நகரத்திலும் இதே பிரகாரம் அடர்ந்தவீடுகளும் குறுகிய சந்துகளும் ஆதிஅந்தம் தெரியாத சாக்கடைகளும் எங்கெங்கிருந்தனவோ அவ்விடங்களிலெல்லாம் இக்கொடியநோய் 7-வருஷம் ஏகமாய்க் குடிகொண்டிருந்து அக்குறைகள் ஒருவாறு அதிகாரிகளால் நீக்கப்பட்டபின்புதான் சிறிது நின்றது.

வாசஸ்தலங்கள் சரியாகவில்லாதவிடங்களிலெல்லாம் வாயுசலனமும் சரியாகவில்லாமல் விஷவாயு நிரம்பிநிற்குமாகையாற் பலவித நோய்களை விளைவிக்கும். வாசஸ்தலம் சரியாகவில்லை என்பதால் நமது கருத்தென்ன? நாம் குடியிருக்கும் நத்தம் சரியாகவில்லாமல் ஏதாவது குற்றமுள்ளதாகவிருக்கலாம். நமது நத்தம் சதுப்புநிலத்தில் அமர்ந்திருக்கலாம். நத்தத்தை அல்லது வீட்டைச்சுற்றி விஷவாயு நிற்கும் காரணத்தால் விஷஜ்வரத்தை நமக்கு உண்டாக்கலாம். நமது வீட்டிலோ நத்தத்திலோ அதிக நீர்க்கசிவு உண்டாகலாம். அல்லது நமது வீடு கட்டப்பட்டிருக்கின்ற விடத்தின் வழியாய் மலவாயு வீசிக்கொண்டிருக்கலாம். அல்லது நமது வீடு சரியாக அமைக்கப்பட்டிருந்தும் நல்ல காற்றோட்டமில்லாததாகவிருக்கலாம். அல்லது நாம் வசிக்கும் நத்தத்திலோ அல்லதுபேட்டையிலோ ஜனத்தொகை அதிகரித்து அக்காரணத்தால் வாயுவின் பரிசுத்தம் குன்றலாம். அல்லது நாம் கழிக்கும் உத்விருஷ்டங்கள் நமது வீட்டைவிட்டு அகற்றப்படாமலிருக்க ஆகாயத்தைக்கெடுக்கலாம். அல்லது நமது வீடுகளைப் பரிசுத்தமாகப் பண்ணிவைக்கவேண்டுமளவு தண்ணீர்நமக்குக் கிடைக்காமலிருக்கலாம். இவைகளைப்பற்றி நாமிவ்வத்தியாயத்தில் விவரமாக எழுதுவோம்.

நாம் எல்லாவிதத்திலும் சௌக்கியமான வாசஸ்தலத்தை அடைய வேண்டுமென்றால் அடியிற்சொல்லப்படும் நிபந்தனைகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

முதன்முதல் உலர்ந்தநரை; இதில் விஷக்காற்றுக்கு இடமேயிருக்கக் கூடாது. இந்தவிடத்திற் பரிபூரணமான வெளிச்சமும் நாற்புறமும் சுற்றிப்பார்த்தால் உற்சாகமுமிருக்கவேண்டும்.

இரண்டாவது **பரிசுத்தமான தண்ணீர்** நமக்கு மிகுதியாகக் கிடைக்குமிடமாகவும் அத்தண்ணீர் நமக்கு உபயோகப்பட்டபிறகு நமது வீட்டைவிட்டு வெளியேசெல்ல ஏற்பாடுகள் அமைந்தவிடமாகவும் நமது வாசஸ்தலம் இருக்கவேண்டும். இப்படியிருந்தாற்றான், நாம் நமது வீட்டை எல்லாவிதத்திலும் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளத் தைரியமாக விருக்கலாம்.

மூன்றாவது நமதுவீட்டின் **உத்விருஷ்டங்களும் சாக்கடை வண்டல்களும்** அப்போதைக் கப்போது அடிக்கடி அகற்றப்படுமிடமாக நமது வாசஸ்தலம் இருக்கவேண்டும். அப்படி இருந்தாற்றான் உத்விருஷ்டங்களால் நமது வாசஸ்தலத்துள்ள காற்றுக் கெட்டுப் போகாமலிருக்கும்.

நான்காவது நமது சுவாசாசயத்திலிருந்து வெளிப்படும் கரிமலவாயு நமது வாசஸ்தலத்தைச் சூழ்ந்து நிற்காத வண்ணம் எப்பொழுதும் காற்றேட்டமிருக்கும் வீடாக நமது இருப்பிட மிருக்கவேண்டும்.

ஐந்தாவது நமது வாசஸ்தலத்தின் கட்டிடம் அஸ்திவாரம் சுவர் கூரை முதலிய ஒவ்வொரு பாகத்திலும் ஈரம் தாக்கி நிற்காத வண்ணம் எப்பொழுதும் விசேஷமாக உலர்ந்த தரையாகவே யிருக்க வேண்டும்.

இவ்வாறு நாம் சொன்ன எல்லாவித நிபந்தனைகளையும் சீர்தூக்கிப் பார்ப்போமாயின் முக்கியமாக நமது வாசஸ்தலத்தின் வாயு பரிசுத்தமான வாயுவாகவிருக்கின்றதா என்பதில் நாம் ஜாக்கிரதையாக விருக்கவேண்டும் என்று ஏற்படும். பரிசுத்தமான காற்று ஒன்றே தான் வாசஸ்தலங்களில் நாம் பிரதானமாகக் கவனிக்க வேண்டிய விஷயம். அது ஒன்றை நாம் கவனிக்கும் பட்சத்தில் மற்றெல்லாவற்றையும் கவனித்தவர்களாவோம். முதன் முதல் இதைப் பார்த்துக் கொண்டே தான் நாம் நமக்கு வேண்டிய மற்ற சௌகரியங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளை நமது வாசஸ்தலத்திற் செய்து கொள்ள வேண்டும்.

தனவான்களின் மாளிகைகளும் ஏழைகளின் குடிசைகளும் காய்ந்த தரையுள்ள விடங்களிற் கட்டப்பட்டு நீர்வளம் பொருந்தியவைகளாக விருக்குமாயின், அவ்விரண்டு வாசஸ்தலங்களுள்ளும் ஒருவித வித்தியாசமு மிருக்கமாட்டாது. பெரும்பாலும் ஏழையின் குடிசையே, அதிகச் சாக்கடைகள் அக்குடிசையிலிருக்க மாட்டாமையால், தனவான் மாளிகையை விட அதிக சௌக்கியமாயிருக்கும். ஆனல் அச்சிறு குடிசையில் அதிக ஜனசங்கம் வசிக்கும்படிவந்தால் சரியான காற்ரேட்டத்துக்கு வழியில்லாமையால் அவ்வாசஸ்தலம் கெட்டுவிடும்.

நகர வாசங்களில் நாம் ஏழை ஜனங்கள் வசிக்குமிடங்களைப் பார்ப்போமேயானல் அவர்கள் எவ்வளவு நெருக்கமான விடங்களில் எவ்வளவு வித அசுத்தங்களுடன் வசிக்கின்ருர்கள் என்பது நமக்குத் தெரிய வரும். சிறு வீடுகளிலும் குடிசைகளிலும் வசிப்பதாலேயே நோய்கள் உண்டாகின்றன என்பதல்ல நமது கருத்து. அஸ்திவாரமும் அடித்தரையும் காய்ந்தவைகளாகவிருந்து உத்விருஷ்டங்களும் சாக்கடைக் குப்பைகளும் நிற்காமல் அகற்றப்பட்டு இரவில் தூங்கும்பொழுது சாக்கடைநாற்றம் சம்பந்தித்த மலவாயுவை நுகராமற் சிறு வீட்டிலும் குடிசையிலு மிருப்பவர்கள் நித்திரை செய்வார்களேயானல் அவர்களுடைய தேகசௌக்கியத்திற்குக் குறைவுண்டாக மாட்டாது.

காய்ந்த தரை நமது வீடுகளுக்கு எப்பொழுதும் இருக்க வேண்டுமானல் நமது வீட்டின் அஸ்திவாரத்துக்கு 4, 5-அடி கீழேயுங் கூடக் கசிவில்லாத வண்ணம் நாம் பார்த்து வீடுகளைக் கட்டவேண்டும். அஸ்திவாரத்து அடியிற் களிமண் கிட்டுமேயானல் அக்களிமண்ணின்மேற் சுண்ணும்பு செங்கல் இவைகளாற்றளம்பரப்பி நமது வாசஸ்தானத்துக்கு எப்பொழுதும் உலர்ந்த தரை கிட்டும் சுகத்தை நாம் அடைய வேண்டும். நமது வீட்டைச் சுற்றி நாம் எடுக்கும் சுவர்கள் ஈரம் பற்ருத வண்ணமும் கூரைகளிலிருந்து வழியும் தண்ணீர் சுவரிலேஇறங்கி அச்சுவரை ஈரமாகச் செய்யாத வண்ணமும் வீடு கட்ட வேண்டும். சிலவிடங்களிற் சுவரைச் சிமட்டாற் பூசி ஈரம் பிடிக்காத வண்ணம் பாதுகாக்கின்ருர்கள். வீட்டின் தளம் சரிவர விருக்கும் நிலைமையை நாம் எப்பொழும் பரிசோதிக்க வேண்டும். வீட்டின் தளத்தின்மேல் எப்போதும் காற்ருேட்ட மிருக்கின்றதா என்பதை நாம் கவனிப்பதுடன் தளத்தில் ஏவையேனும் ஒட்டைகள் அல்லது வங்குகளிருக்குமாயின் அவைகளின் வழியாகப் பூமிக்குள்ளிருந்து மலவாயுக் கிளம்பி வீட்டைக் கெடுக்காத வண்ணம் அடைத்து வரவேண்டும். நாம் வசிக்கும் வீட்டில் மழை பொழியும் பொழுது அம்மழைநீர் பூமியிலேயே ஆழ்ந்துவிடாத வண்ணம் தாராளமாய் ஓடி வெளியே சேரும் வழிகளை உண்டாக்கிவைக்க வேண்டும்.

நாம் ஒரு வீட்டிற்குள் புகும்பொழுது நாற்றமிருக்குமாயினும் அந்நாற்றத்துடன் பூமியின் கசிவுமிருக்குமாயின் அவ்விருவித அடையாளங்களும் அவ்வீட்டின் சாக்கடை சரியானஸ்திதியிலில்லை என்பதற்குப் பெரிய அடையாளங்கள். நாம் குடியிருக்கும் வாசஸ்தலங்களில் ஒவ்வோர் அறையும் எதிரும் எதிருமாக இரண்டு விசாலமான சாளரங்களிருந்தேதீர வேண்டும்.

படுக்கை அறைகள்.—நாம் இரவிற்படுத்து நித்திரைசெய்யும் அறைகளிலோ அல்லது மற்ற விடங்களிலோ அதிக அடைசல் என்பது எப்பொழுதும் கூடாது. காற்ருேட்டம் எப்பொழுதும் இருக்க வேண்டும். குளிர் காலத்திலும் பனிக்காலத்திலுங் கூடக் குளிரும் பனியும் நம்மைப் பாதிக்காதவண்ணம் நம்மைப்பாதுகாத்துக்கொண்டு காற்ருேட்டம் போதுமானவரையில் வைத்தே நாம் நமது வாசஸ்தானங்களை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். அன்றியும் அப்படுக்கை அறையிலுள்ள மெத்தை பாய் தலையணை போர்வை இவைகளை யெல்லாம் அடிக்கடி நாம் வெயிலிற் போட்டுத் தட்டி யெடுத்தும் துணிகளையும் போர்வைகளையும் உறைகளையும் தோய்த்தும் மாற்றியும் வைத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நமது வியர்வை முதலியவைகளால் நமது படுக்கை முதலியவைகள்

கெட்டு அந்நாற்றத்தால் நமது படுக்கை அறையின் வாயு விஷவாயுவாக மாறும். தூங்கும் அறைக்குள் விளக்கெரிவதாக விருந்தால் அதனுல் வெளிவிடப்படும் விஷவாயு நமது சுவாசத்துக்குச் சாதகமாகும். வாயுவுடன் கலக்காமல் அகன்று போகும் வண்ணம் அவ்விளக்கை ஒதுக்கி வைக்க வேண்டும். நாம் தூங்கும் அறையில் வண்ணுன் அழுக்குகள் அல்லது உலறுவதற்காகக் கொடிகளில் விரிக்கப்பட்ட ஈரவேஷ்டிகளிருக்கக் கூடா. நமது அறைக்குச் சமீபத்தில் விஷ விருட்சங்கள் அல்லது விஷ வாயுவைக்கக்குஞ் செடிகளிருந்தால் அவைகள் இரவிற்கக்குங் கரிமலவாயு நமது சுகத்தைக் குறைக்கும்.

வீட்டின் அமைப்பு.—நாம் கட்டிக் கொள்ளும் வீடுகளின் நான்கு பக்கங்களிலேயும் வெய்யிற் படும் படிக்கும் காற்றுச்சஞ்சார மிருக்கும் படிக்கும் கட்டிக் கொள்ள வேண்டும். நாம் வீடு கட்டிக்கொள்ள உதவாத இடங்கள் யாவையெனில், காற்றுச் சஞ்சாரமில்லாத மலைத் தாள்வரை, சந்திகள், பூமட்டத்துக் கீழேயிருக்கும் நிலவறைகள், சதுப்பு நிலங்கள், அதிக மரங்கள் அடர்ந்து வெகு நெருக்கமாய் இருக்கும் இடங்கள், நாற்றம் வெளிக்கிளம்பும் தொழில்கள் நடக்கு மிடங்கள் இவைகளே யென்று சாதாரணமாகச் சொல்லலாம்.

கரிமலவாயு.—ஓர் அறையில் அதிக ஜனங்கள் தூங்குவதாலும் அல்லது வசிப்பதாலும், இராக்காலத்தில் விளக்கு எரிவதாலும், கரிமல வாயு அதிகமாய் உண்டாகித் தலைவலி, மயக்கம் முதலிய நோய்களும் விளையும். கி-பி. 1756-ம் வருஷத்திற் கல்கத்தாவிற் சற்றேறக்குறைய 20-அடி சதுரமான ஒரு சிறிய அறையில் (Black Hole) 146-ஆங்கிலேயர் அடைபட்டுச் சுத்த ஆகாயக்குறைவால் அவர்களுள் 123-பெயர்கள் மாண்டதும், எஞ்சிய 23-பேர்கள் ஏறக்குறையப் பிரேதங்கள் போல மறுநாட்காலையில் வெளியில் அகற்றப்பட்டு எவ்வளவோ பிரயாசையின்மேற் பிழைப்பிக்கப்பட்டதும் நாம் எல்லோரும் நமது இந்துதேச சரித்திரத்திற் படித்திருக்கின்றோம்.

இவர்களுக்கு வந்த சங்கடத்தை நினைத்து நினைத்து மனம் பதைத்துக் கண்ணீர் எவ்வளவோ தடவைகளில் வடித்துமிருக்கின்றோம். இச் சங்கதியை இங்கு உதாரணமாக எழுதும் பொழுதே நமது கண்களில் நீர் ததும்புகின்றது. ஏனிவர்கள்மாண்டார்கள்? அச்சிற்றறையில் அவர்கள் சுவாசிக்கப் போதுமான காற்றில்லாமற் கரிமல வாயு அதிகரித்ததாலும் அவர்கள் மேலிருந்து வெளிக்கிளம்பிய வெப்பம் வியர்வை இந்நாற்றங்களால் அவ்வறையில் நின்ற எல்லாவாயுவும் விஷக்காற்ருய் மாறினபடியாலுமன்ருே! இவ்வளவையும் நாம் புத்தகத்திற் படித்து விட்டு இது உண்மையென்று சுகசந்தர்சன முறைகளாலு மறிந்துகொண்டு நமது கத

வுகளை நன்ருக அடைத்துக் கொண்டு நமது குஞ்சுகுழந்தைகளுடன் ஒரு சிறிய அறையில் தூங்கத் துணிவோமா?

அடுப்புக்கரிக் கணப்பு.—நீலகிரிஜில்லா ஒத்தை நகரத்திற் குளிர் காலத்தில் தேக சௌக்கியத்துக்காக அடுப்புக் கரிபோட்டுக் கணப்பு மூட்டுவதுண்டு. அடுப்புக்கரி பற்றித் தீ உண்டாகப் பிராணவாயு மிகுதியாக வேண்டியிருப்பதுடன், அத்தீப்பற்றப்பற்றக் கணப்பிலிருக்குங் கரியை விட்டுக் கரிமலவாயுவும் அதிகமாக வெளிக்கிளம்பும். காற்ருேட்டமுள்ள அறையில் இவ்வாறு கணப்பிருக்குமாயின் அது அதிகமாக தேக சௌக்கியத்தைக் கெடுக்காமல் வெப்பத்தை அளிக்கும். இவ்வாறு கணப்பு மூட்டுவதால் விஷவாயு வெளிப்படுகின்ற தென்பது நீலகிரியிற் சாதாரண ஜனங்களுக்குத் தெரியாது. 1892-ம் வருஷத்தில் ஒத்தை நகரத்தில் ஒருமடத்தில் ஒருபக்கிரி வந்து இரண்டு நாள் தங்கியிருந்தார். கண்டப்பனிக்காலமாயிருந்தபொழுது அங்கு வந்தவராகையால் ஓர் இரவு அவர் போஜனம்செய்துவிட்டு நன்ருகக் கணப்பைமூட்டித் தம்முடைய சிறிய அறையில் வைத்துக் கொண்டு காற்ருேட்டமே இல்லாதபடி எல்லாத்திறப்புக்களையும் மூடிவிட்டுச் சுகமாசச்சயனித்துக் கொண்டார். அவ்வளவு தான் அவருக்குத் தெரியும். மறுநாட் கதவு மூடினபடியே இருக்க அதிகாரிகள் ஓடி வந்து கதவை உடைத்துப் பார்க்கும்பொழுது கணப்பிலிருந்து உண்டான கரிமலவாயுவின் விஷத்தால் அவர் மாண்டார் என்று அதிகாரிகள் டாக்ட்டர்களைக் கொண்டு தீர்மானித்தார்கள். அடுப்புக் கரி போட்ட கணப்புகள் எப்பொழுதும் பிராணனுக்குச் சத்துரு. அதை மூட்டுகின்றவர்கள் வீட்டிற்கு வெளியே வைத்து அதைமூட்டி அது முற்றிலும் கரிமாறித் தணலானபிறகு வீட்டிற்குட் கொண்டுபோவது ஆரோக்கியம்.

இரவில் நாம் ஒருவீட்டில் வசிக்கும்போது நாமும் நம்மைச்சேர்ந்தவர்களும் இரண்டொருதடவை எழுந்திருந்து தேகபாதையைத் தீர்த்துக்கொள்ளவேண்டியிருக்கலாம். அவ்வாறு நேரிடும்பொழுதும் நமது உத்விருஷ்டங்களால் நமது வாசஸ்தலத்து வாயுக் கெடாதவண்ணம் ஜலம் கொட்டி அலம்பியோ அல்லது சாம்பலைக்கொட்டி மூடியோ வைக்கவேண்டும்.

நாம் தூங்கும் அறைகளில் அதிகமாகத்தட்டுமுட்டு, பெட்டி முதலிய சாமான்கள் இருக்கக்கூடா. இவைகளிருப்பின் நமது ஆரோக்கியத்துக்காக அவ்வறையிலிருக்கவேண்டிய சுத்தாகாயத்தை இவைகள் குறைப்பதுடன் இவைகளிற்சில ஸ்வற்பமாகவிருக்கும் அவ்வாகாயத்தையும் கெடுத்துவிடுகின்றன. நாம் படுத்துக்கொண்டு தூங்கும் அறையில் நமது புசிப்புக்கு என்று ஒருவித ஆகாரத்தையும் ஒருபொழுதும் வைக்கவேகூடாது.

ஏனெனில், அதுகெட்டு விஷமாய்ப்போவதுடன் நமக்கு வேண்டியகாற்றையும் கெடுக்கும். ஒருகால் தீராதவண்ணம் வைத்துக்கொள்ளும்படி சம்பவித்தால் அவ்வாகாரத்தை ஒருபாத்திரத்தில் நன்றாக மூடிவைத்து உபயோகப்படுத்தவேண்டும்.

பள்ளிக்கூடங்கள் கட்டப்படவேண்டிய விடங்கள்.—இவைகள் பெரும்பாலும் ராஜபாடைகளுக்கும் அதிக சத்தமுண்டாய்க் கொண்டிருக்கும் இடங்களுக்கும் ஒதுங்கியேயிருக்கவேண்டும். பள்ளிக்கூடத்திற் பல அறைகளிருக்குமாகையால் ஓர் அறையிலுண்டாகும் சத்தம் மற்ற அறையில் ஏகமாகக் கேட்கப்படாமலிருக்கும்படியாக ஒவ்வோர் அறையும் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். ஒவ்வொரு வகுப்பிற்கென்று ஏற்பட்டிருக்கும் அறையில் நாற்பது பிள்ளைகளுக்குமேலுட்காரக்கூடாது.

எந்தக்குழந்தைகள் சரியாகக் கவனிக்கவில்லை என்றும் அல்லது சொற்பம் மந்தமாகவிருக்கின்றார்கள் என்றும் உபாத்தியாயருக்குச் சந்தேகம் தோன்றுகின்றதோ அப்பிள்ளைகளின் தொண்டை, காது இவைகளை உடனே பரீக்ஷித்துப்பார்க்க டாக்டரைக்கொண்டு அவர் ஏற்பாடு செய்யவேண்டும். ஏனெனில் நாமினிச்சொல்லப்போகிற காரணங்களால் இவ்வியாதி சரியான வாசஸ்தலமில்லாதகாரணத்தால் விளையும் வியாதியாகவிருக்கலாம். பிள்ளைகளின் காதுகளிற் கிண்ணாரம்கொட்டுவதென்பதை உபாத்தியாயர்கள் முற்றிலும் நிறுத்தவேண்டும். ஏதாவது ஒருகொள்ளைநோய் ஒரு நகரத்திலிருக்குமாயின் அதிகாரிகள் உத்தரவுப்படி பள்ளிக்கூடத்தைச் சொற்பகாலம் மூடவேண்டும்.

வைத்தியசாலை சிறைச்சாலை முதலியவை.—ஆஸ்பத்திரி கட்டுதல், கைதிகள் அடைக்கும் சிறைச்சாலைகட்டுதலிவைகள் கட்டப்படவேண்டிய முறைகளைப்பற்றி அதிகாரிகள் சுகஸந்தர்சன முறைகளைச் சீர்தூக்கியே சில நிபந்தனைகளை உண்டாக்கியிருப்பதுமல்லாமல் அவ்வாறு அக்கட்டிடங்கள் கட்டப்படும்படியும் கட்டளைசெய்திருக்கின்றார்கள். அக்கோட்பாடுகளை நாமிங்குஎடுத்துரைப்பது அநாவசியம்.

சரியான வாஸஸ்தலமில்லாதகாரணத்தால் விளையும் நோய்கள்.

வாய்ப்புண் (Sore-troat) அல்லது தொண்டைக்கட்டு.
தொண்டைச் சதை வளர்ச்சி (Diphtheria)
சிவப்பம்மை (Scarlet fever)
இரத்த விஷ ஜன்னி (Blood poisoning)
சூசிகா வாயு ஜன்னி (Puerperal fever)
கபஜ்வரம் (Pneumonia)

கடவுள் துணை

மதுரைத் தமிழ்ச் சங்கம்.

இச்சங்கத்துத் தனித்தமிழ்ப் பரீக்ஷை.

விதிகள்.

—:o:—

I. இச்சங்கத்துச் சேதுபதிசெந்தமிழ்க்கலாசாலைப் பரீக்ஷையோடொப்ப இச்சங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் தனித்தமிழ்ப் பரீக்ஷைகள் :— பிரவேசபண்டித பரீக்ஷை, பாலபண்டித பரீக்ஷை, பண்டித பரீக்ஷை யென மூவகைப்படும். இப் பரீக்ஷைகள் அடியிற்காட்டியுள்ள விவரப்படி மதுரை, திருச்சிராப் பள்ளி, கும்பகோணம், திருநெல்வேலி, திருவனந்தபுரம், சேலம், கோயம்புத்தூர், கூடலூர், சென்னை, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இப்பன்னிரண்டு நகரங்களிலும் இவ்வருஷம் தைமீ 11, 12, 13-ம் தேதிகளில் நடைபெறும்:—

பரீக்ஷாவிஷயம் காலம் முதலிய விவரம்.

எண். பரீக்ஷாவிஷயம்.	தேதி.	காலம்.	அம்சம்.
1. இலக்கணம்	தைமீ 11வ	காலை 10-மணி முதல் 1-மணி வரை மாலை 2-மணி முதல் 5-மணி வரை	180
2. இலக்கியம்	தைமீ 12வ	காலை 10-மணி முதல் 1-மணி வரை மாலை 2-மணி முதல் 5-மணி வரை	120
3. தர்க்கம்,	தைமீ 13வ	காலை 10-மணிமுதல் மாலை $11\frac{1}{2}$ மணிவரை	60
4. செய்யுளியற்றல்,		காலை 12-மணிமுதல் $1\frac{1}{2}$-மணிவரை	60
5. வியாசமெழுதல்.		மாலை $2\frac{1}{2}$-மணிமுதல் $4\frac{1}{2}$-மணிவரை	60

II. ஷெ பரீக்ஷைகளுக்குரிய பாடங்கள் அடியில்வருமாறு :—

(i) பிரவேசபண்டிதபரீக்ஷைக்கு :—

அந்தாதிகள் 2 { திருவரங்கத்தந்தாதி. மறைசையந்தாதி.

பிள்ளைத்தமிழ் 1 மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்.

கலம்பகங்கள் 2 அழகர் கலம்பகம், மதுரைக்கலம்பகம்.

நீதிநூல்கள் 2 நாலடியார், நான்மணிக்கடிகை.*

இலக்கியங்கள் 3 2000 செய்யுள்கள் } வில்லிபாரதம் முதல் 1000 செய்யுள்கள். நைடதம் முதல் 500 செய்யுள்கள். பிரபுலிங்கலீலை முதல் 500 செய்யுள்கள்.

இலக்கணம்—நன்னூற்காண்டிகை.

யாப்பிலக்கணம் அணியிலக்கணம் } விசாகப்பெருமாளையர் இயற்றியன.*

வசனம்—பெரியபுராணவசனம் (நாவலர் பதிப்பு.)

செய்யுளிபற்றல்—வெண்பா, ஆசிரியப்பா.

வியாசமெழுதல்.

(ii) பாலபண்டிதபரீக்ஷைக்கு:—

கோவை 1—தஞ்சைவாணன் கோவை (சொக்கப்பநாவலர் உரையுடன்.)

புராணம் 3—திருவிளையாடல் முதல் 500, காஞ்சிப்புராணம் முதல் 1000, ஆரியப்புலவர் பாகவதம் முதல் 500.

சங்கச்செய்யுள் 2 { மணிமேகலை முதல் 10-காதைகள், புறநானூறு முதல் 50 செய்யுள்கள்.

நீதிநூல் 2 { திருக்குறள் முதல் 25-அதிகாரம், பன்னூற்றிரட்டு முதல் 100 செய்யுள்கள்.

இலக்கணம். { நன்னூல் விருத்தி. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியர் உரையுடன்.) அகப்பொருள்—நம்பியகப்பொருள். யாப்பு—யாப்பருங்கலக்காரிகை. அணி—தண்டியலங்காரசாரம்.

---

* இக்குறியிட்ட நூல்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விலைக்குக் கிடைப்பன.

தர்க்கம்—தர்க்கசங்கிரகம்.

செய்யுளியற்றல்—வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.

வியாசமெழுதல்.

(iii) பண்டித பரீக்ஷைக்கு:—

கோவை—திருக்கோவையார். (உரையுடன்)

இலக்கியம். { இராமாயணம் முதல் 1000 செய்யுள்கள், பெரிய புராணம் முதல் 1000, கந்தபுராணம் முதல் 1000

சங்கச்செய்யுள். { பத்துப்பாட்டு–[மதுரைக்காஞ்சி] சிலப்பதிகாரம் முதல் 10-காதைகள், சிந்தாமணிநாமகளிலம்பகம்.

நீதிநூல்—திருக்குறள். (அறத்துப்பால், பொருட்பால்.)

பரணி—கலிங்கத்துப்பரணி.

இலக்கணம். { தொல்காப்பியம்,—[எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்), சொல்லதிகாரம் (சேனாவரையம்), அகத்திணையியல்] புறப்பொருள்வெண்பாமாலை

யாப்பு—இலக்கணவிளக்கப்பாட்டியல்.

அணி—தண்டியலங்காரம். (சுன்னாகம் அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் புதுக்கியது.)

தர்க்கம்—அன்னம்பட்டீயம்.

செய்யுளியற்றல்—பாவும், பாவினங்களும்.

வியாசமெழுதல்.

III. இப்பரீக்ஷைவிஷயங்களில் மொத்தத்தில் 100-க்கு 60 அம்சம் வாங்குவோர் முதல் வகுப்பினராவர்; மேற்கூறியவாறே 100-க்கு 40 வாங்குவோர் இரண்டாவதுவகுப்பினராவர். இத்தரம் எல்லா வகுப்புப் பரீக்ஷைகளுக்கு மொக்கும்.

IV. ஷை வகுப்புப் பரீக்ஷை ஒவ்வொன்றிலும் 1-வது வகுப்பினராய்த் தேறிய முதன் மூவர்க்குமட்டும் அடியிற் காட்டிய விவரப்படி பரிசு அளிப்பதுடன் பரீக்ஷையில் தேறிய அனைவருக்கும் சங்கத்தாரால் யோக்கியதாபத்திரங்கள், அக்கிராசனாதிபதியவர்கள் கையொப்பத்துடனும் சங்க முத்திரையுடனும் அனுப்பப்பெறும்.

ஷை பரீக்ஷைகளில் தேறியவர்கள்விவரம் அடுத்தவருஷம் சித்திரைமீ 1-உக்குப்பின் சங்கத்தினின்று வெளிவரும் "செந்தமிழ்"ப் பத்திரிகையிற் பிரசுரிக்கலாகும்.

பரிசின் விவரம்.

எண்	முதற்றரத்தினராய்த் தேறிவர்கட்கு	1-வது பரிசு ரூ		2-வது பரிசு ரூ		3-வது பரிசு ரூ
1	பிரவேசபண்டித பரீக்ஷையில்	50	பெறத்தக்க தங்கப்பதக்கம்	30		20
2	பாலபண்டித பரீக்ஷையில்	70	ஷை	50		30
3	பண்டித பரீக்ஷையில்	100	பெறத்தக்க தங்கத்தோடா	70	பெறத்தக்க தங்கப்பதக்கம்	50

V. பிரவேசபண்டித பரீக்ஷைக்கு 1 ரூ. வீதமும், பாலபண்டிதபரீக்ஷைக்கு 2 ரூ. வீதமும், பண்டித பரீக்ஷைக்கு 3 ரூ. வீதமும் ஒவ்வொருவரும் செலுத்தவேண்டியதாகக் கட்டணத்தொகை விதிக்கப்பெற்றுள்ளன. இத்தொகையை இச்சங்கம் மானேஜ்மெண்டு ஆபீசுக்கு விண்ணப்பத்துடன் அடுத்த கார்த்திகைமீ 15-உக்குள் மணியார்டர்மூலம் அனுப்பல்வேண்டும்.

VI. ஷை பரீக்ஷைகளிற் கீழ்ப்பரீக்ஷை தேறியே மேற்பரீக்ஷைக்கு வரவேண்டுமென்ற நியதியில்லை. ஆனால் ஒரு பரீக்ஷையில் தேர்ந்தவர் அதே பரீக்ஷைக்கு மறுமுறையும் வரல் கூடாது.

VII. பரீக்ஷாகாலத்திற் பெண்பாலர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் தனித்தே செய்து கொடுக்கப்பெறும்.

VIII. இப்பரீக்ஷை விஷயத்தில் அன்புடன் வேண்டிய உதவி புரிந்துவருமாறு இச்சங்கத்து வித்துவான்கள் வேண்டப் பெறுகிறார்கள்.

இங்ஙனம்,

பொ. பண்டித்துரை,

அக்கிராசனாதிபதி.